தர்தல் ஸ்பெஷல்!

கல்கி

KALKI 5.9.99 ரூ. 4.50



சுஷ்மா Vs சோனியா


– நேரடி ரிப்போர்ட்





தமிழக தேர்தல் களங்கள்

– ஸ்பெஷல் ரிப்போர்ட்



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



16,காமராஜ் சாலை,பழையபெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம்,சென்னை-600063.
Tel&FAX : 2376129,Cell Ph : 9841050464
E-mail: sspeetam@md3.vsnl.net.in
& sspeetam@hotmail.com
WEB SITE: www.intamm.com / sspeetam

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, வசதியற்ற, திக்கற்ற 75 மாணவர்களும் 25 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்த்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியை செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

காலை சிற்றுண்டி (100 பேருக்கு)	ரூ.	750/-
மதிய உணவு (இனிப்புடன்)	ரூ.	1,500/-
இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	500/-
ஒரு மாணவனுக்கு ஓரண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	6,000/-
குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	75,000/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

உங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு Cheque/DD/MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு

இறைவன் தொண்டில்
சுவாமி சர்வாத்மானந்தர்.



நூற்றாண்டு நாயகரின் சிறப்பிதழ்தான்!

- ரூ. 25,000 பரிசு பெறும் நாவல் மற்றும்
  ரூ. 10,000 பரிசு பெறும் மினித் தொடர் ஆரம்பம்
- ரூ. 10,000 பரிசு பெறும் இசைப்பாடல்
- ரூ. 10,000 பரிசு பெறும் பயணக் கட்டுரை
- ரூ. 5,000 பரிசு பெறும் கல்கி கலெக்ஷன்

வாசகர் விமர்சனம்... போட்டி முடிவுகள் முழு விவரம்

சிறப்புப் பகுதி:

நூற்றாண்டு நாயகர் அமரர் கல்கி குறித்த அரிய விஷயங்கள்

அடுத்த இதழ்





கலைஞர் – மூப்பனார்

கலந்து கொள்ளும்
அஞ்சல் தலை வெளியீட்டு விழா,
நூற்றாண்டு விழா அழைப்பிதழ்

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

ஜாதிக்கொரு வேட்பாளர்!



கோயில் நகரம் மதுரையின் மையத்து நான்கு வீதிகள்போல் நான்கு வேட்பாளர்கள் ஆளுக்கொரு திக்கில் இழுக்கிறார்கள்! தி.மு.க.வில் முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம். அ.தி.மு.க. அணியில் மார்க்சிஸ்ட் வேட்பாளர் மோகன், த.மா.கா.வில் முன்னாள் எம்.பி. ராம்பாபு. அப்புறம் சுப்பிரமணியம்சுவாமி.

மதுரை கிழக்கு, மதுரை மேற்கு, மதுரை மத்தி, சமயநல்லூர், திருப்பரங்குன்றம், மேலூர் என ஆறு சட்டமன்றத் தொகுதிகளில் கடைசி மூன்றில் விவசாயமே பிரதானத் தொழில். மற்றவை நகர்ப்புற ஏரியா.

"கிராமப்புற வோட்டெல்லாம் இரட்டை இலைக்கே. அதுபோல் நகரங்களில் எங்களுக்கே கூடுதல் வரவேற்பு!" என்கிற உற்சாகத்துடன் அரிவாள் சுத்தியலைத் தாங்கி உலாவருகின்றனர் மார்க்சிஸ்ட் கட்சியினர். "அம்மா வந்தப்போ எம்மாம் கூட்டம் தெரியுமா? மதுரையே ஆடிப் போச்சுல்ல!" என்கிற சிலாகிப்பு ரொம்பக் கூடுதல்.

மதுரை மாநகரின் பிரதான சாலைகளிலெல்லாம் பத்தடிக்குப் பத்தடி தி.மு.க. இளைஞரணிப் பந்தல். முழக்கமிடும் இயக்கப் பாட்டு. சில சமயங்களில் எம்.ஜி.ஆர். பாட்டும் கூட. 'அஞ்சா நெஞ்சன் மு.க. அழகிரி' புகைப்படம் ஒட்டிய ரிக்ஷாக்களும், 'டாடா சுமோ'க்களும் இல்லையெனலாம். கூடவே அதிருப்தியும் தலைகாட்டுகிறது. மாவட்டச் செயலாளர் காவேரி மணியனும் மாவட்ட கூட்டுறவு வங்கி சேர்மன் ஏ.ஆர். சங்கரனும் இத்தொகுதியைத் தங்களுக்குக் கேட்க, சபாநாயகர் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன், செ.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ.வுக்குக் கேட்க, மதுரையின் இளைய தனபதி மு.க.அழகிரி கொடுத்த பிரஷ்ஷரின் பேரில் திண்டுக்கல் அல்லது பெரியகுளம் தொகுதியைக் கேட்டுக் காத்திருந்த பொன்முத்துராமலிங்கத்தை இழுத்துக் கொண்டு வந்து மதுரையில் நிறுத்தியதால், ஒரு வாரத்திற்கு மேல் கழகத்தவர்கள் வேலையே செய்யவில்லையாம். பி.டி.ஆர். குரூப் அப்படியே அப்செட். கடைசியில் மு.க. அழகிரி பார்த்த பார்வையில் 'கட்சி மேலிட நடவடிக்கை பயமுறுத்தல்' நிமித்தம் இப்போது தொண்டர்கள் ஓட்டமாய் ஓடுகிறார்கள்!

ம.தி.மு.க.வுக்குச் சென்று வந்த பொன்முத்துவுக்கு இப்போது சீட் கொடுத்ததில் கட்சி உறுப்பினர்களுக்கும் வருத்தம். உள்ளூரிலேயே ஆளுங்கட்சிப் பிரமுகராய் - தலைமைக்கு நெருக்கமாய் இருந்தும் எவருக்கும் எதுவும் செய்யாதது கூடுதல் அதிருப்தியாம்!

சுப்பிரமணியம் சுவாமி தமது சாதனைகளை(!?) விளக்கி என்பது பக்க மலரே வெளியிட்டிருக்கிறார். நூலகம், ஊராட்சி ஒன்றியங்களிலெல்லாம் கேட்பாரற்றுக் கிடக்கிறது அந்த மலர்!

"ஐந்து ஆண்டுகள் ஆட்சி செய்யத் தகுதியில்லாததால் பி.ஜே.பியைக் கவிழ்த்தோம். அது ஆட்சி செய்திருந்தால் ரஷ்யா போல இந்தியாவும் சிதறிப் போயிருக்கும். இங்கு போட்டியிடும் வேட்பாளர்களில் தேர்தலில் நிற்கவே தகுதியுள்ளவன் நான் மட்டும்தான். பதின்மூன்று மாத காலத்தில் மதுரையை சர்வதேச நகரமாக்குவதற்கான வேலையைச்

செய்துள்ளேன்!" என்கிற சுவாமியின் பேச்சைக் கேட்க கூட்டம் கூடுகிறதோ என்னவோ ஆரத்தி தட்டுகளுடன் அவரை வரவேற்கப் பெண்கள் கூடி விடுகின்றனர். 'தட்டுக்கு நூறு ரூபாய்' விழுந்தால் விடுவார்களா?

"இதெல்லாம் சுவாமியின் ஸ்டண்ட் சார். எந்த ஏரியாவுக்குப் போகிறாரோ அங்கிருக்கும் முக்கிய பிரமுகரை முந்தின நாளே அழைத்து 'கவனித்து' விடுகிறார். அவர் தயாரிக்கும் ஆரத்தித் தட்டுகள்தான் இவை!" என்றார் ஒரு த.மா.கா. தொண்டர். சைக்கிளில் பவனி வரும் ராம் பாபுவும் பிரகாசமாகத்தான் தெரிகிறார், பிரசாரத்தில்! வோட்டுக்குத் தன்னின சௌராஷ்டிர மக்களையே நம்பியிருக்கிறார். அவர்களில் ஒரு லட்சம் வோட்டுத் தேறுமாம்.

"அதெல்லாம் கிடையாது. இன்று சௌராஷ்டிரா அறக்கட்டளைத் தலைவர் எங்கள் வேட்பாளரைச் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார். அதனால் அவர்களின் வோட்டு எங்களுக்கே!" என்கிறது தி.மு.க. வட்டாரம்.

"இந்தப் பிரசாரமும் பொய். முன்பு கொலையுண்ட எங்கள் தோழர் லீலாவதி சௌராஷ்டிரா. அந்த அனுதாபம் - குறிப்பாகப் பெண்களுக்கு எங்கள் மீதே உள்ளது. அதனால் அந்த வோட்டும் எங்களுக்கே. அப்படி ராம்பாபுவுக்கே போனாலும் பாதகமில்லை. ராம்பாபு வோட்டைப் பிரிப்பது எங்கள் வெற்றிக்கே!" என்கிறார்கள் மார்க்சிஸ்ட்டுகள்.


"போன தேர்தலில் தனிப்பட்ட முறையில் மார்க்சிஸ்ட்டுகள் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் வோட்டுக்கள் வாங்கினது இதன் காரணமாயிருக்கலாம். அந்த அலை இப்போது இல்லை!" என்பது தி.மு.க.வினரின் கருத்து. "அந்த 'அலை' இல்லையென்றால் லீலாவதி படுகொலைச் சம்பவம் விசாரணையில் இருக்கும்போது, அவர் புகைப்படத்தையோ அவர் பற்றிய தியாகத்தையோ பிரசாரத்தில் பயன்படுத்தக் கூடாது என ஏன் தி.மு.க.வினர் 'கலெக்டரிடம்' மனு கொடுக்க வேண்டும்?" என்று எதிர்க்கேள்வி கேட்கிறது சி.பி.எம்.

யின் வேகத்திற்கு ஈடுகொடுக்கவே செய்கிறது. 'ஆட்சிக் குளறுபடிகள் பிஜேபி ஆட்சியில் ஆஸ்திரேலிய மிஷனரி ஊழியரும் அவரது குழந்தைகளும் கொலை, கன்னியாஸ்த்ரீகள் பலாத்காரம், மதவாத சக்திகளின் ஆட்டம் என வீதிவீதியாய் நாடகங்கள், தப்பாட்டம் நிகழ்த்தி அசரவைக்கின்றனர்! 'வெற்றி முரசு' என்று இரண்டு பிரசாரக் கேஸட்கள் நகரெங்கும் ஒலிக்கின்றன.




• மோகன்

சு. சுவாமி, தமது சாதனைகளைச் சொல்லி வாக்குக் கேட்பது பற்றி மார்க்சிஸ்ட் வேட்பாளர் மோகனிடம் கேட்டோம்.



• ராம்பாபு

"அவர் சாதனை எங்கே சார்? வெறும் சோதனைதான். உங்களுக்குத்தான் தெரியுமே. உள்ளாட்சி வேலைகளையெல்லாம் இவர் செஞ்சதா காட்டிட்டு வர்றார். போதாக்குறைக்குக் 'கோ-கோ-கோலா' கம்பெனியை மதுரைக்கு நான்தான் கொண்டு வந்தேங்கறார். நல்லவேளை மதுரை மீனாட்சியம்மனையே இங்கே கொண்டு வந்தது நான்தான்னு சொல்லாம விட்டாரே!" என்றார்.



• பொன் முத்துராமலிங்கம்

இவர் ஏற்கெனவே மூன்று முறை இதே தொகுதியில் போட்டியிட்டுத் தோற்றவர். "இம்முறை வெற்றி உறுதி!" எனப் புள்ளி விவரம் காட்டுகிறார்.

இவரையும், தி.மு.க. அணியினரையும் பொறுத்தவரை சு. சுவாமி போட்டியில் காத தூரத்தில் இருப்பவர். மக்கள் மத்தியில்?

"அவர் எங்கே சார்? ஜெயிச்சுப் போனவர் டெல்லியிலேயே குழப்பிக் கொண்டிருந்தாரே. இங்கே வர ஏது நேரம். தொகுதியைப் பொறுத்தவரை அவர் செஞ்ச சாதனை எங்க ஊர் இட்லிக் கடையில் பூட்டை உடைத்துத் திறந்த சாதனைதான்!" என்கிறார்கள்.

கட்டுரைத் தொகுப்பு :
கா. சு. வேலாயுதன்



தொகுதியில் மார்க்சிஸ்டுகளின் பிரசாரம் மு.க. அழகிரி

தேர்தல் '99 — பெல்லாரியில்

வெங்காய பூமியில் ஒரு விறுவிறுப்பான மோதல்!

பெல்லாரியிலிருந்து பெங்களூர் போகும் சாலையில் பதின்மூன்றாவது கி.மீ.யில் இருக்கிறது ஹோலகுண்டே கிராமம். மெயின் ரோட்டிலிருந்து கிராமத்திற்குப் பிரியும் சந்திப்பில் உள்ள வளைவில் பா.ஜ.க. கொடிகள், படபடத்துக் கொண்டிருக்கின்றன. வேட்பாளர் சுஷ்மா ஸ்வராஜ் காலை ஒன்பது மணிக்கே வாக்கு கேட்க வந்திருக்க வேண்டும். ஆனால் பத்தை நெருங்கிக் கொண்டிருந்தும் அவரைக் காணோம். ஆண்களும் பெண்களுமாக இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் குழுமி நிற்கிறார்கள். கிராமத்தில் சாம்பிளுக்குக் கூட ஒரு காங்கிரஸ் கொடி இல்லை.

"இந்தக் கிராமத்தில் உள்ள மொத்த பேரும் பா.ஜ.க. ஆதரவாளர்களா?" என்று சிவகுமார் கௌடாவின் வாயைக் கிளறினோம். நம்மை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்த கௌடா, "காங்கிரஸ் கட்சியை நம்பி ஏமாந்த கிராமங்களில் எங்கள் கிராமமும் ஒன்று. எந்தவிதமான அடிப்படை வசதியும் காங்கிரஸ் ஆட்சியில் கிடைக்கவில்லை. கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர்தான் கிராமத்தில்

• சுஷ்மா பிரசாரத்தில் ஏக கூட்டம்...





• பெண்களின் தோள்களில் கைபோட்டுக் கவர்கிறார் சுஷ்மா.

பெரும்பாலோர் பா.ஜ.கவுக்கு மாறிவிடுவது என்று தீர்மானித்தோம். இன்றைக்கு நமது நாட்டில் வாஜ்பாயை விட உயர்ந்த தலைவர் உண்டா?'' என்று சிலாகித்து மெய்சிலிர்க்கிறார்.

நமது உரையாடலைக் கவனித்துக் கொண்டிருந்த ஸ்வர்ணம்மா, "இங்கே பெண்களுக்கு இயற்கையின் உந்து தலைச் சமானிக்கக் கழிப்பிடம் கிடையாது. காலையில் தலை மறைவாக ஒரு கி.மீ. நடக்க வேண்டும். தண்ணீர்த் தொட்டி உண்டு. ஆனால் தண்ணீரில்லை. காரணம் பெரும்பாலும் மின்சாரம் இருக்காது. இதெல்லாம் ஒரு பக்கம் இருக்க, சோனியாவுக்குத் தேர்தலில் போட்டியிட என்ன அனுபவம் இருக்கிறது?'' என்று சூடாகக் கேட்கிறார்.

ஆனால் பார்வதம்மா சொன்னது கொஞ்சம் வித்தியாசமாக இருக்கிறது. "சோனியா இந்தியாவுக்கு விதேசி (அந்நியர்) என்றால் சுஷ்மாவும் இந்தத் தொகுதிக்கு விதேசிதானே. இவர்களில் யார் ஜெயித்தாலும் தில்லியில்தானே உட்கார்ந்து கொள்ளப் போகிறார்கள். நமக்கு என்ன பயன் இருக்கு?'' என்றார் பார்வதம்மா.

சுற்றியிருக்கும் கூட்டம் அவரது அபிப்ராயத்தை ரசிக்கவில்லை என்பது அவர்கள் முகங்களிலிருந்து தெரிகிறது. அதற்குள் சுஷ்மாவின் கார் ஊர்வலம் வருவது தொலைவில் தெரிகிறது. வேகமாக வரும் காண்டசாவில் இருக்கிறார் சுஷ்மா. வளைவில் திரும்பி ஊர் நடுவில் போய் நிற்கிறது, சுஷ்மாவின் கார்.

பெரிய வட்டக் குங்குமம் நெற்றியில் பளபளக்க கண்ணியமிக்க நாரீமணியாகத் தோற்றம். ஈஸ்வரன் கோயிலின் முன்னே மேஜை, நாற்காலி போட்டிருக்கிறார்கள். பிரசார ஊர்தியிலிருந்து மைக்கை எடுத்துப் பேசுகிறார். ஐந்து நிமிடப் பேச்சு; சுத்தமான கன்னடத்தில்.



• மேளதாளத்துடன் சுஷ்மாவுக்கு வரவேற்பு...



• கொண்டையா

பிரமிக்கிறார்கள் கிராம மக்கள்.

''சோனியாவுக்கு என்ன தெரியும்? அவருக்கு அரசியல் அனுபவம் உண்டா? பாராளுமன்ற அனுபவம் உண்டா, அல்லது தேசப்பற்றுதான் உண்டா? எல்லாமே சொன்னு, சொன்னு, சொன்னு! (பூஜ்யம்!) பங்களாதேஷ் போரின் போது இத்தாலி தூதரகத்தில் போய் உட்கார்ந்து கொண்டவரல்லவா அவர். நான் உங்களில் ஒருத்தி. கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருவேன்!''

– சுஷ்மாவின் பேச்சுக்குள் மின்சார ஓட்டம் இருக்கிறது. மக்கள் மனத்தில் பதிந்து விடும் பேச்சு. கூட வரும் பிரமுகர்கள் முகத்தில் திருப்தி தெரிகிறது. சுஷ்மாவின் கான்வாய், அடுத்த கிராமமான குடே கோடேவுக்கு விரைகிறது. கூடவே, வட்டார, மாநில, தேசிய, சர்வ தேச பத்திரிகையாளர்களும் விரைகிறார்கள்.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர் பெல்லாரி. வெங்காய பூமியான இது, இன்று சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்துள்ள தொகுதி. சோனியா காந்தி மட்டும் இங்கே போட்டியிடாவிட்டால், மற்ற சாதாரண தொகுதிகளைப் போல இதுவும் பேசப்படாமல் போயிருக்கும். சோனியா போட்டியிடுவது மட்டுமல்லாமல் அவருக்கு எதிராக பா.ஜ.க. சுஷ்மாவை களத்தில் நிறுத்தியது இன்னமும் விறுவிறுப்பைக் கூட்டி உஷ்ணத்தை ஏற்படுத்தியிருக்கிறது. சென்ற மாதம் ஒருமுறை பொதுக் கூட்டத்தில் பேசிவிட்டு, மனுதாக்கல் செய்ததோடு சரி; அப்புறம் வாக்காளர்களைச் சந்திக்க சோனியாவுக்கு ஒரு வார காலத்துக்கு மேலானது.


ஆனால் சுஷ்மா தினசரி காலை பத்து மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை கிராமம், கிராமமாகச் சென்று வாக்காளர்களைச் சந்திக்கிறார். அதற்கு மேல் இரவு பத்து வரை பொதுக்கூட்டம். பெல்லாரி நகரத்தில் எந்த இடத்திலும், காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க.வின் போஸ்டரோ, கொடிகளோ, பேனரோ அல்லது கட்–அவுட்டையோ அதிகமாகக் காண முடியவில்லை. இரு வி.வி.ஐ.பிக்கள் மோதும் தொகுதியில் உள்ள முக்கியமான இந்த நகரிலேயே வாக்குப் பதிவுக்கு ஒரு வாரம் முன் வரை இதுதான் நிலை.

''அனைத்து மீடியாக்காரர்களும் இங்கு இருப்பதால் பெல்லாரி நகரத்தைப் பொறுத்த வரை கொடிகள், போஸ்டர் இல்லாமல் எல்லாக் கட்சியினரும் கொஞ்சம் அடக்கியே வாசிக்கிறார்கள். கூடவே தேர்தல் கமிஷன் பார்வையாளர்களின் கழுகுக் கண்கள் வேறு'' என்று சொல்கிறார் சுரேஷ். பா.ஜ.க.வின் மாணவர் அமைப்பான ஏ.பி.வி.பி.யின் அமைப்பாளரான இவர், தேர்தல் வேலைக்காக பெங்களூரில் இருந்து வந்திருக்கிறார். இவரைப் போலவே மாநிலம் முழுவதும் இருந்து நூற்றுக்கணக்கான ஆர்.எஸ்.எஸ். முழுநேர ஊழியர்கள் சுஷ்மாவுக்காக பிரசாரம் செய்ய பெல்லாரி தொகுதியில் பரவலாக இறக்கி விடப்பட்டிருக்கிறார்கள்.

காங்கிரஸைப் பொறுத்தவரை குலாம்நபி ஆசாத்துக்கு தூக்கமில்லாத இரவுகள்தான். இரவு பதினொரு மணிவாக்கில் கூட யாரையோ தேடிக் கொண்டு சுமோவில் பெல்லாரி சந்துகளில் இவர் அலைவதை நாமே பார்த்தோம். இவரைத் தவிர 1998 பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் நின்று வென்ற கொண்டையா மூளையாக இருந்து உத்திகளை வகுக்கிறார். பாதுகாப்பு காரணமாக சோனியா கிராமம் கிராமமாகச் செல்ல முடியாத நிலையில் ஜீப்பில் ஆள் உயர சோனியா கட்–அவுட்களுடன் பிரசாரம் செய்யப்படுகிறது.

பெல்லாரி நகரில் இந்துசேகர் என்ற பா.ஜ.க. பிரமுகரின் இல்லத்தில்தான் சுஷ்மாவின் தேர்தல் அலுவலகம் இயங்குகிறது. முற்றிலும் கம்ப்யூட்டர்மயமாக்கப்பட்ட அலுவலகம். "I will change the face of Bellary" என்று சுஷ்மா சொல்வது போன்ற வாசகங்கள் கொண்ட போஸ்டர்கள். வருபவர்களுக்கு தங்கு தடை இல்லாமல் தேநீர் உபசரிப்பு நடந்து கொண்டிருக்கிறது. மீடியாவைக் கவனிக்கும் பிரதீப், 'வாஷிங்டன் போஸ்டிலிருந்து உள்ளூர் சஞ்சைவாணி வரை' எல்லா பத்திரிகையாளர்களையும் பாரபட்சமின்றி உபசரித்து தேவைகளைக் கேட்டறிகிறார்.

சுஷ்மா, தாம் தங்கியிருக்கும் நட்சத்திர ஓட்டலான போலோ பாரடைஸிலிருந்து அலுவலகத்துக்கு வந்துதான் பிரசாரத்தைத் துவக்குகிறார். அவர் அலுவலகத்திற்கு வந்ததும் பரபரப்பு பற்றிக்கொள்கிறது. காரிலிருந்து இறங்கியதும், ''நமஸ்காரா... நமஸ்காரா...'' என்று அனைவருக்கும் வணக்கம் சொல்கிறார். கட்சிப் பெண் பிரமுகர்களைத் தோளில் கை போட்டு அணைத்துக் கொள்கிறார். சிலர் அவர் காலைத் தொடுகிறார்கள். ''ஹே–பகவான்!'' என்று அவர்களைத் தடுக்கிறார். பார்வையில்லாத துர்க்கப்பாவுக்கு உதவும்படி கட்சிப் பிரமுகர்களிடம் கூறுகிறார். கர்னூல்





300 ரூபாய்களுக்கு கே.வி.ஆர் ஆர்ட் கோர்ஸ் ஃப்ரீ

இதை இலவசமாக பெறும் அதிர்ஷ்டசாலிகள் 50,000

சுலபமாக படம் வரைய கற்றுத்தரும் சிம்பிள் ஆர்ட் கோர்ஸ் இது

இப்படி, இப்படி, இப்படி



இப்படி, இப்படி, இப்படி

1 ல் இருந்து 12 எண்களில் படம்

சித்திரம் வரைவது சிலருக்கு ஹாபி. சிலருக்கு அது தொழில். எந்த வயதிலும் வீட்டிலிருந்தபடியே சுலபமாகக் கற்றுக் கொள்ள முடியும். 300/– ரூபாய் மதிப்புள்ள இந்த கோர்ஸ் இலவசமாகத் தரப்படும். விளம்பரத்திற்காக இவ்வாறு கோர்ஸ்களை ஃப்ரீயாக அளிப்பதில் கே.வி.ஆர் ஒரு ரெக்கார்டை ஏற்படுத்தியுள்ளது. மற்றவர்கள் எவரும் இவ்வாறு அளிப்பதில்லை. அதனால் உடனே இதை உபயோகித்துக் கொள்வதில் ஆர்வம் காட்டுங்கள். இந்த நல்ல வாய்ப்பை உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள்.


5 கோர்ஸ்கள்

1. ஈஸி டிராயிங் கோர்ஸ்
2. ஈஸி கார்ட்டூன் கோர்ஸ்
3. ஈஸி அனாடமி கோர்ஸ்
4. ஜாமெட்ரிகல் ஆர்ட் கோர்ஸ்
5. கமர்ஷியல் ஆர்ட் கோர்ஸ்

5 கோர்ஸ்கள்

இந்த கோர்ஸ்கள் ஃப்ரீ

இனி உங்கள் வீட்டில் அனைவரும் சுலபமாக படம் வரையலாம்





இந்த ஃப்ரீ கோர்ஸை தினமும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு அனுப்ப வேண்டியிருக்கும். அதனால் இந்த ஃப்ரீ கோர்ஸ் உங்களை வந்தடைய குறைந்தது 10 நாட்கள் நீங்கள் காத்திருக்க வேண்டி இருக்கும்.

கே.வி.ஆர். சிம்பிள் ஆர்ட் கோர்ஸ் தனித்துவம்

• எவராலும் சுலபமாக படம் வரைய கற்றுக்கொள்ளமுடியும். "டிரிக் ஃபோட்டோ கிராபியைப் போல • டிரிக் டிராயிங்" கிற்கான சூட்சுமங்கள் • ஹாபி, பணம், புகழ், பெருமை, அனைத்தும் கிட்டும். • மொத்தம் 5 ஆர்ட் கோர்ஸ்கள் அடங்கிய ஆர்ட் கோர்ஸ் பேக்கேஜ் இது.

இலவசமாக இவ்வாறு கோர்ஸை பெற்றுக் கொள்ளுங்கள்

• இந்த பத்திரிகையிலுள்ள கூப்பனில் உங்களது விவரங்களை எழுதி அனுப்புங்கள். • ஜெராக்ஸ் மற்றும் கார்டுகளின் மீது எழுதியவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. • ஒரு கோர்ஸை இலவசமாக பெற ஒரு கூப்பனை அனுப்பவும். • உங்களுடைய நண்பருக்குத் தாகிருப்பினால் மற்றொரு பத்திரிகையை வாங்கி, அந்தக் கூப்பனை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். • கவர் மீது 3ரூ ஸ்டாம்பை தற்பொழுதைய விலைமதிப்பின்படி ஒட்டவேண்டும். • கூப்பனில் உள்ள நியமம், நிபந்தனைகளின் படி இந்த ஃப்ரீ கோர்ஸ் அளிக்கப்படும். • முதலில் அனுப்பும் 50 ஆயிரம் பேருக்கே இது அளிக்கப்படும். • இந்த கோர்ஸ் முழுவதும் இலவசம். ஆனால் இதை பெற்றுக்கொள்ளும் செலவுகளை நீங்களே ஏற்க வேண்டும்.

கூப்பனை பூர்த்தி செய்து உடனே அனுப்பவும்

K.V.R. INSTITUTE 376

(Tamil Free Art Course Scheme)

P.B. No. 1020, 77. Habibullah Road, T. Nagar, Chennai - 17.

எனக்கு ரூ. 300 விலை மதிப்புள்ள கே.வி.ஆர். ஈஸி டிராயிங் கோர்ஸ், ஈஸி கார்ட்டூன் கோர்ஸ், ஈஸி அனாடமி கோர்ஸ், ஜாமெட்ரிகல் ஆர்ட் கோர்ஸ், கமர்ஷியல் ஆர்ட் கோர்ஸ் பேக்கேஜை ஃப்ரீயாக அனுப்பவும். தபால் செலவு + பேக்கேஜ் + ஃபார்வார்டிங் + விளம்பரச் செலவுகளுக்கு ரூ 100ஐ தபால்காரரிடம் செலுத்தி எனது ஃப்ரீ கே.வி.ஆர் சிம்பிள் மொத்தம் இந்த 5 கோர்ஸ்களின் 'சிம்பிள் ஆர்ட் கோர்ஸ்' பாக்கெட்டை பெற்றுக் கொள்வேனென்று உறுதியளிக்கிறேன். இந்த ஃப்ரீ கோர்ஸ் வாய்ப்பளித்ததற்காக உங்களுக்கு நன்றி.

(உங்களது விலாசத்தை நன்கு புரியும்படியாக ஆங்கிலத்தில் எழுதவும், இல்லாவிடில் கோர்ஸை அனுப்ப முடியாது)

Name ....

Address ....

....

.... Pincode | | | | | | |



• வேட்புமனு தாக்கல் செய்யும் சோனியா

பெல்லாரி நகர்ப் பகுதிகளில் பா.ஜ.க.வின் செல்வாக்கு கண்கூடாகத் தெரிகிறது. யாரைக் கேட்டாலும், 'சுஷ்மாவுக்கு இந்த முறை போட்டுப் பார்க்கலாமே' என்கிறார்கள். ஆனாலும் சுற்றிலுமுள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களில், காங்கிரஸ் மீது இன்னமும் பாசம் (குறிப்பாக இந்திரா காந்தி!) இருப்பதாக பா.ஜ.க.காரர்களே ஒப்புக் கொள்கிறார்கள்!

(ஆ.பி.) பகுதியில் இருந்து, மிகப் பெரிய பா.ஜ.க. கொடியுடன் பிரசாரத்திற்கு சைக்கிளில் வந்திருக்கும் நாகராஜிடம், "கித்னா படா ஜண்டா?" என்று வியக்கிறார். பிரம்ம குமாரிகள் ரக்ஷா பந்தன் கட்டி விடுகிறார்கள். கடப்பாவிலிருந்து வந்திருக்கும் தொண்டர்களிடம், "உங்கள் தொகுதியில் அவரைத் (சோனியா) தோற்கடிக்கும் வாய்ப்பை இழந்து விட்டீர்களே!" என்று சொல்கிறார்.

சுஷ்மாவின் அரைமணி நேரக் கன்னடப் பேச்சு, 'போர் முழக்கம்' என்று தலைப்பில் கேசட்டாக வெளியிடப்பட்டு கிராமங்களில் மக்கள் மனத்தைத் தொட்டுக் கொண்டிருக்கிறது.

"எந்த தைரியத்தில் சோனியாவை எதிர்த்து நிற்கிறீர்கள்?" என்று பலர் கேட்கிறார்கள்.

"நமது மக்கள் மீது உள்ள நம்பிக்கைதான் எனது பலம். அடுத்த பலம் எனது கட்சி; பலன் எதிர்பாராது உழைக்கும் எங்கள் தோழர்கள்; கூட்டணிக் கட்சிகள். வெற்றி எட்டும் தொலைவில்தான் இருக்கிறது. எல்லா மக்களையும், எல்லா நேரமும் காங்கிரஸ் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. இந்தத் தேர்தலோடு சோனியாவின் அரசியல் வாழ்வு முடிந்துவிடும்" என்று ஆவேசமாகச் சொல்கிறார் சுஷ்மா.

தில்லியிலிருந்து ஏராளமான சுஷ்மா ரசிகர்கள் பிரசாரத்திற்கு வந்திருக்கிறார்கள். அனைவரது பேரையும் சொல்லி, "எப்ப வந்தீங்க?" என்று ஆவலுடன் விசாரிக்கிறார். காண்டசா காரில் செல்லும் சுஷ்மாவுடன் பிரசார ஊர்தியும் (டாட்டா மொபைல் வேன்) செல்கிறது. கிராமத்தை நெருங்கியதும் வேனில் மாறிக் கொள்கிறார்.

பா.ஜ.க. கடைசி நேரத்தில் தொகுதி முழுக்க பணத்தை அள்ளி விடும் என்று சொல்கிறார்கள் காங்கிரஸ் பிரமுகர்கள். "சுற்றியுள்ள கிராம மக்களிடம் பணத்தைக் காட்டி வாக்குகளைப் பறிக்கும் வழக்கம் இந்தத் தொகுதியில் உண்டு; குறிப்பாக ஊரிலுள்ள முக்கியப் பிரமுகரிடம் பேச்சு வார்த்தை நடத்தி மொத்தத் தொகையாகப் பேசிக் கொடுத்து விடுவார்கள்!" என்கிறார் உள்ளூர் நிருபர் ஒருவர்.

"சோனியாவுடன் போட்டியிட சுஷ்மா கொஞ்சம் கூட சரியான ஆள் இல்லை; இருவரையும் ஒப்பிடவே முடியாது" என்கிறார் கொண்டையா.

"சோனியா போட்டியிடுவதால் நீங்கள் மீண்டும் நிற்கும் வாய்ப்பை இழந்து விட்டீர்களே, அதனால் ஏதாவது வருத்தம் உண்டா?" என்று கேட்டோம்.

"ஐயோ... பிரதர்! அப்படிச் சொல்லாதீங்க. தெற்கில் ஏதாவது தொகுதியில் இருந்து போட்டியிடுவதாக இருந்தால் பெல்லாரியிலிருந்துதான் போட்டியிட வேண்டும் என்று கர்நாடக காங்கிரஸிலிருந்து நாங்கள்தான் வலியுறுத்திச் சொன்னோம். சோனியா வென்றால், வி.ஐ.பி. தொகுதியாக மாறி எல்லா முன்னேற்றங்களும் நடக்குமே!" என்கிறார் கொண்டையா.

"கடந்த பன்னிரண்டு பாராளுமன்ற தேர்தல்களில், தொகுதியில் வெற்றிக் கொடி நாட்டியது காங்கிரஸ். ஆனாலும் எந்த முன்னேற்றமும் இல்லை!" என்று சொல்லும் விமர்சனங்களுக்குப் பதிலடி கொடுக்கிறார் கொண்டையா. "யார் சொன்னது? இது இப்போது முற்றிலுமாகப் பின்தங்கிய தொகுதி என்று சொல்வது சரியல்ல; பெல்லாரி நகரில்

மருத்துவ, பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. விவசாய ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. மாவட்டத்தின் பாதி விளைநிலங்களுக்கு, துங்க பத்ரா கால்வாய் மூலம் பாசனம் நடக்கிறது. இவை தவிர இந்தப் பகுதி மக்கள் இந்திரா காந்தியின் மீது பக்தியே வைத்திருக்கிறார்கள். அவர் காலத்தில்தான் ஏழை மக்களுக்கு வங்கிக் கடன்கள் சுலபமாகக் கிடைத்தன. பண்ணையார்களிடமிருந்து மக்கள் விடுவிக்கப்பட்டனர். பா.ஜ.க.வின் விதேசி, சுதேசி இங்கு எடுபடாது. இந்தத் தொகுதியில் 70 சதவீதம் தாழ்த்தப்பட்ட மற்றும் மைனாரிட்டி மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் காங்கிரஸின் ஆதரவாளர்கள். பா.ஜ.க.வின் ஆதரவாளர்களான நடுத்தரவர்க்கத்து மக்களைப் போன்று அவர்களுக்கு நச்சென்று பேசத் தெரியாது; வதந்திகளைப் பரப்பத் தெரியாது" என்று கடுகடுத்த குரலில் சொல்கிறார் கொண்டையா.



* அங்கங்கே நின்று பிரசாரம் செய்யும் சுஷ்மா

இவர் இப்படிச் சொன்னாலும் தொகுதியில் உள்ள சாலைகளும் மக்களின் வறுமைத் தோற்றமும் பின்தங்கிய நிலையைப் பளிச் சென்று சொல்லுகின்றன.

பெல்லாரி பாராளுமன்றத் தொகுதியில் எட்டு சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. 1996-ல் எந்தவிதக் கூட்டணியுமின்றிப் போட்டியிட்ட பா.ஜ.க. வேட்பாளர் பெற்ற வாக்குகள் 43,000. 1998-ல் லோக் சக்தி வேட்பாளரை ஆதரித்தது பா.ஜ.க. வெற்றி பெற்ற காங்கிரஸ் வேட்பாளர் கொண்டையா பெற்ற வாக்குகள் 2,84,000. அதற்குப் பின்னால் லோக் சக்தி வேட்பாளர் பெற்றது 2,21,000. மூன்றாவதாக வந்த ஜனதா தளம் பெற்றது 1,86,000. இப்போது ஜனதா தளம் பிளவுற்ற நிலையில், லோக் சக்தியையும், ஜனதாதளம் பெற்ற வோட்டுகளில் பாதியையும் எடுத்துக் கொண்டு கூட்டிக் கழித்து, காங்கிரஸை விட அதிகம் வோட்டுக்கள் பெற வாய்ப்பிருப்பதாக பா.ஜ.க. கணக்குப் போடுகிறது.

இது தவிர தொகுதியில் பரந்த அளவில் லிங்காயத்து பிரிவினர் இருக்கிறார்கள். அந்தப் பிரிவைச் சார்ந்த காங்கிரஸ் பிரமுகர் ராஜசேகர மூர்த்தி என்பவர், சமீபத்தில் பா.ஜ.க.வுக்குத் தாவி விட்டார். அவர் சுஷ்மாவுடனும், தனியாகவும் பல கிராமங்களில் பிரசாரம் செய்கிறார். அவரது வருகையாலும் பா.ஜ.க.வுக்கு வோட்டுக்கள் கூடும் என்கிறார்கள். ஆனால் இந்தக் கணக்கையெல்லாம் ஒப்புக் கொள்ள காங்கிரஸ் பிரமுகர்கள் தயாராக இல்லை.

"இங்கு போட்டியிடுவது சாதாரண காங்கிரஸ் நபர் இல்லை. இந்த நாட்டுக்காக ரத்தம் சிந்திய குடும்பத்திலிருந்து வந்த சோனியா போட்டியிடுகிறார். பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிகளிலும் அலசுவதற்கு வேண்டுமானால் உங்கள் புள்ளி விவரங்கள் பயன்படும்!" என்கிறார்கள் அவர்கள்.

இருந்தாலும், "சோனியா அமேதியிலும் போட்டியிடுகிறார். அங்கே வெற்றி பெற்றால் இங்கே ராஜினாமா செய்துவிடுவார். அதனால் எதற்காக அவருக்கு வாக்களிக்கிறீர்கள்?" என்று பி.ஜே.பியினர் செய்யும் பிரசாரமும் நன்றாக எடுபடுகிறது.

"இல்லையில்லை! இந்தத் தொகுதியைத் தான் சோனியா தக்கவைத்துக் கொள்வார்!" என்று காங்கிரஸார் சொல்வது கொஞ்சம் பலவீனமாக ஒலிப்பது போல்தான் தெரிகிறது.

தொகுதியில் பரவலாகப் பேசிப் பார்க்கும் போது ஒன்று மட்டும் தெளிவாகப் புரிகிறது. வெற்றிக் கனியை சுலபமாகத் தட்டிச் செல்லும் வாய்ப்பைப் பெற்றிருந்த காங்கிரஸ், பா.ஜ.க.வின் சுஷ்மா ஸ்வராஜ் எதிர்த்துப் போட்டியிடுவதால் நன்றாகவே திணறிப் போயிருக்கிறது.

— ப்ரியன்

திணறுகிறாரா வாழப்பாடி?

'அம்மா'வின் முன்னாள் அமைச்சர் செல்வகணபதியும், மத்திய அமைச்சர் வாழப்பாடி ராமமூர்த்தியும் சரிக்குச் சரியாக மோதும் இடம் சேலம்.

தொகுதி மக்கள், செல்வகணபதியின் சுடுகாட்டுக் கூரை ஊழலையும், கலர் டீவி. வாங்கிய மோசடி வழக்குகளையும் பேசுகிறார்களோ இல்லையோ, சமீபத்தில் வாழப்பாடி தொகுதியெங்கும் இறைத்து விட்ட இரண்டே முக்கால் லட்சம் காஸ் இணைப்புக்களைப் பற்றி மட்டும் மூச்சு முட்டப் பேசுகிறார்கள்.


கூட்டணிக் கட்சிகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை, கொடுக்கப்பட்ட காஸ் இணைப்புகளின் கணக்கீடுகள் மட்டும் வோட்டாக மாறினாலே போதும் வாழப்பாடி வெற்றி பெறுவது நிச்சயம் என்று யாரும் சுலபமாகக் கணக்குப் போட்டு விடுவர். ஆனால் சேலத்து மக்களிடமோ இதற்கு நேர் எதிர்ச் சிந்தனைகள் வலுப்பெற்றுள்ளன.

"அவர் காஸ் கொடுத்தார். உண்மைதான். யாருக்குக் கொடுத்தார்? பெரும்பாலும் கட்சிக்காரர்களுக்கு. அதை இரண்டாயிரம், மூவாயிரம்ன்னு கொடுத்து விலைக்கு வாங்கினவங்க எதுக்கு சார் வோட்டுப் போடணும்?"

தொகுதிக்குள் இப்படிப்பட்ட பேச்சுக்கள். பெரும்பாலான காஸ் இணைப்புகளை அ.தி.மு.க.வினரே வாங்கி விற்றதாகச் சொல்கிறார்கள்.

"அவர் வோட்டுப் போட்டதுக்குத்தான கொடுத்தார். இனி போடப் போற வோட்டுக்காகவா கொடுத்தார்? அவருக்காக வேலை செஞ்சு வெற்றி பெறச் செய்தோம். 'அம்மா' பதவி வாங்கித் தந்தார். அதன் மூலமா இதைச் செஞ்சார். இதுக்காக அடுத்த வோட்டையும் இவங்களுக்குப் போட்டுட முடியுமா?" – சென்ற முறை வாழப்பாடிக்காக வரிந்து கட்டிக் கொண்டு வேலை செய்த அ.தி.மு.க. உள்ளூர்ப் பிரமுகர் ஒருவரின் கொதிப்பு!

சேலம் 1, சேலம் 2, வீரபாண்டி, பனைமரத்துப்பட்டி, ஏற்காடு, ஓமலூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய சேலம் மக்களவைத் தொகுதியில் மக்களின் அன்றாடப் பிரச்னைகளே முன்னுக்கு நிற்கின்றன. வியாபாரமின்மை. தொழிற்சாலைகள், சாயப்பட்டறைகள் சேகோ (கிழங்கு மாவு) ஃபேக்டரிகள் சுற்றுச் சூழல் கட்டுப்பாட்டு வாரியத்தின் கிடுக்கிப் பிடியில் நிற்பது, பல்லாயிரக் கணக்கான தொழிலாளர் வேலை இழப்பு, என நிறைய அவல இரைச்சல்.



• வாழப்பாடி

தொகுதியில் மூன்றில் ஒரு பங்கு வன்னியர் வோட்டுதான். தற்போது நேரடிப் போட்டியிலுள்ள ராமமூர்த்தியும், செல்வகணபதியும் வன்னியர்கள். பா.ம.க.விடம் கடைசி வரை இன்னொரு தொகுதிக்கு முரண்டு பிடித்த வாழப்பாடி மீது ராமதாஸ் கட்சியினருக்குக் கடுங் கோபம். இதனால் அ.தி.மு.க.வினருக்குக் கொண்டாட்டம் என்று சொல்லத் தேவையில்லை!

காஸ் கனெக்ஷன் விற்பனை, பெட்ரோல் பங்க் உரிமம் பலருக்கு விலை பேசப்பட்டது என்றும் ஜெ.வுக்கு துரோகம் செய்தவர் வாழப்பாடி என்றும்




பிரசாரம் செய்கிறார்கள் அ.தி.மு.க.வினர்.

திரும்பின பக்கமெல்லாம் சுவர் விளம்பரங்கள், கட்- அவுட்டுகள், வண்டி, வாகனப் பிரசாரங்கள். எங்கெங்கு காணினும் இரட்டை இலைகளாய்க் காட்சி தருகின்றன.

தி.மு.க.வினரும் அ.தி.மு.க.வினருக்குச் சளைத்தவர்களல்ல என்பது போல் பாடுபடுகின்றனர். தமக்கு 'வாழ்வா? சாவா?' என்கிற உத்வேகத்தில் வீரபாண்டி ஆறுமுகம் களத்தில் இறங்கி வேலை செய்வதைக் காண முடிகிறது. சேலம் தி.மு.க.வைப் பொறுத்தவரை கோஷ்டியே இல்லாதது பெருத்த ஆச்சர்யம். வீர பாண்டியார் காலால் இட்ட வேலையைத் தொண்டர்கள் தலையால் செய்து விட்டு நிற்கிறார்கள்.

"இது ஊழலுக்கும், உழைப்பாளிக்கும் நடக்கும் போராட்டம். சுடுகாட்டுக் கொட்டகை ஊழல்வாதியைத் தூக்கி எறியுங்கள். உழைப்பாளி வாழப்பாடியாரை வெற்றி பெறச் செய்யுங்கள்!" என்று வாழப்பாடி கூடவே சென்று உரக்கக் கூவி பிரசாரம் செய்கிறார் வீரபாண்டி ஆறுமுகம்.

பா.ம.க., ராஜீவ் காங்கிரஸ் தொண்டர்களோ இன்னும் ஒரு படி மேலே போய், "செல்வகணபதியின் ஊழல் நிரூபணம் ஆகும் கடைசி கட்டத்தில் இருக்கிறது. இப்போது அவருக்கு நீங்கள் வோட்டுப் போட்டால் உங்கள் வாக்குகளும் செல்லாத வாக்காகி விடும். அவருக்கும் பதவி போய் விடும். உங்கள் வாக்கு செல்லும் வாக்கா? செல்லா வாக்கா?"



• செல்வகணபதி

இந்தப் பிரசாரம் எவ்வளவு தூரம் வேலை செய்யும்? இதற்கு எதிர்வினை எப்படி? செல்வகணபதியிடமே கேட்கப் போனோம். பேட்டிக்கு மனிதர் கைகூப்பி மறுத்து விட்டார், "ஸாரி பிரதர். ஜனங்க சொல்றதை அப்படியே எழுதுங்க! நான் என்ன பேட்டி கொடுக்கிற அளவுக்குப் பெரிய மனுஷனா?"

செல்வகணபதி செல்லும் இடங்களிலெல்லாம் நிறைய கூட்டம் வருகிறது. அம்மாவை துதிபாடிப் பாடி, வாஜ்பாயைச் சாடிச் சாடி வாக்குக் கேட்கும் மனிதர் வழக்குகள் பற்றி 'மூச்சு' விடுவதில்லை. வாழப்பாடி செல்கிற இடங்களிலெல்லாம் கூட்டம் வருகிறதோ இல்லையோ, 'தையல் மிஷின்', 'காஸ் சிலிண்டர்' கோரி விண்ணப்பம் எழுதி அளிக்க ஏராள கூட்டம் வருகிறது.

பதின்மூன்று மாத காலமே என்றாலும் தொகுதி மக்களுக்கு நிறையவே 'செய்து கொடுத்திருக்கிறார்' வாழப்பாடி.

இவர்களுக்கிடையில் சேலம் மக்களவைத் தொகுதியில் மூன்றாவது அணியில் மூன்றாம் முறையாகப் போட்டியிடுகிறார், த.மா.கா. தேவதாஸ். 1996- மக்களவை உறுப்பினர். சென்ற முறை வாழப்பாடியிடம் தோற்றவர். இந்த முறையும் இவரது சைக்கிள் அங்கங்கே பிரசாரத்தில் நகர்ந்தாலும், ஒலிம்பிக் ஓட்டக்காரர்களுடன் உள்ளூர் ஓட்டக்காரர் ஓடுவது போல்தான் நகர்ந்து கொண்டிருக்கிறார்.

என்றாலும் –


அ.தி.மு.கவினரிடம் ஊடுருவியிருக்கும் பணபலம், ஆட்கள் பலம், அதனால் தொகுதியெங்கும் இடமில்லாமல் கடை பரப்பப்பட்டிருக்கும் பிரசார பலம் வாழப்பாடியாரையே திணறடித்துக் கொண்டிருப்பதைக் காண முடிந்தது.

இந்தத் திணறலுக்கு தேர்தல் பிரசாரம் ஆரம்பித்த பிறகும் கூட வாழப்பாடிக்குச் சின்னம் ஒதுக்கப்படாததும் ஒரு காரணமோ? அவரிடமே கேட்டோம்.

"சின்னம் ஒதுக்காதது ஒரு பெரிய விஷயமேயில்லை. அதற்காக நாங்கள் திணறவுமில்லை. சென்ற முறை எங்களுக்கான 'ஆப்பிள்' சின்னமே தேர்தலுக்குப் பத்து நாள் முன்புதான் கொடுக்கப்பட்டது. பிரசாரம் செய்யவில்லையா? வெற்றி பெறவில்லையா? ஒரே ஒருநாள் போதும் எங்களுக்குத் தொகுதியெங்கும் 'சின்னம்' பொறிக்க! எந்தச் சின்னமானாலும் பாருங்கள். கடந்த தேர்தலை விட கூடுதல் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுக் காட்டுகிறேன்" என்றார்.

— கேயெஸ்வி

• மலைச்சாமி



மலையோடு மோதும்

படித்தவர்கள் மோதும் தொகுதி என்ற பெருமை இராமநாதபுரத்துக்குக் கிடைத்திருக்கிறது. அ.தி.மு.க. வேட்பாளர் மலைச்சாமி ஐ.ஏ.எஸ்! தி.மு.க. வேட்பாளர் பவானி ராஜேந்திரன் இரண்டு எம்.ஏ. பட்டமும் எம்.லிட்டும் பெற்றவர். புதிய தமிழகம் வேட்பாளர் நஸீரா பர்வீன் எம்.பி.பி.எஸ். படித்தவர்.

அ.தி.மு.க. வேட்பாளர் மலைச்சாமியைக் கைக்குள் வைத்திருக்கும் சத்தியமூர்த்தியின் நடவடிக்கைகள் அவருடைய கட்சிக்காரர்களுக்கே பிடிக்கவில்லை. ஆனாலும் மலைச்சாமியை ஜெயிக்க வைக்க அ.தி.மு.க. தொண்டர்கள் விரும்புகிறார்கள்! காரணம், மலைச்சாமி வென்றால்தான் சத்தியமூர்த்தியின் அடாவடி அரசியல் குறையும் என்று அவர்கள் நம்புவதுதான்!

நேற்று வரை அனைத்து மக்கள் தேவர் பேரவை நடத்திவந்த மலைச்சாமியைத் தங்கள் வேட்பாளராக ஏற்றுக் கொள்ள அ.தி.மு.க.வினர் சிலரால் முடியவில்லை. அதோடு ஐ.ஏ.எஸ். அதிகாரியான அவரிடம் தொண்டர்கள் நெருங்கிப் பழக பயப்படுகிறார்கள். கார்த்திக் லாட்ஜில் ஒன்றியச் செயலாளர்கள் கூட்டத்தில் இருந்த மலைச்சாமியிடம் நாம் கேட்ட கேள்விகளும்... அவர் பதில்களும்...

"நேற்று வரை உத்தரவு போடும் அதிகாரி... இன்று மக்களைக் கும்பிடுவதற்கு 'ஒரு மாதிரியாக' இல்லையா?"

"ஆட்சிப் பணியிலிருந்தபோது இருந்த மனோபாவம் அரசியல் பணிக்கு வந்த பிறகு மாறணும். எனக்கு மாறியிருக்கு!"

"இராமநாதபுரம் தொகுதியை விரும்பிக் கேட்டீர்களா? கட்சியிலிருந்து கொடுத்தார்களா?"

"கட்சியிலிருந்து தரப்பட்டது. ஆனால் நான் விரும்பிய தொகுதியும் கூட. நான் பிறந்த ஊர் சிவகங்கை. சிவகங்கை என்பது பழைய இராமநாதபுரம்தான். என்னுடைய அண்ணன் தம்பியுடைய நிலபுலன்கள் எல்லாம் நயினார் கோயில் யூனியனில் இருக்கிறது. அதனால் எனக்கு சொத்துபத்து உள்ள இடம் இராமநாதபுரம். எனவே இந்த 'மண்ணின் மைந்தன்' என்று நான் தாராளமாகச் சொல்லலாம்."

"ஜெயித்தால் சென்னை சென்று விடுவீர்கள் என்று சொல்லும் எதிர்க்கட்சியினரை எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள்?"

"சொந்த வீடு அண்டக்குடியில்தான் இருக்கிறது. இங்கிருந்து கூப்பிடு தூரம்தான் அண்டக்குடி. அடிக்கடி சொந்த வீடிருக்கும் அண்டக்குடிக்கு வந்து போவேன். நான் இப்போது ஓய்வு பெற்றுள்ளதால் எனக்கென்று ஜாப் எதுவுமே இல்லை; டாஸ்க் இல்லை; அசைண்ட் டியூட்டி எதுவும் இல்லை. எனவே முழு நேரமும் என்னால் அரசியல் பண்ண முடியும். முழு நேரமும் அரசியலில் ஈடுபடுவதால் முழுக்க முழுக்க மக்களுக்கு உழைக்க முடியும். எனவே ஒன்றுக்கு மேற்பட்ட அலுவலகங்களை இங்கே தொடங்குவதாக இருக்கிறேன். இராமநாதபுரம், பரமக்குடி எங்காவது அலுவலகம் போட்டு போன், ஃபேக்ஸ் வசதி செய்து விடுவதால் கம்யூனிகேஷன் பிரச்னை இருக்காது. மக்களுடைய கோரிக்கைகள் நிறைவேற முக்கியமான கேந்திரம் சென்னை. எனவே என்னுடைய அலுவலகத்தில் சொல்லப்படும் குறைகளை உடனே சென்னையிலிருந்து என்னால் நிவர்த்தி செய்ய முடியும். மத்தவங்களுக்கு இல்லாத கூடுதல் தகுதியாக இதை நான் எடுத்துக் கொள்கிறேன்."

"பார்வர்டு பிளாக் வேட்பாளர் களஞ்சியம், புதிய தமிழகம் வேட்பாளர் நஸீரா பர்வீன் இவங்க போட்டியிடுவது உங்களுக்கு பலமா? பலவீனமா?"

"தெரியலை.. இன்னும் எத்தனை பேர் வந்து காலை வாருவாங்களோ, கையப்

பிடிப்பாங்களோ தெரியலை! ஜாதி, மதம், இனத்தைத் தாண்டி இந்தத் தொகுதி மக்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறாங்க அப்படீங்கிறதைப் பற்றி என்னோட ரீடிங் என்னன்னா 'படிச்சவன், நல்லவன், யோக்கியன், விவரமானவன். இவன் வந்தா இந்தத் தொகுதிக்கு நல்லது பண்ணுவான்' என்று வெளியில சொல்றாங்களோ இல்லையோ.. நிச்சயமா மனசில நினைக்கிறாங்க. நான் ஒரு கம்யூனிஸ்ட் மாதிரி... உள்ளதை யதார்த்தமா சொல்லிடுவேன். ஒரு ஆபீஸில் ஒரு காரியம் பண்ணுறது, ஒருத்தருக்கிட்ட சிபாரிசு பண்ணுறது, எப்படி ஆப்பரேட் செய்வது, ஸ்கீம் போடுவது... இதில் எல்லாம் முப்பது வருஷம் குப்பை கொட்டியிருக்கேன்ல! அதனால மத்தவங்களால முடிஞ்சது இந்த மலைச்சாமியால முடியும்னு மக்கள் நம்புவாங்க."

"வர்ற வோட்டை விட்டுடுங்க. வராத வோட்டைத் தடுங்கனு நீங்களே பேசலாமா?"

மலைச்சாமி!

"நான் அப்படிச் சொல்லவேயில்லை. என்ன சொன்னேன்னா... 'பெருவாரியான ஆதரவு அ.தி.மு.கவுக்கு இருக்கு. அந்த ஆதரவை எல்லாம் வோட்டாக மாற்றுவது நம் கெட்டிக்காரத்தனம். அதை நீங்கள் வோட்டாக மாற்றுங்கள். அந்த வோட்டைத் தடுப்பதற்கு ஆளுங் கட்சியினர் முயல்வார்கள். ஆட்சி, அதிகாரம், பக்கபலம், பணம் எதுவும் அ.தி.மு.க.விடம் இல்லாததால், ஆளுங் கட்சியினர் நம்முடைய வோட்டுகளைத் தடுப்பார்கள். எனவே தடுப்பவர்களைத் தடுங்கள். தடுப்பவர்களைத் தடுப்பது குற்றமில்லை. ஆனால் 'வோட்டுப் போட வருபவர்களைத் தடுங்கள்' என்று நான் சொன்னதாக ஒரு நாளிதழில் தவறாக எழுதி விட்டார்கள். அதை வைத்துக் கொண்டு 'உடன்பிறப்பே' என்று கருணாநிதி கடிதம் எழுதி விட்டார். எனக்கு அரசியல் அகட விகடமெல்லாம் தெரியாது. நான் புதுசுங்க. நான் அப்படி இளிச்சவாய்த்தனமா வெல்லாம் பேச மாட்டேன்."



• பவானி ராஜேந்திரன்

மலைச்சாமி படித்தவர் என்று படித்த மக்களுக்குத் தெரிந்தாலும் அ.தி.மு.க. வோட்டு வங்கிக்கு உத்தரவாதம் தரும் பாமரர்களுக்குத் தெரியவில்லை. "அவரு ஐ.பி.எஸ்லோ என்னமோ படிச்சிருக்காரு" என்று தான் சொல்கிறார்கள். சத்யமூர்த்தி, பவானி ராஜேந்திரனின் குடும்பப் பின்னணி மலைச்சாமிக்கு மைனஸ்.

தி.மு.க. வேட்பாளர் பவானி ராஜேந்திரன் குடும்பத்திலிருந்து சத்யேந்திரன், ராஜேந்திரன் போன்றோர் அரசியலில் நிறையச் செய்திருப்பதாக மக்கள் நினைக்கிறார்கள். மு.க. அழகிரி ஆதரவு, அகமுடையோர் இன வோட்டுக்கள், நிலையான ஆட்சிக்கு பிரதமர் வாஜ்பாய் என்கிற கோஷம், ஜான்பாண்டியன் ஆதரவால் கிடைக்கும் வோட்டுகள், விதவை என்று எதிர்க்கட்சி "நிறைகுளத்தான்" பேசியதை பாஸிடிவ்வாக மாற்றி பிரசாரம் செய்வது... எல்லாமே தி.மு.க. வேட்பாளர் பவானி ராஜேந்திரனின் பிளஸ்.

புதிய தமிழக வேட்பாளர் நஸீராபர்வீன் சென்ற தேர்தலில் ஐம்பதாயிரம் வோட்டுகளுக்கு மேல் வாங்கியிருக்கிறார். இந்த முறை த.மா.கா., விடுதலைச் சிறுத்தைகள் கூட்டணியால் அதிக வாக்குகளைப் பிரிப்பார்.

மறவர் வோட்டுகளை பார்வர்டு பிளாக் கட்சியில் போட்டியிடும் களஞ்சியம் பிரித்து விடுவார். இது மலைச்சாமிக்கு மைனஸ்.

இராமநாதபுரம் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர் சார்ந்த கட்சியே மத்தியில் ஆட்சி அமைக்கும் என்பது சென்டிமெண்ட். அந்த வகையில் பார்த்தால் பவானி ராஜேந்திரனுக்கு இராமநாதபுரம் தொகுதியில் வெற்றி வாய்ப்பு அதிகம் இருப்பதால், வாஜ்பாய்தான் பிரதமர் என்று உடன்பிறப்புகள் உற்சாகமாய் இருக்கிறார்கள்!



• நஸீரா பர்வீன்



— பழ. சேதுராமன்

படங்கள் : ஜே.எஸ். சதீஷ்குமாரன்



• ரங்கராஜன் குமாரமங்கலம்



• அடைக்கலராஜ்

திருச்சியில் தாமரை திரும்பவும் மலருமா?

திருச்சி பாராளுமன்ற வோட்டு வேட்டை சூடுபிடித்து விட்டது. பாரதிய ஜனதா வேட்பாளர் ரங்கராஜன் குமாரமங்கலமும், காங்கிரஸ் வேட்பாளர் அடைக்கலராஜும் ஆளுக்கொரு திசையில் ஆதரவு தேடி வருகிறார்கள்.

இரண்டு வாரத்திற்கு முன் திருச்சியில் ஜெயலலிதா பேசும்போது "துரோகி ரங்கராஜனை தோற்கடித்து வீட்டுக்கு அனுப்புங்கள்" என்று ஆவேசமாய்க் கட்டளையிட்டார் ரத்தத்தின் ரத்தங்களைப் பார்த்து.

ஜெயின் கட்டளை தந்த உற்சாகத்தில் வெற்றி நம்பக்கம் நிச்சயம் என்று கணக்குப் போட்டு வைத்திருந்தது காங்கிரஸ். சமீபத்திய விழுப்புரம் கூட்ட விரிசல் விவகாரம் அந்தக் கணக்கைக் கொஞ்சம் கலகலத்துப் போகும்படி வைத்து விட்டது.

"அதெல்லாம் வதந்தி!" என மறுக்கிறார் அடைக்கலராஜின் சகோதரர் எல். ஞானராஜ். "சுமார் ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி உறுதி! குறைந்த பட்சம் இரண்டு லட்சம் வாக்காளர்கள் முஸ்லிம், கிறிஸ்துவ சமூகத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் இம்முறை பெருமளவில் வாக்களிப்பார்கள். அவர்களிடத்திலிருந்து பத்துப் பதினைந்து சதவீத வாக்குகள் கூட தாமரைக்கு கிடைக்க வாய்ப்பு இல்லை. இது தவிர அ.தி.மு.க., காங்கிரஸ் கூட்டணிக் கட்சிகளின் நிரந்தர வோட்டினால் ஒரு லட்சம் வித்தியாச வெற்றி நிச்சயம்" என்கிறார் அவர்.

மூன்று முறை தொகுதியில் வெற்றி பெற்றவர் அடைக்கலராஜ். எதிரணியினர் அவரது பதவிக்காலத்தில் "ஒன்றுமே செய்யவில்லை" என்று கூறும் வாதத்தை முறியடிக்க இருபத்தெட்டு பக்க சாதனை விளக்கப் புத்தகம் ஒன்று வாக்காளர் கரங்களில் தவழ்கிறது. நிழற்குடை முதல் சுடுகாட்டுக் கொட்டகை வரை அதில் பட்டியலிட்டுத் தந்திருக்கிறார்!

பதின்மூன்று மாத காலத்தில் செய்த பணிகளை தொகுதி முழுவதும் மக்களிடம் ஆங்காங்கு கூடும் கூட்டங்களில் எடுத்துச் சொல்லி ஆதரவு தேடுகிறார் ரங்கராஜன் குமாரமங்கலம். கூடவே அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், கூட்டணி கட்சித் தலைவர்கள் உடன் சென்று பிரசார பலம் சேர்த்துத் தருகிறார்கள்.

திருச்சி மாநகரில் நான்கு இடங்களில் ரயில்வே மேம்பாலப் பணிகள், புள்ளம்பாடியில் முன்னூறு கோடி ரூபாய் முதலீட்டில் நூற்பாலைத்திட்டம் என்று அந்தந்த பகுதிக்குச் செய்திருக்கும் பணிகளைப் பட்டியலிட்டுப் பேசுகிறார் ரங்கராஜன் குமாரமங்கலம்.

"மக்களுக்குச் சேவை செய்யும் பாராளுமன்ற உறுப்பினர் நான் என்பதை திருச்சி மக்களுக்கு நிரூபித்துள்ளேன். பொது மக்களும் அதை நன்கு உணர்ந்துள்ளார்கள். வெற்றி தாமரைக்கே!" என்கிறார் ரங்கராஜன் குமாரமங்கலம்.

எந்தக் கட்சியிலும் அபிமானம் இல்லாத பொதுமக்கள், நடுநிலையாளர்கள் மத்தியில் ரங்கராஜன் குமாரமங்கலத்துக்கு நற்பெயர் இருக்கிறது.

இடையில் புகுந்து ஓடி வரும் சைக்கிள் (த.மா.கா. வேட்பாளர் எம். ராஜசேகரன்) மிகவும் கணிசமான வாக்குகளைப் பிரிக்கும் என்கிறார்கள். ஆனாலும் அது ஒரு பொருட்டில்லை என்று கூறுகின்றனர் இரு அணியினரும்.

வழக்கம் போல் தி.மு.கவினரின் கடுமையான உழைப்பும், தேர்தல் பணிகளும் சிறப்பாக அமைந்தால் பா.ஜ.க. திருச்சியை தக்க வைத்துக் கொள்ளும் என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



அன்னதானம் காசியில் செய்வோம்



அன்னையின் அருளைப் பெறுவோம்

மாதாமாதம் அமாவாசை அன்று புண்ணிய ஸ்தலமான காசியில் அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்கேற்கலாம்...

காசி நகரத்தைப் பற்றியும் காசியின் புனிதத்தைப் பற்றியும் அறியாதவர்கள் இருக்க முடியாது. இந்துக்களின் புனித மண்ணில் புண்ணிய பூமியில் 'அன்னபூரணி' தாயே கோயில்கொண்ட திருத்தலத்தில் அன்னதானம் செய்வது தானத்திலேயே சிறந்த தானமாகும். 1999 புரட்டாசி மாதம் மஹாளய அமாவாசை அன்று முதல் காசியில், மாதாமாதம் அமாவாசையில் அன்னதானம் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதோடு இந்தப் புனிதப்பணியில் நீங்களும் பங்குகொள்ள வேண்டுமென்று அன்புடன் அழைக்கிறோம்.

"பசி என்று வந்தால் ஒரு பிடி சோறு
புசியென்று தந்து பாரப்பா...
பசியற்ற உன் நெஞ்சில் இன்பம் உண்டாகும்.."

என்ற - பாரதிதாசன் வரிகள் அன்றாட வாழ்வில் நினைவூட்டிக் கொண்டிருப்பதை மறுக்க முடியாது. நினைத்தாலே மனதிற்கு நிம்மதி தரும் இப்புனித ஸ்தலத்தில் அன்னதானம் செய்ய எண்ணம் கொண்டவர்களின், பிரார்த்தனை செய்து கொண்டவர் களின், வேண்டுதலாக நினைத்துக் கொண்டவர்களின் எண்ணங்களை நிறைவேற்ற "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான அறக்கட்டளை" என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம்.

புண்ணிய ஸ்தலமான காசியில் அன்னதான திருப்பணியை செய்து புண்ணியத்தைப் பெற ஆன்மீக அன்பர்கள், பக்தர்கள், பெரியவர்கள் அனைவருக்கும் இது ஒரு நல்ல வாய்ப்பு. இந்த அன்னதான பணியில் பங்குபெறும் அன்பர்கள் எல்லோருமே ஏதேனும் ஒரு வகையில் நன்மை அடைந்தே வருகின்றனர். அவரவர் வாழ்வில் முன்னேற்றங்களும், நற்பலன்களும் ஆண்டவன் அருளால் தேடி வரும்.

அன்னதானத்திற்கு நன்கொடையை அனுப்புவோர், திருமணநாள், பிறந்தநாள் மற்றும் திதி நாள் போன்றவற்றையும் தெரிவித்தால் தாங்கள் விரும்பும் மாதத்தில் அன்னதானம் செய்து, பிரசாதம் அனுப்பி வைக்கிறோம்.

நன்கொடைகள் அவரவர் விருப்பத்திற்கேற்ப பணமாகவோ அல்லது பொருளாகவோ (அரிசி, நெய், பருப்பு வகைகள், புளி) கொடுக்கலாம்.

அன்னதான சேவையில் ஈடுபடும் ஆன்மீக அன்பர்கள் நன்கொடையை M.O/ D.D Cheque காசோலையாக "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான அறக்கட்டளை" (Sri Annapoorani Annadhana Arakkattalai) என்ற பெயருக்கு எடுத்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைத்து ரசீது அஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

பொருள்கள் அனுப்புவோர் ABT/TVS மைலாப்பூர், சென்னை-4க்கு அனுப்பி வைத்து எங்களுக்கு தெரிவித்தால் நாங்கள் உடனே Delivery எடுத்துக்கொள்வோம்.

* தாங்கள் கொடுக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் ஏற்றுக்கொள்கிறோம்.
* ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பிவைக்கிறோம்.
* ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கிறோம்.
* ரூ.2000 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் நான்கு ஆண்டுகளுக்கு அனுப்பிவைக்கிறோம்.

Cheque / D.D / M.O அனுப்ப வேண்டிய முகவரி :

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான அறக்கட்டளை

SRI ANNAPOORANI ANNADHANA ARAKKATTALAI (Regd.)

31/1, Nadu Street, (Opp. Kapaleeshwarar Koil)

Mylapore, Chennai - 600 004. Ph : 4958086

அமரர் கல்கி
நூற்றாண்டு மலர்



- அதோடு கொஞ்சம் பிடிவாதம்..?
  (திருமதி கல்கி)
- விடுதலை வேள்வியில் வித்தகர் கல்கி
- எழுதினார், எழுத வைத்தார்!
- பரமகுருநாதர் பாரதியார்
- பரோபகாரி
- வரலாறும் கற்பனையும்
- கல்கியின் கவிதை உள்ளம்
- சினிமாவும் பேனாவும்
- அப்பாவும் நானும் *(ஆனந்தி)*
- தேவை கல்கித் தமிழ்
- மெய்ப்பொருள் கண்ட மேதை
- காதல்; மோதல்!
  (வாஸனும் கல்கியும்)
- குளிர்நிலவும் கதிர்மதியும்
  (டி.கே.சி + ராஜாஜி)
- உயிர்த்தோழர்கள்
  (கல்கி + சதாசிவம்)
- பொன்னியின் புதல்வர்
- நினைவுச் சின்னங்கள் நான்கு
- வெள்ளிக்கிழமை இரவுகள்

இடம் பெறும் விஷயங்கள்
இவை மட்டுமல்ல!

காணக்கிடைக்காத பல அரிய புகைப்படங்கள், பார்க்கத் தெவிட்டாத வண்ணமடல் பக்கங்கள், படிக்கச் சலிக்காத சிறுகதைகளும் கூடத்தான்.


●

இலவச இணைப்பாக
எம்.எஸ். பாடிய கல்கியின் கீதங்கள் கேஸட்.



●

விலை ரூ. 60.
தபாலில் அனுப்புவதற்கில்லை. உள்ளூர் ஏஜென்டை உடனே அணுகுங்கள்.



1999 செப்டெம்பர் 5
பிரமாதி ஆவணி 19
மலர் : 58
இதழ் : 6

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

சுயநலக் கூட்டணியும் தேசு நலக் கூட்டணியும்!

விழுப்புரத்தில் சோனியா காந்தியைக் காக்க வைத்து, தமது சுயரூபத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் ஜெயலலிதா. அதற்கான நம்ப முடியாத விளக்கம் ஒன்று அ.தி.மு.கவினரால் அளிக்கப்பட்டிருப்பது, காங்கிரஸ் தலைவியை மேலும் அவமானப்படுத்துவதுபோல் அமைந்திருக்கிறது:


'எங்கள் பேரில் தவறில்லை; காங்கிரஸ் தரப்பில்தான் குளறுபடி செய்துவிட்டார்கள்' என்று செங்கோட்டையன் குற்றம் சுமத்துகிறார். வேறு சிலரோ, 'புரட்சித் தலைவியை உணர்ச்சிமிக்க மக்கள் கூட்டம் சூழ்ந்து கொண்டுவிட்டதால் அவரால் வந்து சேர முடியவில்லை' என்கிறார்கள்.

சோனியா காந்தி மறுமுறை சென்னை வந்தபோதும் அவரைச் சந்திக்க விமான நிலையம் செல்லாமல், தமது கட்சியின் ஓரங்கட்டப்பட்ட ஊழியர் சேடப்பட்டி முத்தையாவைத்தான் அனுப்பி வைத்திருக்கிறார் ஜெயலலிதா!

வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவதுபோல், தேர்தல் பிரசாரத்தின்போதே இத்தனை அகந்தையை வெளிப்படுத்துகிற அ.தி.மு.க. தலைவி, தப்பித்தவறி மத்தியில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமையுமானால் எப்படி நடந்து கொள்வார் என்பதை வாக்காளர்கள் நன்கு ஊகிக்கலாம்.

காங்கிரஸ் பிரசாரக் கூட்டங்களில் கூட்டணி ஆட்சி முறையின் பலவீனங்கள் பட்டியலிடப்படுகின்றன. அ.தி.மு.கவோ இப்போதே அந்த பலவீனத்துக்குப் பிரத்யட்ச உதாரணங்களை வழங்கி வருகிறது.

மத்தியில் ஆட்சி அமைத்து மக்கள் நலன் காப்பதைக் காட்டிலும் நாடாளுமன்றத்தில் நுழைந்து



ஓர் அச்சுறுத்தல் சக்தியாக அரசையும் நாட்டையும் சுயநல நோக்கில் ஆட்டி வைக்க வேண்டும் என்பதே அ.தி.மு.கவின் இலக்கு போல் தோன்றுகிறது.

இந்தக் கூட்டணிக்கு ஆதரவு தருவதில் உள்ள பேரபாயத்தை நாம் எடுத்துச் செல்வதற்குக் கூட அவசியமின்றி தலைவர்களே மக்களுக்கு அவ்வப்போது தங்கள் நடத்தை மூலம் உணர்த்தி வருகிறார்கள்!

இதற்கு மறுபுறமாக, தேசிய ஜனநாயகக் கூட்டணி. இதன் தேர்தல் அறிக்கையிலும் வகுப்புவாத வாடை இருக்கத்தான் செய்கிறது: 'இட ஒதுக்கீடு கொள்கையில் பொருளாதார அடிப்படைக்கு இடமே இராது! '69 சதவிகித ஒதுக்கீடு நிரந்தரமாக்கப்படும்' போன்ற அம்சங்கள் தி.மு.கவின் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.

பி.ஜே.பி. தேர்தல் அறிக்கையில் இல்லாவிட்டாலும் பிரதமரின் தேர்தல் பிரசார உரைகளில் இட ஒதுக்கீடு அதிகம் அடிபட ஆரம்பித்திருக்கிறது. தி.மு.க. அறிக்கையில் அரசியல் சட்டத்தின் 356வது பிரிவை அடியோடு ஒழிக்கப் போராடும் அபாயகரமான அம்சமும் இடம் பெறுகிறது. 356 துஷ்பிரயோகமாவதைத் தடுக்க சில திருத்தங்களைக் கொண்டு வரலாமே தவிர, அடியோடு நீக்குவது ஆரோக்கியமானது அல்ல. ஆனால், இவை போன்ற அம்சங்கள் நடைமுறைக்கு வர அரசியல்சாசனம் திருத்தப்பட வேண்டிவரும் என்பதாலும் அதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவை என்பதாலும் இவை செயலாவதற்கான வாய்ப்பும் குறைவு.

ஆனால், கல்பத்தில் நடைமுறைப்படுத்தக்கூடிய பல நல்ல அம்சங்கள் பி.ஜே.பி தேர்தல் அறிக்கையைப் போலவே தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும் அடங்கியிருக்கின்றன. முக்கியமாக, தேசிய ஜனநாயக முன்னணியின் பொருளாதாரக் கொள்கையுடன் ஒத்துப் போகிறது தி.மு.கவின் கொள்கை.

'முன்னேற்ற அரசியல்', 'சமுதாய நீதி' போன்ற வழக்கமான அம்சங்கள் அதில் இடம் பெற்றுள்ளன என்பதுடன் சிறுபான்மையினருக்கு ஆறுதல் அளிக்கும் சிறப்பம்சங்களும் இருக்கின்றன.

'உருது அகடமி' நிறுவப்படும் என்பது முஸ்லிம் வாக்காளர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய அம்சம். அதனினும் முக்கியமானது, பி.ஜே.பியுடன் கூட்டணி கொண்டிருப்பதால் தி.மு.க. தனது மதச்சார்பற்ற கொள்கையிலிருந்து விலகிவிடாது என்ற வாக்குறுதி.

நாட்டில் ஐ.எஸ்.ஐ ஊடுருவல் நிகழ்ந்திருப்பதை தினமும் செய்திகள் உணர்த்திக் கொண்டிருக்



கின்றன. இந்த ஊடுருவலின் விளைவை சென்ற தேர்தலுக்கு முன் கோவையில் உணர்ந்தோம். அத்தகைய சந்தர்ப்பத்தில் அரசு கடுமையான நடவடிக்கை எடுத்தாக வேண்டியிருக்கிறது. அதற்கான அதிகாரத்தைக் காவல்துறைக்கு வழங்க வேண்டியிருக்கிறது. பரவலாக நடவடிக்கை எடுக்கப்படும்போது, குற்றவாளிகள் மட்டுமின்றி ஒருசில நிரபராதிகளும் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. அதிலும் தீவிரவாதத்தை எதிர்கொள்ளும்போது காவல்துறை சந்தேகத்தின் அடிப்படையிலேயே பலரைக் கைது செய்ய வேண்டியிருக்கிறது.

இதனால், பாதிக்கப்பட்ட நிரபராதிகளின் உணர்வுகள் காயப்பட்டுப்போவதை தலைவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஆளும் கட்சியினர் அதற்கு மாற்று நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பது தி.மு.க. தேர்தல் அறிக்கையில் தெரிகிறது.

ஆனால், புண்பட்ட உணர்வுகளையே அரசியலாக்கி எதிரணியினர் பயன்படுத்திக் கொள்ள முயன்று வருகிறார்கள் என்பதையும் மக்கள் உணர வேண்டும்.

ஹிந்துத்வாவில் நம்பிக்கை கொண்ட பா.ஜ.கவுடன் மதச்சார்பற்ற தி.மு.க. கைகோத்திருப்பது முந்தைய கட்சியின் அவசர ஆத்திரப் போக்கைக் கட்டுக்குள் வைக்க உதவும். அதற்கான அறிகுறிகள் இப்போதே தெரிகின்றன. 'ராம ஜன்ம பூமி' தேசிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் அறிக்கையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. இரண்டாம் நிலைத் தலைவர்கள் அது குறித்துப் பேசினால் கூட பிரதமர் மறுக்கிறார். அவரை மறுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குட்படுத்தியுள்ளன மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகள்.

தேசிய ஜனநாயக முன்னணிக்கு அளிக்கப்படும் ஆதரவு என்பது நிலையான ஆட்சிக்கு அளிக்கப்படும் ஆதரவாக மட்டுமின்றி மதச்சார்பற்ற ஆட்சிக்கு அளிக்கப்படும் ஆதரவாகவும் அமையும் என நம்பலாம்.

இன்றைய அரசியல் சூழலைக் கவனித்தால், தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றி வாய்ப்புகள் பிரகாசமாகத்தான் தெரிகின்றன. ஆனால், அந்த வெற்றி, பெயரளவிலான வெற்றியாகப் போய்விடாமல் அதைப் பெரிய அளவிலான வெற்றியாக்கித் தருவது வாக்காளர்களின் கடமையாகும்.

கூட்டணி ஆட்சிதான் சாத்தியம் என்கிற நிலையில், கலைப்பு அச்சமோ, கவிழ்ப்பு அச்சுறுத்தலோ இல்லாத ஒரு கௌரவமான கூட்டணிக்கு வாக்களிப்பதுதான் அக்கடமையைப் பொறுப்போடு நிறைவேற்றும் ஒரே வழி.



திருச்செங்கோடு தொகுதி

தேர்தல் '99

'திருச்செங்கோடு' தொகுதியில் ம.தி.மு.க. வேட்பாளராகக் களம் இறங்கியிருக்கிறார் முன்னாள் தி.மு.க. அமைச்சரும், இந்நாள் ம.தி.மு.க. பொருளாளருமான மு. கண்ணப்பன். இன்னும் ரெட்டை இலை மோகம்தான் அலைவீசுகிறது. இந்த நிலையில் வை.கோ கலைஞரிடம் விரும்பிக் கேட்டுப் பெற்ற தொகுதி இது. அதிலும் தமது உயிருக்குயிரான தோழர் மு. கண்ணப்பனை நிறுத்தியிருக்கிறாரென்றால் அதில் உள்ள மர்மம் என்ன?

களத்தில் துரிதப் பிரசாரப் பயணம் செய்து கொண்டிருந்த மு. கண்ணப்பனையே சந்தித்துக் கேட்டோம்:

"பொள்ளாச்சிக்காரர் நீங்கள். திருச்செங்கோட்டில் வந்து, அதுவும் வெற்றிச் சிக்கலான இந்தத் தொகுதியில் போட்டியிடுவானேன்?"

"வெற்றியில் சிக்கல் ஏதுமில்லை. எனக்கு இந்தப் பகுதியில் நல்ல அறிமுகம் உள்ளதாலும், வெற்றி வாய்ப்பு நிச்சயிக்கப்பட்டதாலுமே இத் தொகுதியை விரும்பிக் கேட்டோம். கோவை மாவட்டம் பிரிக்கப்படாமல் ஈரோடும் கோவையும் ஒன்றாக இருந்த போது மாவட்டச் செயலாளராக (தி.மு.க.) நான் இருந்திருக்கிறேன். ஏராளமாய் கட்சிப் பணிகள் செய்திருக்கிறேன். ஈரோடு தவிர்த்து மற்ற நான்கு சட்டமன்றத் தொகுதிகளான எடப்பாடி, திருச்செங்கோடு, கபிலர் மலை, சங்ககிரி ஆகியவை தற்போது சேலம், நாமக்கல் மாவட்டங்களாக உள்ளன. இவற்றிலும் நான் அமைச்சராக இருந்தபோதே நல்ல அறிமுகம் பெற்றுள்ளேன். போக்குவரத்து அமைச்சராக இருந்தபோது ஈரோடு மாவட்டச் சாலைகள் என் தனி கவனிப்பைப் பெற்றன. திருச்செங்கோடு மலைப்பாதை (அர்த்தநாரீஸ்வரர் கோயில்) நான் அறநிலையத் துறை அமைச்சராக இருந்தபோதுதான் திட்டம் செய்யப்பட்டது. இதைச் சுற்றுலா மையமாக ஆக்க நான் பெருமுயற்சி எடுத்துக் கொண்டது இப்பகுதி மக்களுக்கு மிக நன்கு தெரியும்!"

"இங்கே திரும்பின பக்கமெல்லாம் இரட்டை இலைச் சின்னங்களையே பார்க்கிறோம். 'பம்பரம்' சின்னத்தை நகர்ப்புறங்களில் மட்டுமே பார்க்க முடிகிறது. பிரசாரத்தில் கணக்கில் கொண்டால் 'தோல்வி' உறுதிப்பட்டு விடுமே?"

"சின்னங்களை வரைந்து விட்டால் வெற்றி, இல்லாவிட்டால் வெற்றி வாய்ப்பு இழப்பு என்பது சரியான கண்ணோட்டமாகப்படவில்லை.

• கண்ணப்பன்



முன்பு பர்கூரில் ஜெயலலிதா வரையாத இரட்டை இலையா? செய்யாத சூட்சுமமா? வெற்றி பெற முடியவில்லையே, ஏன்? பொதுவாக இப்போதெல்லாம் சின்னம் பார்த்துக் குத்தும் மோகம் அப்படியே மறைந்து விட்டது என்றுதான் சொல்லுவேன். கடைசி வரை கூட்டணியில் நிகழ்ந்த மாறுதல்கள், பிரசாரத்தை கொஞ்சம் தாமதப்படுத்தி விட்டன. இப்போது அது துரிதப்படுத்தப்பட்டு விட்டது. தொகுதி, ஊர், கிராமம் வாரியாகச் செல்லவும் துவங்கி விட்டேன்! என்னை எதிர்த்துப் போட்டியிடும் இரட்டை இலைச் சின்னம் கிராமங்களில் எல்லாம் வரையப்பட்டு என்ன செய்ய? ஜெயித்தபின் தொகுதிப் பக்கமே வர

— சபதமேற்கும் முன்னாள்

"தொகுதியிலேயே குடியிருப்பேன்!"

வில்லை என என்னிடம் வந்து புகார் கூறுகிறார்கள். மனுக்கள் அளிக்கிறார்கள்!"

"அப்படியென்ன புகார்கள், மனுக்கள்?"

"இங்கே மூலாதாரமாய் உள்ள கைத்தறியும், பவர்லூம் தொழிலும் நசிந்து போய்க் கிடக்கின்றன. அந்தப் பிரச்னையை அந்த எம்.பி.யிடம் சென்று தெரிவித்தபோது அதை அவர் கண்டுகொள்ளவேயில்லை என்று குமுறிக் குமுறிப் பேசுகிறார்கள். அவர்களை நான் ஆசுவாசப்படுத்துகிறேன். வாஜ்பாய் அரசு நலிந்து போன டெக்ஸ்டைல் அபிவிருத்திக்காக 25,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தது. அது 'ஸ்பின்னிங்' என்கிற நூல் மில்லுக்கு ஒதுக்கீடு செய்யப்படாமல், முழுக்க முழுக்க 'வீவிங்' எனப்படும் துணி நெசவுக்கே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதனை நூல் மில்லிற்கும் ஒரு பகுதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று பிரதமரை அப்போதே வலியுறுத்தினார் வைகோ. பருத்தி ஆலைகளின் நலிவைச் சரிக்கட்ட அதே கருத்தை – ஆலை அதிபர்கள் – தொழிற்சங்கத் தலைவர்கள் வேண்டுகோளையும் கருத்தில் கொண்டு அதனை பார்லிமெண்டிலும் எடுத்துரைத்தார். அதை அரசும் ஏற்றுக் கொண்டது. ஆனால் இந்த எம்.பி. உள்ளூரில் வீவிங் சம்பந்தப்பட்ட, கைத்தறி, பவர்லூம் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ஒரு பைசா கூட வாங்கித் தராமல் இருந்திருக்கிறார். மக்களின் அடிப்படைப் பிரச்னைகளைப் புரிந்து கொள்ளாத – தீர்க்க வழிவகை செய்யாத ஒருவருக்கு – நாங்கள் பொறுப்பாக விஷயத்தை எடுத்துச் சொல்லும் போது எப்படி வாக்குகளை மட்டும் அளித்து விடுவார்கள்? தேர்தல் வரட்டும் என்றுதான் அவர்கள் குமுறிக் கொண்டிருக்கிறார்கள்."

"நீங்கள் இந்த ஊர்க்காரர் – தொகுதிக்காரர் அல்ல. வெற்றி பெற்றால் சொந்த ஊருக்குப் போய் விடுவீர்கள் என்கிற பிரசாரம் அ.தி.மு.க. தரப்பில் பலமாக செய்யப்படுகிறதே?"

"உண்மைதான். அப்படி ஓடிப் போகக் கூடியவன் அல்ல என்பதை பல இடங்களில் நிரூபித்திருக்கிறேன். நான் பிறந்தது பொள்ளாச்சி. ஆனால் 1989–90–ல் நான் பல்லடம் சட்டமன்ற எம்.எல்.ஏ. போக்குவரத்துத் துறை அமைச்சர். அப்போது நான் தொகுதியிலேயே இருந்திருக்கிறேன். அந்தக் காலகட்டத்தில்தான் பல்லடம் – திருப்பூர் என்று இரண்டு தாலுகாக்களாகப் பிரிக்கச் செய்தேன். பல்லடத்தைத் தொழிலில் பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்கச் செய்து தொழில் அபிவிருத்திக்கு வழிவகை ஏற்படுத்தினேன். பல்லடத்தில் கிராமங்களுக்கெல்லாம் சாலை வசதி, பேருந்து வசதி ஏற்படுத்தியது என் காலத்தில்தான். அது அந்தப் பகுதியில் உள்ள எந்த ஒரு நபருக்கும் தெரியாமல் இருக்க முடியாது. இப்போது நான் வென்றால் முன்பை விடவும் விஞ்சி நிற்க வேண்டும் என்று உறுதி கொண்டுள்ளேன். என் குடும்பத்தோடு இங்கேயே வந்து தங்கி விடுவது, தொகுதி மக்களை விட்டுப் பிரியாது இருப்பது, அவர்களின் அடிப்படைத் தேவைகளையும், உணர்வுகளையும் மதித்து அதனைப் பூர்த்தி செய்வது என்றொரு உறுதிப்பாடு எனக்குள் உள்ளது."

அ.தி.மு.க. வேட்பாளர் பழனிச்சாமியைத் தொகுதியில் பிடிக்கவே முடியவில்லை. அவரது கட்சிக்காரர்களுக்கே அவர் இருக்குமிடம் பற்றிய விவரங்கள் தெரியாதது ஆச்சரியமான விஷயம். ஆனாலும் இத் தொகுதியில் இரட்டை இலைச் சின்னத்துக்கு இருக்கும் ஆதரவைக் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது என்பதும் உண்மை!

— ரோஹிணி

[illegible]மச்சர் மு. கண்ணப்பன்

பெரியகுளத்தில் மோதுவது அ.தி.மு.க.வும் தி.மு.க.வும் அல்ல...

எல்லோருடைய கண்களும் ஆசையோடு பார்த்துக் கொண்டிருக்கும் தொகுதி பெரியகுளம். காரணம் சசிகலாவின் அக்காள் மகன் தினகரன் மோதும் தொகுதி என்பதுதான். பெரியகுளத்தில் அ.தி.மு.க.வுடன் மோதுவது, முன்னாள் அ.தி.மு.க.தான்; தி.மு.க. அல்ல! ஆம்; சென்ற தேர்தலில் சேடபட்டிக்கு சீட்டு கொடுத்ததால் கோபமான செல்வேந்திரன் தி.மு.க.வில் தம்மை இணைத்துக் கொண்டார். எனவே இது அ.தி.மு.க. Vs முன்னாள் அ.தி.மு.க.தான் என்று சலிப்பாகச் சொல்கிறார்கள், செல்வேந்திரனின் எதிர் கோஷ்டியில் உள்ள தி.மு.க. விசுவாசிகள்.

தினகரனுக்குப் பின்னால் பத்து கார்கள், முன்னால் டிரம் செட், பேண்ட் வாத்தியம் என்று அமர்க்களமான கூட்டம். செல்வேந்திரன் இன்னும் தேர்தல் செலவுக்குப் பணம் தேடிக் கொண்டும், தி.மு.க.வினரின் அதிருப்தியைப் போக்குவதற்கு என்ன வழி என்று யோசித்துக் கொண்டுமிருக்கிறார்.

ஆனாலும் "எங்கள் கூட்டணி நல்ல கூட்டணி, வாஜ்பாய் பிரதமர் ஆகணும் என்பதில் மக்களுக்குப் பெரிய ஆர்வம் இருக்கிறது, வேட்பாளராகப் போட்டியிடும் என் மேல் எந்தக் குற்றச்சாட்டும் இல்லை. அ.தி.மு.க., சார்பில் போட்டியிடும் தினகரன் வெளியூர் வேட்பாளர். புதிய தமிழகம் வேட்பாளர் நடிகர் மன்சூர் அலிகானும் வெளியூர் வேட்பாளர். உள்ளூர் வேட்பாளர் நான்தான். எப்போதுமே கைக்கெட்டிய தூரத்திலும் கண்ணுக்கெட்டிய தூரத்திலும் இருக்கிற வேட்பாளரைத்தான் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். ஏற்கெனவே இந்தத் தொகுதிக்குள் இருக்கும் போடியில் 89-ல் ஜெயலலிதா போட்டியிட்டு எம்.எல்.ஏ ஆனார். எம்.எல்.ஏ ஆன ஜெயலலிதா தொகுதிக்கு வரவில்லை. சட்டசபைக்கும் போகவில்லை. இரண்டு இடத்திலுமே ஆப்செண்ட். பெரிய தலைவர்ன்னு சொல்லிக்கிட்டு வெளியூரிலிருந்து வந்து மக்கள் கிட்டே வோட்டு வாங்கினவங்க மக்களை ரொம்ப ஏமாத்திட்டாங்க. அந்த ஏமாற்றத்தில் அனுபவம் பெற்ற மக்கள், இந்தத் தேர்தலில் வெளியூர் வேட்பாளர்களுக்கு வோட்டு போடக் கூடாதுங்கிறதில ரொம்ப ஸ்டிராங்கா இருக்காங்க!" என்கிறார்.



• உள்ளூர்ப் பிரமுகர்களின் ஆதரவு தினகரனுக்குத் தானா?

"சென்ற முறை நீங்கள் வெற்றி பெற்ற போது மதுரையில் வீடு பிடித்து இருந்து கொண்டீர்கள் என்று தினகரன் தரப்பில் சொல்கிறார்களே?"




தேர்தல் '99



• பளிச்சிடும் சுவர் விளம்பரங்கள்

"நான் அங்கு இருந்ததற்குக் காரணம் அப்போது மாவட்டத் தலைநகரம் மதுரை. கலெக்டர் ஆபீஸில் ஒரு வேலைனா மதுரைக்குத்தான் போகணும், ஆஸ்பத்திரியில சேர்க்கணும்னாலும் மதுரைக்குத்தான் போகணும். எஸ்.பி. ஆபீஸுக்கு போகணும்னாலும் மதுரைக்குத்தான் போகணும். சேடப்பட்டி தொகுதி மதுரைக்குப் பக்கத்தில இருக்கு. கொடைக்கானல் இன்னொரு பக்கம் இருக்கு. இந்த ஊர் மக்கள் எல்லாம் என்னைப் பார்க்கணும்னா தேக்கடிக்கு பக்கத்தில - கேரளா பார்டரில் இருக்கிற என்னோட சொந்த ஊரான கூடலூருக்கு வர முடியுமா? வந்தாலும் வேலை விஷயமா மறுபடி மதுரைக்கு வரணும்ல. என் மேல் வேறு குற்றச்சாட்டு கூற முடியாத காரணத்தால்தான் ஒப்புக்கு இதைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்."



• செல்வேந்திரன்



• மன்சூர் அலிகான்

"தினகரனை ஈஸியாக ஜெயிக்க முடியும்னு நினைக்கிறீங்களா?"

"அவர் பலவீனமான வேட்பாளர் என்பதுதான் என் கணக்கு. காரணம் அவர் மக்களோடு தொடர்பில்லாதவர். அரசியல் செய்து பழக்கம்,இல்லாதவர். ஹி இஸ் நாட் எ பாலிட்டீசியன். அரசியல்வாதி மக்களோட எவ்வளவு அணுக்கமாக, நெருக்கமாக இருக்கணும் என்பதில் அனுபவப்படாதவர். பெரியகுளத்துக்கு சேவை செய்யறதுக்காகத்தான் பெரியகுளத்தைத் தேர்ந்தெடுத்தேன்னு இங்க வந்திருக்கிறாரே... அப்ப மத்த தொகுதிகள் எல்லாம் ரொம்ப வளமா இருக்கா?"

"பெரியகுளம் தொகுதி 'இரட்டை இலை' போதை உள்ள தொகுதிதானே! நாவலர், ஜெயலலிதா, சேடப்பட்டி முத்தையா, எம்.ஜி.ஆர், எஸ்.எஸ்.ஆர் இப்படி..."

"இவங்க எல்லாம் ஜெயிச்சது உண்மை. போதைன்னு சொன்னா அது மூணு மணி நேரத்தில தெளிஞ்சுடும்; ஆனால், எம்.ஜி.ஆர் இருந்தபோதே நடராஜன் பெரியகுளத்தில் வெற்றி பெற்றிருக்கிறார். எம்.ஜி.ஆர் உயிரோடு இருந்தப்பவே தி.மு.க வெற்றி பெற்ற தொகுதியில் என்னால் இப்போது வெற்றி பெற முடியாதா? '96 தேர்தலில் ஞானகுருசாமி தி.மு.க மூலம் ஜெயிச்சு எம்.பி.யானார். கிட்டத்தட்ட 2 லட்சம் வோட்டுகளுக்கு மேலே அ.தி.மு.க வேட்பாளரைவிட அதிகம் வாங்கியிருக்கிறார்."

"முஸ்லீம் வாக்காளர்கள்...?"

"இஸ்லாமிய வாக்காளர்கள் தனக்கு வோட்டு போடுவாங்கன்னு தினகரன் நினைக்கிறார். கால் நூற்றாண்டு கால அரசியல் வாழ்க்கையில் இந்தத் தொகுதியில் நான் இருக்கிறேன். எனக்கும் இஸ்லாமிய குடும்பங்களுக்கும் நெருக்கமான தொடர்புண்டு. நான் அடிக்கடி இஸ்லாமியர்களுடைய மீலாது விழாவில் பேசுகிறவன், குறிப்பாக கம்பம் தொகுதி இஸ்லாமியர்கள் வோட்டை நான்தான் வாங்குவேன்."

"காளிமுத்து இது துரோகத்துக்கும் விசுவாசத்துக்கும் நடக்கும் போட்டினு சொல்றாரே?"

"நான் ஜெயலலிதாவுக்கு என்ன துரோகம் செஞ்சேன்? ஜெயலலிதா காலத்தில் நான் எந்தப் பதவியிலும் இல்லை. தினகரன் என்ன தியாகம் செஞ்சார்? தினகரனுக்கும் இந்த கட்சிக்கும் என்ன சம்பந்தம்? அ.தி.மு.க. கட்சியின் எந்தப் போராட்டத்திலாவது கலந்து கொண்டிருக்கிறாரா?"

- இப்படியெல்லாம் செல்வேந்திரன் சொன்னாலும் பெரியகுளம் தொகுதி முழுக்க தி.மு.க விளம்பரங்களை விட அ.தி.மு.க.வின் இரட்டை இலைகளே அதிகம். சினிமா பேனர் வரைபவர்கள்

அம்மாவையும் தினகரனையும் அசத்தலாக வரைந்திருக்கிறார்கள்.

புதிய தமிழகமோ... மன்சூர் அலிகானோ இன்னும் (சென்ற வாரம் வரை) எந்த வேலையையும் தொடங்கவில்லை. "புதிய தமிழகம் - த.மா.கா கூட்டணியை மக்கள் விரும்பவில்லையோ என்ற எண்ணம் மூப்பனார் கூட்டத்தில் ஏற்பட்ட கல்லடி சம்பவங்களிலிருந்து புரிகிறது" என்கிறார்கள் தொகுதி மக்கள்.

ஆகஸ்ட் 2ம் தேதியிலிருந்தே தினகரன் தொகுதியிலுள்ள இண்டு இடுக்குகளில் எல்லாம் முகம் காட்டி விட்டார். முக்குலத் தோரே பெரியகுளத்தில் அதிகமாக இருப் பதால் ஜாதி ரீதியாக தினகரனுக்கு அது பெரிய ப்ளஸ் பாயிண்ட் என்கிறார்கள். கையெடுத்துக் கும்பிடுவோருக்கெல்லாம் பையிலிருந்து வருவதைக் கையில் தருவதால் தினகரனைப் பார்க்க கூட்டம் அலை மோதுகிறது. படித்தவர்கள், ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகள் தினகரனுக்கு ஆதரவாக இருக்கிறார்கள்.

"கவிஞர் வைரமுத்துவின் தந்தையாரை தமக்கு ஆதரவு தர வைத்தது, மாளிகைப் பாறை கருப்பசாமி, கொடைக்கானல் சூரியனின் ஆதரவு என்று அந்தந்தப் பகுதிக்கு பிரபலமானவர்களை அழைத்து 'தினகரனுக்கு வாக்களியுங்கள்' என்று சொல்ல வைத்தது சாதனை மட்டுமல்ல ராஜதந்திரமும்தான்!'' என்கிறார்கள் அ.தி.மு.க.வினர்.

புதிய வாக்காளர்கள் சேர்க்கப்பட்ட போது முப்பதாயிரம் வாக்காளர்களைச் சேர்க்க வைத்தது அ.தி.மு.க.வினர் தான்.

தினகரன் வெளியூர் வேட்பாளர் என்ற பிரச்னைக்கு, ''வெளியாட்களை வைத் துத்தான் பெரியகுளம் தொகுதியே இருக் கிறது. வெளியூர்க்காரன் வந்தாத்தான் கொடைக்கானலில் பொழப்பு நடக்கும். இங்கதான் பஞ்சு, ஏலக்காய், மாம்பழம் வாங்க வரணும். வெளியூர் வேட்பாளர்ங்கிற சப்ஜெக்ட் இதுல அடிபட்டுடும்ல!'' என்கிறார்கள் அ.தி.மு.க.வினர்.

"**நா**ங்கள் ஐம்பது சதவீத வேலை களை முடிச்சப்பத்தான் தி.மு.க தனது வேட் பாளரையே அறிவித்தது. அதுவரை எதிரியே இல்லாம காத்தோடதான் சண்டை போட் டோம். தி.மு.க.காரங்க எங்களை வெளியூர்க் காரங்கன்னு சொல்லிக்கிட்டிருந்தப்ப நாங்க உள்ளூர்ல உட்கார்ந்து பிரசாரம் பண்ணிக் கிட்டிருந்தோம். இது தவிர போன முறை நாங்க பா.ஜனதா கட்சியோட கூட்டுச் சேர்ந்துனால முஸ்லீம் சமுதாயத்திலிருந்த 78 ஆயிரம் வோட்டுகள் எங்களுக்கு விழாம போயிடுச்சு. இந்த முறை அத்தனை வோட்டும் எங்களுக்குத்தான்!" என்று உற் சாகமாகச் சொல்கிறார்கள் அ.தி.மு.க.வினர்.

இத் தொகுதியின் கிராம மக்கள், இன் னும் இரட்டை இலையின் அடிமைகளாகத் தான் இருக்கிறார்கள். அ.தி.மு.க.வின் காளிமுத்து, காங்கிரஸ் நெல்லை கண்ணன் போன்ற பேச்சாளர்களின் பேச்சுக்கள் அவர்களை இன்னும் அ.தி.மு.க. கூட்டணி பக்கம் கூட்டி வரத்தான் செய்கிறது.

தினகரன் முன்னணியில்தான் இருக் கிறார். இருந்தாலும் சேடப்பட்டி முத்தையா இதுவரை இவரை ஆதரித்துப் பிரசாரம் செய்யாதது ஒரு குறைதான்.

கம்பம் செல்வேந்திரனுக்குநிறைய மைனஸ் பாயிண்ட்கள்.

மன்சூர் அலிகானுக்கு எல்லாமே மைனஸ் பாயிண்டுகள்தான்.

பெரியகுளத்தில் முத்தெடுக்கப் போவது... மைனஸ் பாயிண்டுகள் கம்மியாக உள்ள வேட்பாளர்தான்!

— பழ. சேதுராமன்

படங்கள்: ஜே.எஸ். சதீஷ்குமாரன்



"நம்ம பையன் தீவிர நெடுஞ்செழியன் ரசிகனா இருப்பான் போலிருக்கு!"

"எப்படிச் சொல்றே?"

"நான் பெயிலாகவில்லை... மார்க் சற்றே குறைவாகப் பெற்றேன்.... அவ் வளவுதாங்கறான்!"

— புளியரை கணேசன்

பி.ஜே.பி.யின் பிரசார கேசட்!

'குரை'க்கிறதா 'குறை'க்கிறதா?

இந்த வீடியோ டேப்பை மனத்திரையில் ஓடவிட்டுப் பாருங்கள். இரண்டு அலங்கார ரிக்ஷாக்களை வைத்துக் கொண்டு அரசியல்வாதி 'லலிதா அம்மா' நிற்கிறார். அருகில் நிற்கும் பிரஷாந்த் தாம்லே (மராத்தி நடிகர்) அவரிடம் உரையாடுகிறார்:

''உங்களுக்கெதுக்குங்க ரெண்டு ரிக்ஷா?''

''ஒண்ணு எனக்கு; இன்னொண்ணு என் செல்ல நாய்க்குட்டிக்கு...''

''ஓஹோ, ... , சுப்ரமணிய சுவாமிக்குன்னு சொல்றாங்களோ?'' (மனசுக்குள், சற்று உரத்த குரலில் சொல்லிக் கொள்கிறார்)

''சு.சாவை என்னிக்கோ வெளியே துரத்திட்டேன்; இது இத்தாலியிலிருந்து நான் இறக்குமதி செஞ்சிருக்கும் நாய்க்குட்டிக்கு...''

''அப்படியா? அது குரைக்குமா? கடிக்குமா?''

''குரைக்கும்; ஆனா மெதுவாத்தான் குரைக்கும். ஆனா அது அத்தனையையும் மொழி பெயர்த்தாகணும்...''

மொழி பெயர்க்காமலேயே உங்களுக்குப் புரிந்து விட்டதல்லவா?

தேர்தல் பிரசாரத்துக்கென்று பி.ஜே.பிகாரர்கள் தயாரித்திருக்கும் வீடியோ டேப் இது! இந்த அளவுக்கு பிரசாரங்களின் தரத்தைக் குறை(ர)க்க வேண்டுமா என்ன?



பிரசாதமா? பிரசாரமா?

என்னதான், 'கணபதி விழாவை பிரசார மேடையாக்கக் கூடாது' என்று தேர்தல் கமிஷன் கரடியாகக் கத்தினாலும், அதை எல்லாம் கேட்டுக் கொண்டிருக்க சிவசேனைக்காரர்களுக்குப் பைத்தியமா என்ன? கணேஷ் உத்சவங்களை நடத்தி நடத்தியே அரசு பீடத்தைப் பிடித்தவர்களால், பிள்ளையாரை எப்படிப் பிரசாரத்துக்கு அழைக்காமல் இருக்க முடியும்? நேரடியாக 'பேனர்களை' வைத்தோ, வேட்பாளர்கள் பெயரை எழுதியோ வைக்க முடியாதுதான்; அதனாலென்ன? பிள்ளையாரையும் அவரது சுற்றுச் சூழலையும் ஆரஞ்சு வர்ணத்தால் குளிப்பாட்டி விட்டால் போகிறது; நகரிலுள்ள கிட்டத்தட்ட 10,000 கணேஷ் உத்சவ் மண்டல்களையும் அந்தந்தத் தொகுதி வேட்பாளர்கள் அன்புடன் 'கவனித்துக்' கொண்டாலே போதுமே! பணம், பொருள் வகையறா மட்டுமல்ல; போலீஸ், கார்ப்பொரேஷன்... இத்யாதிகளிலிருந்து வரக் கூடிய தொல்லையையும் வேட்பாளர்களே சமாளித்துக் கொள்வதாக ஆங்காங்கே 'மெஸேஜ்' போய் விட்டது. இம்முறை கார்கில் போரில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதி திரட்டும் வேலையும் அநேகமாக பிள்ளையார்கள் தலையில் விழும்; என்னவோ... பிள்ளையாரையே வோட்டுப் போடச் சொல்லாதிருந்தால் சரி!

வந்து விட்'டான்'!

சென்ற சனியன்று, மும்பை சென்ட்ரலில், ப்ளாட்ஃபாரம் நெ.1ல், ராஜ்தானியில் வந்து இறங்க இருக்கும் உறவினர்களை வரவேற்க வந்தவர்களுக்கு ஒரு ஆச்சரியம்! திபுதிபுவென்று, ஒரு நூறு போலீசார் Ak-47,

• ராகேஷ் ஜா

• வி.ஐ.பி. வருகிறார்




வகையறாக்களை ஏந்தியவாறு நுழைந்து, இவர்களை ஓரங் கட்டினார்கள்; போர்ட்டர்களை விரட்டினார்கள்; டாக்ஸிக்காரர்களை பரிசோதனைக்குட் படுத்தினார்கள். எந்த வி.வி.ஐ.பி வரப் போகிறாரோ என ஆவலுடன் தலை நீட்டிய ஆர்விகளை 'லத்தி சார்ஜ்' செய்தார்கள். மாலையுடன் அந்த முக்கியஸ்தரை வரவேற்க சிலர் காணப்பட, ஒரு சிவசேனை கார்ப்பொரேட்டர் வேறு ஆசையுடன் காத்திருந்தார்... ஒரு மணி நேரம் காலதாமதமாக வந்த ராஜ்தானியிலிருந்து அந்த வி.ஐ.பி. இறங்கினார்... வீல்சேரில்... தலையில் 'புர்கா'வுடன்; நிமிட நேரத்தில் வேனில் ஏறிக்கொண்டு மறைந்து விட்டார். ''யாரவர்?... பாகிஸ்தானிலிருந்து வந்தவரோ? பாலஸ்தீனியராயிருக்கும்... இல்லை அரபு ஷேக்தான்...'' இப்படி பல யூகங்கள். மறுநாள் தினசரிகளில் செய்தி வந்ததும்தான் தெரிந்தது – அந்த வி.ஐ.பி, மும்பையின் புகழ் பெற்ற 'டான்' 'அரத்வின் நாயக்' என்பது! டில்லியில் ஒரு அரசியல்வாதி வீட்டில் குஷாலாகத் தங்கி விட்டு, நைசாக நேபாளத்துக்கு நழுவப் பார்த்தபோதுதான் பிடிபட்டிருக்கிறான். இவன் வரவை எதிர்நோக்கி ஆசையுடன் காத்திருந்த சிவசேனை கார்ப்பொரேட்டர், இவனது மனைவி நீதா நாயக்! வரவேற்பை வைத்துக்கொண்டு வருபவர் யார் என்பதை கணிக்கவே முடியவில்லை!

கல் நெஞ்'ஜா'?

'மெட்ரோஸிடி'க்களின் வாழ்க்கை மர்ம மயமாக ஆகிக் கொண்டு வருவது, பயமுறுத்துகிறதே!' பெரிய மீசை மொட்டைத் தலை கரித்தடியன்கள்தான் வில்லன்கள் என்பதில்லை; ஒயிட் காலர் வில்லன்களுமுண்டு என்பதை என்றோ உணர்ந்து கொண்டு ஜீரணித்தாகி விட்டது; வில்லத்தனம் செய்பவர்கள், அறிமுகமில்லாத, அதிக பழக்கமில்லாத புதியவர்களாக இருக்கத் தேவையில்லை என்பதையும் ஏற்றுக்கொண்டு ஏப்பம் விட்டாகி விட்டது; ஆனால் வில்லத்தனத்துக்கும் கல்வி நிலைக்கும் கூடவா இப்படி தொடர்பு விட்டுப் போக வேண்டும்? அடுத்த வீட்டில், மூன்றாவது ஆண்டு இஞ்சினியரிங் படிக்கும், பாங்க் மானேஜரின் பிள்ளையான ராகேஷ் ஜா, தமது 13 வயது மகனை கடத்திக் கொண்டு போய், அவன் தலையில் கல்லைப் போட்டு மயக்கமுறச் செய்து விட்டு, ஒன்றும் தெரியாதது போல் தம்முடன் சேர்ந்து அவனைத் தேடுவான் என்று ஜெமலானி நினைத்திருப்பாரா? மறுநாள் காலை இவர்களை ஃபோனில் மிரட்டுவதாக இருந்தானாம் ராகேஷ்! அவனுக்கு மாதா மாதம் கிடைக்கும் 2000 ரூபாய் பாக்கெட் மணியில் உருப்படியான செலவுகள் போக, மீறுவது ரூ. 800(!) தானாம்; அது ஹோட்டல்களிலும் 'பார்'களிலும் சென்று களிப்பதற்குப் போதுமானதாக இல்லையாம்! 'லாக்கப்'பிலிருக்கும் ராகேஷ், 'என் நண்பர்களைப் போல என்னால் செலவழிக்க முடியவில்லை என்பதால் இந்த கிட்-நாப்பிங் ஐடியா வந்தது' என்கிறானாம் போலீசிடம்! இவன் படிப்பது எலெக்ட்ரானிக்ஸா? 'கில்'லக்ட்ரானிக்ஸா?

— ஜெயஸ்ரீ ராஜ்



வர்த்தமானன் பதிப்பகத்தின் திருக்குறள் தொண்டு

நாமக்கல் கவிஞரின் ஈடு இணையற்ற உரையுடன் கூடிய திருக்குறள்

1,00,000

பேருக்குப் புத்தகம் மட்டும்

இலவசம்

நிர்வாகச்செலவு, விளம்பரச் செலவு, தபால் செலவு சேர்த்து ரூ. 21 தபால்காரரிடம் செலுத்தி நூலைப் பெற்றுக் கொள்ளலாம்.

அப்படியானால் 'புத்தகம் மட்டும் இலவசம்' என்பதன் பொருள்தான் என்ன ?

காகிதச் செலவு, அச்சிடும் செலவு, அட்டை, கட்டுமானச் செலவு ஆகியவை இலவசம்.

நேரில் பெற விரும்புவோர் பதிப்பகத்தில் ரூ.18 செலுத்திப் பெறலாம்.

கணந்தோறும் நவநவமாய்த் தோன்றும் காட்சி, திருக்குறளின் மாட்சி! திருக்குறளின் இந்த மாண்பினை உலகறியச் செய்துள்ளார், நாமக்கல் கவிஞர். எடுத்துக்காட்டாகச் சில:

'வினை செயல் வகை' என்னும் ஓர் அதிகாரத்தில் 10ல் 7 குறளுக்கு உரை வேறுபாடு காண்கிறார், கவிஞர். 'வினை செயல் வகை' என்றால் 'ஒரு செயலைச் செய்யும் முறை' என்பது பொருள். 1,2 குறள்களில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் 3ஆவது குறளான,

ஒல்லும் வாயெல்லாம் வினை நன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

என்பதற்கு **நாமக்கல் கவிஞர் காணும் உரை** : ''வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் செயலைச் செய்து விடுவது நல்லது. அந்த வாய்ப்பு இல்லாதபோது முன் எண்ணியபடி (மேற்குறளில் கூறியவாறு) காத்திருந்து செய்ய வேண்டும்.''

பரிமேலழகர் உரை : ''வினை செய்யுங்கால் இயலுமிடத்தெல்லாம் போரால் (தண்டம்) செய்தல் நன்று. அஃதியலாவிடத்து ஏனை மூன்று உபாயங்களுள் (சாம, பேத, தானம்) அது முடியும் உபாயத்தால் செய்க!''

பரிமேலழகரின் இந்த உரை இந்த இடத்துக்கு எவ்வளவு தவறானது என்பது படிக்கும் போதே தெரியும். வினை என்னும் சொல்லுக்குப்

‘போர்’ என்ற பொருள் திடீரென்று புகுத்தப்பட்டிருக்கிறது. இங்கே ‘போர்’ஏது? வினை என்ற சொல்லுக்கு இங்கே சிறிதும் பொருந்தாததும், திருவள்ளுவர் நினைக்கா ததுமான ‘போர்’ என்ற பொருளைப் புகுத்தியதால் சாம, பேத, தான, தண்டம் என வேண்டாதவற்றையெல்லாம் விளக்க வேண் டியதாகி விட்டது. மேலும் இந்தக் குறள் உரையில் பரிமேலழகர் வினை என்ற சொல்லுக்குப் போர் என்ற பொருளைப் புகுத்தி விட்டதால், இதற்குப் பின்னுள்ள ஏழு குறள்களிலும் அதே போரைப்பின் தொடர்ந்து இந்த அதிகாரத்தைப் ‘போர் செய்யும் முறை’யைச் சொல்லும் அதிகார மாக்கி ‘வினை செயல் வகை’ என்பதைப் ‘போர் செயல்வகை’ சொல்லுவதாக மாற்ற வேண்டியதாகி விட்டது.



அதனால் தொடர்ந்து வரும் ஏழு குறள்களும் தமக்குத் திருவள்ளுவர் கொடுத்த பொருள்களை இழந்து விட்டன. எப்படி என்பதை நாமக்கல்லாரின் இந்த உரை நூலில் கண்டு தெளிக !

இதுபோல் எண்ணற்ற குறள்களுக்கு அருமையான விளக்கங்களை அளித்துள்ளார், நாமக்கல் கவிஞர் .

மேலும் ஒவ்வோர் அதிகாரத்தில் உள்ள ஒவ்வொரு குறளுக்கும் தொடர்பு காட்டி அனைத்துக் குறள்களுக்கும் ஒரு கட்டுக் கோப்பை ஏற்படுத்தியுள்ளார்.

திருக்குறளுக்கு உரை வழங்கிய யாருமே (மு.வ. உட்பட) இதுபோல் ஒவ்வொரு குறளையும் தொடர்பு படுத்திக் காட்டியதில்லை. இதனால் என்ன பயன் எனின், பொருள் தெளிவு மட்டுமல்ல, குறளை நினைவில் வைத்துக் கொள்ளவும் இந்தத்‘தொடர்பு உரை’ பெரிதும் துணை செய்கிறது.

சொல்லை இழைத்துக் கவிஞர் அமைத்துள்ள இந்த உரைக் கோயிலில் தெய்வத் திருவள்ளுவரைத் தரிசித்து உய்தி பெறுவோமாக !

இந்த நூற்றாண்டில் மு.வ. அவர்கள் திருக்குறளைப் பொது மக்களிடையே அறிமுகம் செய்தார் என்றால், நாமக்கல்லார் அதனை மேலும் அழகு படுத்தியுள்ளார் ; மேலும் தெளிவு படுத்தியுள்ளார்.

காந்தி அடிகளின் கருத்துக்களை நாடெங்கும் பரவச் செய்தவர் என்ற வகையில் தான் நாமக்கல் கவிஞரைத் தமிழ் உலகம் அறியும். ஆனால் அவர், திருக்குறள் கருத்துக்களையும் அழகாக எடுத்துரைத்துள்ளார் என்பது பலருக்கும் தெரியாது.

தமிழர் அனைவரும் இதனை உணர வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த இலவச ஏற்பாடு!

கடிதம் எழுத வேண்டிய முகவரி : **வர்த்தமானன் பதிப்பகம்,** ஏ.ஆர். ஆர். வளாகம், **141,** உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை **-17,** பனகல் பார்க் அருகில்.

எமது அலுவலக வேலை நேரம் காலை 9.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை.

சுமார் எட்டு வருடங்களுக்கு முன்பு பக்கவாதம் போன்ற ஒரு நோயால் பாதிக்கப்பட்டு, பேச முடியாமல், ஒரு மளிகைக் கடை வைத்துப் பிழைப்பு நடத்தலாமா என சுகி.சிவம் யோசிக்க ஆரம்பித்தார் என்பதை நம்மால் நம்பத்தான் முடியவில்லை...

நான் அப்போது கோயம்புத்தூரில் இருந்தேன். முதுகுத் தண்டுவடமும், இடுப்பும் இணைகிற பகுதியில் ஒரு நரம்பு பிசகி, இடது பக்கம் முழுக்கத் தாங்க முடியாத வலி. மேடைகளில் காலை மடித்து உட்கார்ந்து சொற்பொழிவு ஆற்ற முடியாத நிலை. அப்பொழுது திருச்செந்தூரில் ஒரு சமயக் கூட்டத்தில் பேசச் சொல்லி எனக்கு அழைப்பு வந்தது. திருச்செந்தூரில் பேச்சாளர்கள் எப்போதுமே மேடையில் காலை மடித்துக் கீழே உட்கார்ந்து சொற்பொழிவு ஆற்றுவதுதான் வழக்கம். நான் என் நிலையை எடுத்துக்கூறி, மேடையில் நாற்காலி ஒன்றைப் போடச் சொன்னேன். இந்தப் புது வழக்கத்திற்கு முதலில் எதிர்ப்புக் குரல் கொடுத்தவர்கள், வேறுவழியில்லாமல் ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து போட்டார்கள். அதற்குப் பிறகு, திருச்செந்தூரிலிருந்து என்னைப் பேசச் சொல்லி அழைப்பு வரவே இல்லை.

எனக்குப் பேச்சுதான் தொழில். தொழிலை அதன் தர்மப்படி – முறைப்படி செய்வதுதான் நியாயம். உபன்யாசம் – சமயச் சொற்பொழிவு செய்பவர்கள் சம்மணம் இட்டு, கீழே உட்கார்ந்து சொற்பொழிவு செய்வதுதான் மரபு. என்னாலோ கீழே உட்காரவே முடியாத நிலை.

இது முதல் இடி! நாற்காலி ஆசை பிடித்த அரசியல்வாதி மாதிரி என் பிரச்னை உட்கார நாற்காலி கேட்டது. சமாஜங்கள்– கோவில்கள் – இவைதான் பெரும்பாலும் சமயச் சொற்பொழிவுக்கான களங்கள். இங்கு நாற்காலி போட்டுப் பேசுவது மரபு அல்ல.

நான் கேட்பது சிம்மாசனம் அல்ல; நாற்காலிதான். கேட்பது அகங்காரத்தால் அல்ல; உடல் பிரச்னைதான் என்பதைப் பல அமைப்பாளர்கள் தயங்கித் தயங்கி விளங்கிக் கொண்டார்கள். என் பணி தொடர்ந்தது!

ஆனால் அதை அடுத்து இறங்கிய இடி இன்னும் கடுமையானது. இடது பகுதி முழுவதும் கொஞ்சம் கொஞ்சமாகச் செயல் குறைந்தது. மரத்துப் போன மாதிரி சில நேரம். கை கால் பஞ்சு மாதிரி, லேசாவது சில சமயம். சில்லிட்டு ஈரத்துணி மாதிரி ஆவது சில தடவை! சில நேரங்களில் கை கால் அசைப்பதே மாபெரும் உழைப்பு மாதிரி அவஸ்தைகள்.

டீசல் வண்டியை ஸ்டார்ட் பண்ணுகிற மாதிரி கனைத்துக் கனைத்துக் குரலை உற்பத்தி பண்ணி உற்பத்தி பண்ணி பேச வேண்டிய கட்டாயம். அப்படியும் வண்டி உடனுக்குடன் ஆஃப் ஆகிவிடும்!

முதலில் பேசுவதற்கு சிரமமாக இருந்தது. பிறகு சாப்பிட முடியவில்லை. பிறகு குழறிக் குழறி புரியாத மாதிரி பேச்சு வந்தது. கால்



மளிகைக் கடை வைக்கவும் தயாரானேன்!

மணி நேரத்திற்குப் பிறகு குரலே எழாமல் போனது. வாயிலிருந்து எச்சில் வேறு இடதுபக்கம் வழிந்து கொண்டேயிருக்கும்.

மருந்துகளை மாற்றி, பிறகு மருத்துவர்களை மாற்றி, பலவகை முயற்சிகள். அப்போது கோவை அரசு மருத்துவமனை டீன் ஆகப் பணிபுரிந்த டாக்டர் முருகன் அவர்கள் என் பரம ரசிகர். எனக்காக நிறைய அக்கறை எடுத்துக் கொண்டார். இ.என்.டி. நிபுணர் டாக்டர் இராமலிங்கம் அவர்கள் வைத்தியத்தோடு speech therapy எடுத்துக் கொள்ள வைத்துக் கவனமாகப் பாதுகாத்தார்.

என்னைப் பரிசோதித்த நரம்பியல் நிபுணர், மூளையில் ஒரு வினாடி ரத்த ஓட்டம் நின்று ஓடியதால் வந்த பிரச்னைதான் இது என்று கண்டு சொன்னார். நிறைய மாத்திரைகளை எழுதிக் கொடுத்தார். "எத்தனை நாட்கள் இந்த மாத்திரைகளைச் சாப்பிட வேண்டும்" என்று நான் கேட்டதற்கு, அந்த டாக்டர் சிரித்தபடியே கூறினார், ''சாகிற வரைக்கும் சாப்பிடணும்!" என்று. "எதனால்?" என்று நான் கேட்க, "மாத்திரை சாப்பிடுவதை நிறுத்தினால், மறுபடியும் பேச முடியாமல் போகும். எனவே, வாழ்நாள் முழுக்க மருந்து சாப்பிட்டாக வேண்டும்'' என்றார் டாக்டர்.

என் குரல்தான் என் மூலதனம். என் தொழில் கருவி. என் வெற்றியின் வேர். எழுத்தாளர் உஷா சுப்பிரமணியன் ஒருமுறை சொன்ன விஷயம் சுவையானது. அவர் புதுமைப் பெண். கடவுள் நம்பிக்கை, மரபுகள் இதனால் பாதிக்கப்படாதவர். அவர் பலமுறை என் சொற்பொழிவுகளைக் கேட்பது உண்டு. அவர் சொன்னார் : "மிஸ்டர் சிவம்! உங்கள் கருத்துக்கள் பல எனக்கு உடன்பாடே இல்லை. ஆனாலும் உங்கள் குரல் ஆழமாகப் பிறரை ஊடுருவக் கூடியது! காரில் அவசரமாகப் பறந்து கொண்டிருந்தாலும் எங்கே உங்கள் குரல் கேட்டாலும் என்னால் மேலே போக முடியாது. உங்கள் குரல் அப்படி."

ஆதாரமான அந்தக் குரல் சேதாரம் ஆகி விட்டது! சாதாரணமாகப் பேசுவதே களைப்பாக்கி விடும். மேடைப் பேச்சு பெரும் தண்டனை.

பேச்சுப் பயிற்சி கொடுத்த அன்பரோ உணர்ச்சிவசப்படாது பேசச் சொன்னார். உணர்ச்சிவசப்பட்டால் குரல்வளை பாதிப்படையும் என்று புரிய வைத்தார். உணர்ச்சி இல்லாமல் மேடையில் பேசினால் யார் ரசிப்பார்கள்?

நான் மனம் வெறுத்துப் போனேன். கோவையில் நான் குடியிருந்த வீட்டுக்குக் கீழே ஒரு மளிகைக் கடை இருந்தது. அந்த மளிகைக் கடைக்காரர் வேறு இடத்திற்குப் போய்விட்டால், அதை எடுத்து நடத்தி பிழைத்துக் கொள்ளலாமே என யோசிக்க

மறுபிறவி — சுகி.சிவம்

ஆரம்பித்தேன்.

பேசுவதற்காக நான் எழுதி வைத்திருந்த குறிப்புகளைப் பார்க்கும்போதெல்லாம் எனக்குக் கண்ணீர் வரும். அப்போது எனக்கிருந்த ஒரே ஆறுதல் ரசிகர்கள் எழுதிய கடிதங்கள்தான். அப்போதுதான் ஒரு பெண்ணிடமிருந்து எனக்கு வந்த ஒரு கடிதத்தை மறுபடி படிக்க நேர்ந்தது. வாழ்க்கையில் தாம் பட்ட அடிக்கு ஒரே மாற்று தற்கொலைதான் என நினைத்த அந்தப் பெண்ணுக்கு, நண்பரொருவர் ஒரு கேசட்டைக் கேட்கச் சொல்லிக் கொடுத்தாராம். அந்த கேசட்டில் 'எது வீரம்?' என்ற தலைப்பில் நான் உரையாற்றியிருந்தேன். வாழ்க்கையில் தீர்க்க முடியாத பிரச்னை என்று எதுவுமேயில்லை எனத் தொடர்ந்த என் பேச்சைக் கேட்ட அந்தப் பெண்மணி, தமது தற்கொலை முயற்சியைக் கைவிட்டதாக எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். இதுபோன்ற கடிதங்களும், நம்பிக்கையுமே எனக்கு மறுவாழ்க்கை ஏற்படக் காரணமாயிருந்தன.

பிறகு இயற்கை உணவு, இயற்கை வைத்தியம் என்று எனது மருத்துவ முறைகளை மாற்றிக் கொள்ள ஆரம்பித்தேன். ஆயில் மஸாஜ், மென்மையான பேச்சுப் பயிற்சி, சித்த வைத்தியம், அக்குபங்க்சர் எனத் தொடர்ந்த புதிய வைத்திய முறைகளில் நல்ல பலன் கிடைத்தது. பேச்சுடன் குரலும் மெல்ல மெல்ல வசமானது.

இப்போதும் தொண்டை கொஞ்சம் அவ்வப்போது சிக்கல் கொடுக்கும். அப்போதெல்லாம் டீஸல் லாரியை ஸ்டார்ட் செய்கிற மாதிரி கனைத்தது போய் - மாருதி பெட்ரோல் என்ஜின் ஸ்டைலில் மினிமமாகக் கனைத்தே குரலை வழிக்குக் கொண்டு வருகிறேன்.

என்ன செய்ய? ஒரு சிறந்த மளிகைக் கடைக்காரர் சேவையைப் பெற தமிழ் மக்கள் கொடுத்து வைக்கவில்லை. இருந்த இடத்தில் பணம் சம்பாதிக்க என் ஜாதகத்தில் இடம் இல்லை.

மூன்று மாதம் தமிழ் மேடைகளில் காணாமல் போயிருந்த என்னைத் தமிழ் மேடைகள் மறுபடியும் ஏற்று வாழவைத்தது ஒரு மறுபிறவிதான்!

சந்திப்பு : **கே. பாலசுப்ரமணியன்**



அரசின் தனிச் சிறப்பு!



சென்னை நகர்ச் சாலைகளிலுள்ள மரங்களெல்லாம் அநியாயத்துக்கு வெட்டித் தள்ளப் பட்டுக் கொண்டிருப்பது ஊரறிந்த விஷயம். நேர்த்திக்கடன் போல இவற்றை வெட்டிக் கொண்டிருப்பது யார்? விளம்பரப் பலகைகளின் (Hoardings) சொந்தக்காரர்கள் தான் என்பது நாடறிந்த - ஆனால் அரசாங்கத்துக்கு மாத்திரம் சுத்தமாகத் தெரியாத - ஒரு ரகசியம்!

அண்மையில் கிண்டி - நேரு சிலை சந்திப்புக்கருகில், சாலையோரங்களிலும் இருவழிச் சாலைகளைப் பிரிக்கும் வகையில் சாலைகளின் நடுவிலும் வைக்கப்பட்டிருந்த மரங்கள், வளர்ந்து விட்டால் தங்கள் விளம்பரப் பலகைகளை மறைத்து விடுமே என்கிற முன்னெச்சரிக்கையோடு வெட்டிச் சாய்க்கப்பட்டதைத்தான் அருகிலுள்ள படங்களில் பார்க்கிறீர்கள். எத்தனை முறை எழுதினாலும் அரசு கண்டு கொள்வதேயில்லை என்பதுதான் தனிச் சிறப்பு.

— இளங்கோவன்

சூழிகளில் எந்தத் தவறுமில்லை - 'பென்'னேதான்! சாதாரணமாக நினைத்து விடாதீர்கள்; பிள்ளையாருக்கே சுழி போடும் பென்! 'சும் செப்டம்பர்' ட்யூனுக்கென்று, பம்பரமாய்ச் சுழன்று, ஆட்டமாய் ஆடும் 'பென்'...

மும்பையில் பகட்டும் படாடோபமுமாக, வருடந்தோறும் செப்டெம்பரில் நடக்கும் பத்து நாள் கணபதி விழாவுக்கென்று, பத்து மாத காலமாக உழைத்து, வியர்வை சிந்தும் 'பென்'.

பிரமிக்க வைக்கும் பத்தடி இருபதடி விசுவரூபர்கள்தான் என்றில்லை; பக்திக்கென்றே வாமனர்களாய் வீற்றிருக்கும் பூசனைக்குரிய பிள்ளையார்களையும், ஃபாமிலி இஃபக்டுக்கென்று சூழ நிற்கும் சிவ - பார்வதி, திருமால் - மஹாலக்ஷ்மி, கார்த்திக் - மயில், மூஞ்சூறு குடும்பங்களையும் ஸ்பெஷல் இஃபெக்டுக்கென்று காந்திஜி முதல் கார்கில் ஜவான் வரைவிலுமானவர்களையும் சிருஷ்டிக்கும் பிரம்மாக்கள் அடங்கிய 'பென்'.

பென்னும் அதன் சுற்றுச் சூழலிலுள்ள மற்ற சின்னஞ்சிறு கிராமங்களும் மினி பிரம்ம லோகங்கள்தான்!

வீட்டுக்கு வீடு முன்பக்கம் கடை, பின்பக்கம் வீடு கம் தொழிற்கூடம்! மும்பையில் பிள்ளையாருக்கிருக்கும் மவுசையும், விழாவுக்கென்று கரையும் கோடிகளையும் மனத்தில் கொண்டு, அதன் சிருஷ்டிகர்த்தாக்கள் ஏதோ குபேரர்களாயிருப்பார்கள் என்ற நினைப்பில், அந்த வீடுகளுக்குள் எட்டிப் பார்த்தால், பயங்கர ஷாக்!

முதலில் தென்பட்ட 'கணேஷ் மூர்த்தி கலாகேந்திரா'வுக்குள் நுழைந்தோம். வரிசையாய் வீற்றிருந்த பிள்ளையார்கள் வரவேற்றனர். கடையின் சொந்தக்காரரான திலீப் கிஸன் ராவ், ஒரு ஸ்டூலை தூசு தட்டி நமக்கு ஆசனம் அமைக்கிறார். ஒடிந்து விழுந்து விடுவது போலிருந்தாலும், துடியாயிருந்த மனைவி நளினி, ஒரு பிள்ளையாருக்கு ஆரஞ்சு வர்ணக் குழம்பை வரிந்து வரிந்து பூசிக் கொண்டிருந்தார்.

"என்ன பண்ணிக்கிட்டிருக்கிங்க?"

"இது ரப்பர் சாந்து; கோட்டிங் மேல கோட்டிங் குடுத்து காய வைக்கணும்; அப்புறம் ரப்பர் ஷீட்டை அப்படியே உருவி எடுப்போம்; அதில் பதிந்திருக்கும் பிள்ளையார் உருவம்தான், மற்ற எண்ணற்ற பிள்ளையார்களுக்கு முன்னோடி...

"முதல்லேர்ந்து சொல்லுங்களேன்..."

அதன் பிறகு திலீப் மராத்தியிலும், நளினி இந்தியிலுமாக, செதுக்கிய விநாயகர்களைப் பற்றிய டாகுமெண்டரி இதோ...



ராஜஸ்தானத்திலிருந்து இறக்குமதித்த மண்தான் அடிப்படை; இதை மொத்தமாக சில வியாபாரிகள் வாங்கி வந்து விநியோகித்து விடுவார்களாம். அந்த மண்ணால், ஒரு 'மாடல் பிள்ளையாரை' வடிவமைத்துத் தருவது சிலை வடிக்கும் சிற்பி ஒருவர். இதற்கென பிரத்யேகக் கலைஞர்கள் உள்ளனராம். அந்தப் பிள்ளையாரை வைத்துக் கொண்டுதான் இவர்கள் தங்கள் பிள்ளையார் பிஸினஸை துவங்குகிறார்கள்.

ரப்பர் சாந்தை குழைத்துப் பூசிப் பூசி காயவைக்கிறார்கள்; ஒரு வாரத்தில் இது கெட்டிப்பட்டு விடும்; அதை மிக ஜாக்கிரதையாக உருவி எடுக்கிறார்கள். அதற்குள் பிள்ளையாரின் அங்க அவயவங்களெல்லாம் மிக நுணுக்கமாக ரப்பரில் பதிந்துவிடும். பின் ப்ளாஸ்டர் ஆஃப் பாரீசை அதற்குள் அடைத்து, வெளிப்புறங்களில் கிட்டத்தட்ட பிள்ளையாரின் வடிவமைப்பில் இருக்கும் 'கவரால்' (டை மெஷினில் செய்தது) முட்டுக் கொடுத்து, துணியால் இறுகக் கட்டி வைத்து விடுகிறார்கள். சிறிது நேரத்தில் ப்ளாஸ்டர் ஆஃப் பாரீஸ் கெட்டிப்பட, பிள்ளையாரின் முகப்புத் தோற்றம் வடிவமைந்து விடுகிறது.

பிறகு கால், கை, மூஞ்சூறு முதலான பாகங்களை இதே



முறையில் தனித்தனியாகச் செய்து, பிரதான உருவுடன் ஒட்டவைத்து விடுகிறார்கள். இறுதியாக வர்ணம் பூசுவது; இதற்கெனவும் கலைஞர்கள் உண்டு; எட்டுமணி நேர வேலைக்கு அறுபது ரூபாய் கூலி.

மே மாதத்திலேயே வருடாந்தர ஆர்டர்கள் கிடைத்து விடுமாம். "ஒன்றிலிருந்து ஒன்றரை லட்சங்களுக்கு புக் ஆகும்; எல்லாம் 10,000 பிள்ளையார்கள், 20,000 கணபதிகள் என்று 'பல்க்' ஆர்டர்கள்தாம்..."



அழகிய பெண்ணே...

"லாபம் எவ்வளவு கிடைக்கும்?"

"ஒரு முப்பதாயிரம் தேறும்."

"இதை வைத்துக் கொண்டுதான் வருடம் முழுவதும் ஓட்டியாக வேண்டும்; மூன்று பெண்கள், ஒரு பிள்ளை, என் கணவர், நான்... இத்தனை பேருக்கும் இதெப்படி போதும்? அதனால் கடன் வாங்க வேண்டி வரும்; வங்கியில் 25 ஆயிரம் வரை கடன் கொடுப்பார்கள்; மாதா மாதம் ஒழுங்காக வட்டி கட்டவே சில சமயம் உன்பாடு என்பாடாகி, தெரிந்தவர்களிடம் கையேந்தும் நிலை ஏற்பட்டதுண்டு; ஆனால் பட்டினி கிடந்தாவது வட்டி கட்டி விடுவோம்; இல்லாவிட்டால் மறுமுறை கடன் கிடைக்காதே...?" என அங்கலாய்க்கிறார் நளினி.

ஒரு இரண்டடிப் பிள்ளையாரைச் சுட்டி, "இதென்ன விலை?" என்றோம்.

"இது 200 ரூபாய். கொஞ்சம் பெரிசு 275 ரூபாய்!" என்றார் நளினி.

"ஆனால் மும்பையில் இதற்குக் குறைந்தது 500 ரூபாய் சொல்வார்களே!" என்றதற்கு, "தெரியும்; இடைத்தரகர்கள் இல்லாமல் நாங்களே மும்பைக்குச் சென்று, தாதர், பரேல் பகுதிகளில் கடை போட்டுப் பார்த்தோம்; ஆனால் 'பக்கா' கடைக்கு வாடகை எக்கச்சக்கம்; நடைபாதையில் போட்டாலோ போலீஸ், தாதாக்களின் மிரட்டல்; என்ன செய்வது? அரசாங்கமும் எங்களுக்குச் சலுகைகள் வழங்குவதில்லை" என்றார் திலீப்.

"இவள் என் மூத்த பெண் சரிகா; பத்தாவது படிக்கிறாள். இன்னும் இரண்டு 'விஷயம்' (சப்ஜெக்ட்) பாக்கி இருக்கிறது; குழந்தைகளாவது நன்றாகப் படித்து, வேறு வேலை பார்க்க வேண்டுமென்றுதான் ஆசை! இந்தத் தொழிலுக்கும் ஓரளவு பழக்கியிருக்கிறோம். ஆர்டர்கள் அதிகமாக இருக்கும் சமயங்களில் உதவிக்கரங்கள் நிறைய தேவைப்படுமே?" என்று புலம்பும் நளினி, "ஒருமுறை எங்களைப் போன்றவர்களின் நடைமுறைப் பிரச்னைகளை டி.வி.யில் படமெடுத்துக் காட்டினார்கள். நாங்கள் கூட டி.வி.யில் வந்தோம்; ஆனால் எங்கள் நிலைமையில் எந்த மாற்றமுமில்லை" என்கிறார்.

— ஜெயஸ்ரீ ராஜ்



முத்தையன் நம்பிக்கையோடு காரில் ஏறிப் புறப்பட்டார். நாலைந்து கார்கள் பின் தொடர்ந்தன. அந்தப் பாராளுமன்றத் தொகுதியின் குறிப்பிட்ட கடற்கரை கிராமத்தை நோக்கி கார்கள் விரைந்தன.

முத்தையன் ஆறாவது தடவையாக அதே பாராளுமன்றத் தொகுதியில் நிற்கிறார். இதற்கு முன் ஐந்து முறையும் அமோக வெற்றி! டெல்லி பயணம். காக்டெய்ல் பார்ட்டிகள். இரவு விடுதிகளில் கோதுமை நிற நடனப் பெண்களின் தரிசனம். வெவ்வேறு மாநில அரசியல் வித்தகர்களின் நட்பு. பல வகைகளிலும் வந்து குவிந்த கமிஷன் கரன்சிகள். அடடா... இதுவல்லவா வாழ்க்கை! எதையுமே அவரால் மறக்க முடியவில்லை. மறந்தது-வோட்டுப் போட்டவர்களின் எதிர்பார்ப்புகளைத் தான்!

"முத்தண்ணே... இந்தத் தடவையும் எப்படியாவது ஜெயிச்சிடு! நம்ம கூட்டணி ஆட்சிதான்னு ஆய்ட்டா, ராஜாங்க மந்திரின்னாவது போட்டுத் தரச் சொல்றேன்..." தலைவர் சென்னை வீட்டில் வைத்துச் சொன்னது இன்னும் காதை மயக்கிக் கொண்டேயிருந்தது. சும்மாவா? அமைச்சரானால் இன்னும் எத்தனை கோடி பார்க்கலாம்!

ஆயிற்று. வேட்பு மனுதாக்கல் முடிந்த கையோடு கைத்தடிகளையும் அழைத்துக் கொண்டு 'பெரியவர் பாவண்ணா'வை சந்தித்து ஆசிபெற புறப்பட்டு விட்டார். பாவண்ணாவின் ஆசியை விட அவரின் நெஞ்சுப் பையில் இருக்கும், அந்த கடற்கரையோர சட்டமன்றத் தொகுதியின் முக்கால்வாசி வோட்டுகள்தான் அவரது முக்கியக் குறி! போன தடவை, வெற்றி மதில் மேல் பூனையாக இருந்தபோது, கதிகலங்கிப் போனவர், ஓடோடிப் போய் பெரியவரின் காலில் விழுந்து கதறினார். 'நீங்க பிச்ச போட்டேன்னு சொன்னாத்தான் கால விடுவேன்'னு விட்டர் விட்டராய்க் கண்ணீர் விட பெரியவர் நெகிழ்ந்து போனார். ஆனாலும், திடீரென மூடப்பட்ட மத்திய அரசாங்கத்தின் உப்பளம் மீண்டும் செயல்பட ஆவன செய்ய வேண்டும். உப்பளம் செயல்படத் தொடங்கினால் இப்போது கால் கஞ்சி குடிக்கும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் முழுச் சாப்பாடு சாப்பிட உதவியாக இருக்கும் என்று பெரியவர் கோரிக்கை வைக்க, 'ஜெயிச்ச அடுத்த மாதமே உப்பளம் செயல்பட ஆரம்பிக்கும். வோட்ட மட்டும் போடச் சொல்லுங்க. அப்புறம் பாருங்க என்னோட பவரு...'' என முத்தையன் கெத்தாகச் சொல்ல, பாவண்ணாவும் அமோக ஆதரவு தர அந்தத் தடவை ஜெயித்து விட்டார்.



தம்பிக்கோட்டை பத்மினிகார்த்திக்

ஆனால், ஜெயித்த பின் முத்தையனுக்குத் தொகுதியே மறந்து போய் விட்டது. சாகும் தறுவாயில் ஆக்ஸிஜன் கொடுத்து உயிர் பிழைக்க வைத்த பெரியவர் – ஞாபகத்துக்கு வரவேயில்லை! உப்பளப் பிரச்னையைத் தூக்கி தூர வீசியவருக்குக் கனவிலும் நனவிலும் நினைப்பெல்லாம்... கரன்சி! கரன்சி! கரன்சி!

'இனி, ஐந்தாண்டுக்குக் கவலையில்லை' என மிதந்தவருக்கு திடீர் ஆட்சிக் கவிழ்ப்பு புளியைக் கரைத்தது. கவலைப்பட்டார். அப்போதுதான் தொகுதிக்குக் கொடுத்த வாக்குறுதிகள் ஊடுருவல்காரர்களின் நெஞ்சுக்கு எதிரே குறிபார்த்த கார்கில் துப்பாக்கிகளாய்த் தெரிந்தது. இருந்தாலும் இந்திய வாக்காளரைப் பற்றிய அவரது கணிப்புக் கணக்கு கொஞ்சம் தென்பு கொடுத்தது.

எத்தனைதான் கோடி கோடியாய் லஞ்சம் வாங்கிக் குவித்தாலும் ஜெயின்ட் ஜார்ஜ் கோட்டையையே பட்டா போட்டுக் கொண்டாலும் எதிர்க்கட்சிகள் அதுபற்றி மேடைக்கு மேடை தந்தனா பாடினாலும் 'என் வளர்ச்சியைக் கண்டு வெதும்பிப் போனவர்களின் வார்த்தை அது. மறந்து விடு மாணிக்கமே! நான் என்றுமே உன்னை உயர்த்துவதற்காகப் பிறவியெடுத்தவன். நான் என்றும் உன் காலடியிலேயே உனக்கு பணி செய்ய காத்துக் கிடக்கிறேன். அது உனக்குத் தெரியும்! மறக்காமல் வோட்டைப் போட்டு விடு!'' என டயலாக் அடித்தால், குத்து குத்தென்று வாக்குச் சீட்டில் குத்திவிட மாட்டார்களா? முத்தையன் திடமாக நம்பினார்.

சரி, தொகுதி மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவில்லையே எனக் கேட்டால், அதற்கும் எதிர்க்கட்சிக்காரன்தான் காரணம் என ஒரு தடாலடி நாடகம் போட்டால் போதும். மறுபடியும் புதிய புதிய வாசனை வாக்குறுதிகளை அள்ளி வீசி, இந்தத் தடவை நிறைவேற்றாவிட்டால், 'மக்களே என்னை முச்சந்தியில் நிற்கவைத்து ஆளாளுக்குச் சாத்துங்கள். அதற்கு உங்களுக்கு உரிமையிருக்கிறது!' என ஒரே போடாய்ப் போட்டுவிட வேண்டியதுதான். மனதுக்குள் வியூகம் வகுத்து விட்டார்.

அதற்கு முன்னதாக, முதலில் முக்கியமாக பெரியவரின்



தேர்தல் முடிவ



மிமிக்ரி தெரிந்த விக்கெட் கீப்பர்!

விக்கெட் கீப்பர் மோங்கியாவுக்குப் பதிலாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கும் எம்.எஸ்.கே. பிரசாத், சுந்தரத் தெலுங்கர். பேட்டிங்கிலும் கெட்டிக்காரர். மிமிக்ரி இவரது கைவந்த கலை. தென்மண்டல அணியில் விளையாடியபோது கூட விளையாடிய ஸ்ரீநாத், ராபின்சிங், கும்ப்ளே போல 'பௌலிங் ஆக்ஷன்' செய்து அசத்திவிட்டார்!

– சிம்மம்

ஆதரவைப் பெற வேண்டும். அதை உறுதியாக்கிக் கொண்டுதான் மற்ற பகுதிகளுக்குப் போகவேண்டுமென்று புறப்பட்டு காரில் போய்க் கொண்டிருக்கிறார்.

பெரியவர் வீட்டு வாசலில் நின்ற மகிழ மரங்களின் அடியில் கார்கள் போய் நின்றன. முத்தையன் இறங்கி, திறந்த அகன்ற திண்ணையைப் பார்த்தார்.

பெரியவர் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்தார்.

மாநிறத்துக்குச் சற்று கூடுதலான நிறம். நடுத்தர உயரம். கனத்த சரீரம். கண்களில் நூறு சூரியப் பிரகாசம். தோற்றத்தில் எதிராளியைக் கலங்கடிக்கும் கண்ணியமான அச்சுறுத்தல். முத்தையன், பார்லிமெண்டில் கத்தி ஆர்ப்பாட்டஞ் செய்யும் பலரைப் பார்த்து பயப்படாதவர்தான். ஆனால், பெரியவரின் தோற்றம், ப்ளஸ் வாக்குறுதியைக் காற்றில் விட்டது இரண்டும் சேர்ந்து ஒருகணம் கதிகலங்க வைத்தது. இருந்தாலும் சமாளித்து கூப்பிய கையுடன் முகத்தைப் பூக்கவைத்து அவரை நோக்கிப் படைகள் பின்தொடரப் போனார்.

பெரியவரும் எதையும் காட்டிக்கொள்ளாமல் எழுந்து பளீரென முகம் மலர, "வாங்க எம்.பி. ஸார்...!" என வரவேற்ற பாணியே முத்தையனுக்கு புதுப் பாணியை கற்பித்தது. அந்த வித்தியாசமான பாணியில் மயங்கித்தானோ என்னவோ சூப்பர் ஸ்டார் முதல் சூப்பர் அரசியல்வாதிகள் வரை அடிக்கடி வீடு தேடி வந்து விருந்துண்டு செல்கிறார்களோ...

முத்தையன் சட்டென அவர் பாதங்களைத் தொட்டு வணங்கி அங்கேயே தரையில் அமர்ந்து கொண்டார். பெரியவருக்குப் புரிந்தது. காட்டிக் கொள்ளவில்லை.

வந்த நோக்கத்தை லாகவமாய் தெரியப் படுத்தினார். பெரியவர் சிந்தனைக்குப் போனார். முத்தையனின் நெஞ்சு 'திக் திக்'கென்றது. சில நிமிடங்களுக்குப் பின், "விருந்து தயார் பண்ணச் சொல்றேன். எல்லாம் சாப்டுத்தான் போகணும். சாப்டுக்கிட்டே பேசுவோம்..." பெரியவர் சொல்லிவிட்டு எழுந்து உள்ளே போய் பணியாளைக் கூப்பிட்டு காதில் ஏதோ சொன்னார். அவன் தலையாட்டிவிட்டு அவசரமாக வெளியில் புறப்பட்டுப் போனான்.

திடீரென வடகிழக்கு பருவக்காற்று மேகங்களைக் கொண்டு வந்து குவித்தது. க்ளைமேட் 'ஜில்'லானது. ஆனால் முத்தையன் கோஷ்டியால் குளுமையை அனுபவிக்க முடியவில்லை. முடிவு என்னவாக இருக்கும்? டென்ஷனில் நேரம் வெப்பமாய் ஓடியது.

அரைமணி நேரத்துக்கெல்லாம் சுற்று வட்டாரத்திலிருந்து பத்து இருபதென கும்பல் கும்பலாக வந்து பெரியவருக்கு வணக்கஞ் சொல்லி குவியத் தொடங்கினர். அவர்கள் முத்தையனை கண்டுகொள்ளவேயில்லை. அவருக்குக் கலக்கமாக இருந்தது. ஆனாலும் பெரியவர் இருக்கும்போது பயப்பட வேண்டியதில்லை என ஆசுவாசமானார். இங்கே எதற்கு இத்தனை கூட்டம்? கேள்வி எழுந்தது. பெரியவரிடம் கேட்கத் தயக்கமாக இருந்தது. மெதுவாக கும்பல் ஆயிரத்தைத் தாண்டி விட்டது. ஆனாலும் சிறு சத்தம் கூட எழுப்பாமல் அமைதி காத்தது. பெரியவரிடம் அத்தனை மரியாதை.

திடீரென ஊஞ்சலை விட்டு எழுந்த பெரியவர் வாசலுக்கு வந்து கூட்டத்தை வணங்கினார். அனைவரும் கையெடுத்துக் கும்பிட்டு அவரின் வார்த்தைக்கு பயபக்தியுடன் காத்திருந்தனர். அவர் திரும்பி முத்தையனை பக்கத்தில் வருமாறு சைகை செய்தார். அவரும் அவசரமாகப் பக்கத்தில் வந்து நின்றார்.

"மீண்டும் செயல்பட வைக்கிறேன்னு உறுதி சொல்லிட்டுப் போன உப்பளம் இன்னும் செயல்பட ஆரம்பிக்கல. ஆனாலும் பரவாயில்ல. இது சம்பந்தமா நீங்க இது வரைக்கும் என்ன ஸ்டெப் எடுத்தீங்க? யார் யாரையெல்லாம் பாத்துப் பேசுனீங்க,

அதப்பத்தி முழுசா உங்கள நம்பி வோட்டுப் போட்ட இந்த ஜனங்ககிட்ட சொல்லுங்க!'' – ராணுவத் தளபதியின் உத்தரவு போலிருந்தது.

முத்தையனுக்கு வாய் அடைத்துக் கொண்டது. இதுவரை தயங்காமல் பொய் மூட்டைகளை இடம் பாராது அவிழ்த்து விட்டவர்தான். ஆனால் பெரியவரின் தோரணை நாக்கை கட்டிப் போட திணறிப் போனார்.

''சரி, இதுவரைக்கும் செய்யல. இருந்தாலும் இப்பவும் உங்களுக்குத்தான் வோட்டு போடச் சொல்லப் போறேன்...''

முத்தையன் திகைப்புடன் பார்த்தார்.

''இந்தத் தடவை வெறும் வாக்குறுதியை மட்டும் நம்பி வோட்டுப் போட மாட்டாங்க. நீங்க என்ன பண்றீங்கன்னா, உங்க சொத்து முழுசையும் என் பேர்ல எழுதிக் கொடுத்திடுங்க. இவங்க வோட்டுப் போட்டு ஜெயிக்க வச்சிடுவாங்க. ஜெயிச்சவுடன் மொதக் காரியமா உப்பளத்த செயல்பட வைங்க. அப்படிச் செயல்படலைன்னா... நீங்க எம்பேர்ல எழுதிக் கொடுத்த சொத்தை உங்கள நம்பி வோட்டுப் போட்ட இந்த ஜனங்களுக்கு பிரிச்சி எழுதிக் கொடுத்திடுவேன். என்ன எம்.பி. ஸார், சரிதானே?''

அவ்வளவுதான். முத்தையனுக்கு இக்கென்றது. ஒவ்வொரு பகுதியிலும் மக்கள் இப்படிக் கேட்டால் என் கதி என்னாவது? இவங்களுக்குத் தொண்டு செய்யவா எம்.பி. ஆகணும்னு நெனைச்சேன்? இந்தத் தடவை அமைச்சரானா இன்னும் ஒரு பத்துத் தலை முறைக்கு சேத்துடலாம்னு கணக்குப் போட்டா, பெரியவர் கணக்கையே மாத்திப் போடுடா மச்சிங்கிறாரே. இது சரிப்பட்டு வராதென்ற முடிவுக்கு வந்தவர், பெரியவரிடம் சொல்லிக் கொள்ளாமல் விருட்டென எழுந்து காரை நோக்கிப் போனார். படையும் மௌனமாய்ப் பின்தொடர்ந்தது.

பெரியவரிடம் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டவரின் சுயநலப் போக்கு கண்டு கும்பல் எரிச்சலானது. முத்தையனின் வேஷம் அங்கே கலைந்து போனது. டென்ஷனான கூட்டம் முத்தையனுக்கு எதிராக கோஷம் போட ஆரம்பித்தது.

காருக்குள் ஏறியிருந்த முத்தையன் பயந்து போய் உடனடியாகக் காரை எடுக்கச் சொன்னார். இங்கேயே இப்படியென்றால்... மற்ற பகுதிகளுக்கு இது, ஆரம்பமோ?

முத்தையனுக்கு தேர்தல் முடிவு அப்போதே தெரிந்து விட்டது. ●

SARJAN



முப்பத்தைந்தாம் அத்தியாயம்

"வேளை நெருங்கிவிட்டது"

நூறு வருஷங்களுக்கு முன்பு கட்டப்பட்டு, இப்போது பாழடைந்திருந்த பள்ளிப்படைக் கோவிலை முன்னொரு தடவை நாம் பார்த்திருக்கிறோம். ஆழ்வார்க்கடியான் இங்கே ஒளிந்திருந்துதான் ரவிதாஸன் முதலியவர்களின் சதியைப் பற்றி ஓரளவு தெரிந்துகொண்டான். அதே இடத்துக்கு இப்போது வந்தியத்தேவனும் மற்றவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

பாழடைந்த பள்ளிப் படையின் ஒரு பக்கத்துச் சுவர் ஓரமாக வந்தியத்தேவனையும் அவன் குதிரையையும் அழைத்து வந்தார்கள்.

"அப்பனே! சற்று நீ இங்கே இரு! உன்னைக் கூப்பிட வேண்டிய சமயத்தில் கூப்பிடுகிறோம். தப்பித்துச் செல்லலாம் என்று கனவு காணாதே! பழக்கப்பட்டவர்களைத் தவிர வேறு யாரும் இக் காட்டுக்குள் வரவும் முடியாது; வெளியேறவும் முடியாது. அப்படி வெளியேற முயன்றால், நிச்சயம் உயிரை இழப்பாய்!" என்றான் ரவிதாஸன்.

"அப்படி நான் வழி கண்டு பிடித்துப் போகப்



அமரர் கல்கி

பார்த்தால் நீ மந்திரம் போட்டுக் கொன்று விடுவாய்! இல்லையா... மந்திரவாதி!" என்று கூறி வந்தியத் தேவன் நகைத்தான்.

"சிரி, சிரி! நன்றாய்ச் சிரி!" என்று சொல்லி, ரவிதாஸனும் சிரித்தான்.

அச்சமயம் பார்த்து எங்கேயோ தூரத்தில் நரி ஒன்று ஊளையிடத் தொடங்கியது. அதைக் கேட்டுப் பக்கத்தில் எங்கேயோ கோட்டான் ஒன்று முனங்கியது.

வந்தியத்தேவனுடைய உடல் சிலிர்த்தது. குளிரினால் அல்ல. அடர்ந்த அந்தக் காட்டின் மத்தியில் வாடைக் காற்று பிரவேசிக்கவும் பயந்ததாகக் காணப்பட்டது. ஏன்? அங்கே மழைகூட அவ்வளவாகப் பெய்ததாகத் தெரியவில்லை. தரையில் சில இடங்களில் மட்டும் மழைத்துளிகள் சொட்டி ஈரமாயிருந்தது. காற்று இல்லாதபடியால் இறுக்கமாக இருந்தது. அங்கே வந்து சேர்வதற்குள் வந்தியத்தேவனுடைய அரைத்துணி உலர்ந்து போயிருந்தது. சுற்றிக் கட்டியிருந்த துணிச் சுருள் மட்டும் ஈரமாயிருந்தது. அதை எடுத்து விரித்துப் பக்கத்தில் கிடந்த பாறாங் கல்லின் மீது உலர்த்தினான். அதே கல்லின் ஒரு மூலையில் வந்தியத்தேவன் உட்கார்ந்து பள்ளிப் படைச் சுவரின் மீது சாய்ந்துகொண்டான். அவனுக்குக் காவலாக அருகில் ஒருவன் மட்டும் இருந்தான்.

சற்றுத் தூரத்தில் காட்டின் மத்தியில் ஏற்பட்டிருந்த இடைவெளியில் அவனுடன் வந்தவர்களில் மற்றவர்கள் வட்டவடிவமாக உட்கார்ந்தார்கள். பள்ளிப்படைக்கு உள்ளேயிருந்து ஒருவன் பழைய சிம்மாதனம் ஒன்றை எடுத்துக்கொண்டு வந்து போட்டான். அதில், 'சக்கரவர்த்தி' என்று அழைக்கப்பட்ட சிறுவனை உட்காரச் செய்தார்கள். தீவர்த்திகளில் இரண்டை மட்டும் வைத்துக்கொண்டு மற்றவற்றை அணைத்து விட்டார்கள். அவ்விதம் தீவர்த்திகளை அணைத்த போது எழுந்த புகை நாலாபுறமும் சூழ்ந்தது.

"ராணி இன்னும் வரவில்லையே?" என்றான் ஒருவன்.

"சமயம் பார்த்துத்தானே வர வேண்டும்? இரண்டாவது ஜாமத்திலேதான் நானும் வரச் சொல்லியிருக்கிறேன். அதுவரையில் வழுதி குலத்துப் புகழ் மாலையை யாராவது பாடுங்கள்!" என்றான் சோமன் சாம்பவன்.

இடும்பன்காரி உடுக்கு ஒன்றை எடுத்து இலேசாக அதைத் தட்டினான். தேவராளன் ஏதோ ஒரு பாட்டுப் பாடத் தொடங்கினான்.

வந்தியத்தேவன் தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான்; கேட்டுக் கொண்டுமிருந்தான். 'வழுதிகுலம்' என்பது பாண்டிய குலம் என்று அவன் அறிந்திருந்தான். பாடல் ஏதோ ஒரு சோகப் பிரலாபமாக அவன் காதில் தொனித்தது. உடுக்கின் நாதமும் சோகப் பாடலின் இசையும் அவன் உள்ளத்தில் ஒரு நெகிழ்ச்சியை உண்டாக்கின. பாடலில் சிற்சில வார்த்தைகள் அவன் காதில் விழுந்தன. அவற்றிலிருந்து முன்னால் நடந்த மாபெரும் போரைப் பற்றிய வரலாறு அவன் நினைவுக்கு வந்தது.

ஆம்; அங்கேதான் வரகுண பாண்டியனுக்கும் அபராஜித பல்லவனுக்கும் மூன்று நாட்கள் கொடிய யுத்தம் நடந்தது. பல்லவனுக்குத் துணையாகக் கங்க மன்னன் பிருதிவீபதி வந்தான். அப்போரில் மாண்ட லட்சக்கணக்கான வீரர்களைப் போல் அம்மகா வீரனும் இறந்து விழுந்தான். அவனுடைய ஞாபகமாகக் கட்டிய பள்ளிப்படைக் கோவில்தான் இப்போது சதிகாரர்கள் கூடும் இடமாக அமைந்திருந்தது.

கங்க மன்னன் இறந்ததும் பல்லவர் படைகள் சிதறி ஓடத் தொடங்கின. பாண்டிய சைன்யத்தின் வெற்றி நிச்சயம் என்று தோன்றியது. இச் சமயத்தில் சோழர் படைகள் பல்லவர்களின் உதவிக்கு வந்தன. அப்படைக்குத் தலைமை வகித்துத் திருமேனியில்

தொண்ணூற்றாறு புண் சுமந்த விஜயாலய சோழன் வந்தான். இரண்டு கால்களையும் முன்னமே இழந்திருந்த அவ்வீரப் பெருங்கிழவனை நாலு பேர் தூக்கிக்கொண்டு வந்தார்கள். இரண்டு கைகளிலும் இரண்டு நெடிய வாள்களை ஏந்திக்கொண்டு அவன் பாண்டியர் சைன்யத்தில் புகுந்தான். இரண்டு வாள்களையும் சக்ராகாரமாகச் சுழற்றிக்கொண்டே போனான். அவன் சென்ற இடங்களிலெல்லாம் இரு புறமும் பாண்டிய வீரர்களின் உயிரற்ற உடல்கள் மலை மலையாகக் குவிந்தன.

சிதறி ஓடிய பல்லவ சேனா வீரர்கள் திரும்பி வரத் தொடங்கினார்கள்.

ஜண ஜண ஜண ஜணார்! – பதினாயிரம் வாள்கள் மாலைச் சூரியனின் மஞ்சள் வெயிலில் மின்னிக் கொண்டு வந்தன!

டண டண டண டணார்! – பதினாயிரம் வேல்கள் இன்னொரு பக்கமிருந்து ஒளி வீசிப் பாய்ந்து வந்தன!

வாள்களும் வேல்களும் மோதின!

ஆயிரம் பதினாயிரம் தலைகள் நாலாபுறமும் உருண்டன.

ஆயிரம் பதினாயிரம் உயிரற்ற உடல்கள் விழுந்தன!

ஈ ஈ ஈ ஈ! – குதிரைகள் கனைத்துக் கொண்டே செத்து விழுந்தன!

ப்ளீ ளீ ளீ ளீ! – யானைகள் பிளிறிக் கொண்டே மாண்டு விழுந்தன!

இரத்த வெள்ளத்தில் செத்த மனிதர்கள் – மிருகங்களின் உடல்கள் மிதந்தன!

இருபதினாயிரம் கொட்டைப் பருந்துகள் வட்டமிட்டுப் பறந்து வானத்தை மூடி மறைத்தன!

முப்பதினாயிரம் நரிகள் ஊளையிட்டுக்கொண்டு ஓடி வந்து போர்க்களத்தைச் சூழ்ந்துகொண்டன!

"ஐயோ ஓ ஓ ஓ!" என்ற ஐம்பதினாயிரம் ஓலக்குரல்கள் ஒன்றாகச் சேர்ந்து எழுந்தன!

"விடாதே! பிடி! துரத்து! வெட்டு! குத்து!"

இவ்விதம் நூறு ஆயிரம் குரல்கள் முழங்கின.

பதினாயிரம் ஜயபேரிகைகள் "அதம்! அதம்! அதம்!" என்று சப்தித்தன.

இருபதினாயிரம் வெற்றிச் சங்கங்கள் "பூம்! பூம்! பூம்!" என்று ஒலித்தன.

"ஹா! ஹா! ஹா! ஹா!" என்று அறுபதினாயிரம் பேய்கள் சிரித்தன.

வந்தியத்தேவன் திடுக்கிட்டுக் கண் விழித்தான். நாலாபுறமும் பார்த்து விழித்தான். பள்ளிப்படைச் சுவரில் சாய்ந்தபடியே சிறிது நேரம் தான் கண்ணயர்ந்து விட்டதாக அறிந்து கொண்டான். அந்த அரைத் தூக்கத்தில் கண்ட பயங்கரமான கனவை மறுபடி நினைத்துப் பார்த்தான். கனவுதானா அது? இல்லை! உடுக்கின் முழக்கத்துக்கு இணங்கத் தேவராளன் பாடிய பாடலில் போர்க்களத்தைப், பற்றிச் செய்த வர்ணனைதான் அப்படி அவன் மனக்கண் முன் தோன்றச் செய்திருக்க வேண்டும்.

அச்சமயம் தேவராளன் பாண்டியர் படைக்கு முன்னால் பல்லவரும் கங்கரும் தோற்று ஓடியதைப் பற்றிப் பாடிக்கொண்டிருந்தான். அதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் சிரித்த களிச் சிரிப்புத்தான் அப்படி அநேகாயிரம் பேய்களின் சிரிப்பைப்போல் ஒலித்து வந்தியத்தேவனைத் திடுக்கிட்டுக் கண் விழிக்கச் செய்திருக்க வேண்டும்.

உடுக்கு முழக்கம் திடீர் என்று நின்றது. தேவராளனும் பாட்டை உடனே நிறுத்தினான்.

சற்றுத் தூரத்தில் ஒரு தீவர்த்தி வெளிச்சம் தெரிந்தது. அது நெருங்கி நெருங்கி வந்தது. தீவர்த்தி வெளிச்சத்தைத் தொடர்ந்து ஒரு பல்லக்கு வந்தது. பல்லக்கைச் சுமந்து வந்தவர்கள் அதைக் கீழே இறக்கி வைத்தார்கள். பல்லக்கின் திரைகள் விலகின. உள்ளேயிருந்து ஒரு ஸ்திரீ வெளியே வந்தான். ஆம்; அவன் பழுவூர் ராணி நந்தினிதான். ஆனால் முன் தடவைகளில்



தன் இரு கரங்களையும் நீட்டினாள்.

வந்தியத்தேவன் பார்த்தபோது அவள் சர்வாலங்கார பூஷிதையான மோகினியாக விளங்கினாள். இப்போது தலைவிரி கோலமான உக்கிர துர்க்கா தேவியாகக் காட்சி தந்தாள்.

அவளை இந்தத் தோற்றத்தில் பார்த்த வந்தியத்தேவனுடைய உள்ளத்தில் ஒரு திகில் தோன்றியது; அவன் உடம்பில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது.

நந்தினி பல்லக்கிலிருந்து இறங்கியதும் சிம்மாதனத்தில் வீற்றிருந்த சிறுவனைப் பார்த்தாள். அவனையே பார்த்த வண்ணம் நடந்து வந்தாள்.

சிறுவனும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். மற்ற அனைவரும் அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சிறுவனைப் பாழும் மண்டபத்துக்குத் தேடி ஓடி வந்த ஸ்திரீ - அவனால் அம்மா என்று அழைக்கப்பட்டவள் - சிம்மாதனத்துக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்தாள்.

நந்தினி சிறுவன் அருகில் வந்ததும் தன் இரு கரங்களையும் நீட்டினாள்.

சிறுவன் அவளையும் தனக்குப் பின்னால் நின்ற ஸ்திரீயையும் மாறி மாறிப் பார்த்தான்.

"நீதானே என் அம்மா? இவள் இல்லையே?" என்று கேட்டான்.

"ஆம், கண்மணி!"

"இவள் ஏன் என்னுடைய அம்மா என்று சொல்லிக் கொள்கிறாள்?"

"அவள் உன்னை வளர்த்த தாய்!"

"நீ ஏன் என்னை வளர்க்கவில்லை? ஏன் உன்னுடன் என்னை வைத்துக் கொள்ளவில்லை? இவள் எதற்காக என்னை எங்கேயோ மலைக்குகையில் ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறாள்?"

"கண்மணி! உன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகத்தான். உன் தந்தையைக் கொன்றவர்களைப் பழிக்குப் பழி வாங்குவதற்காகத்தான்!"

"ஆமாம்; அது எனக்குத் தெரியும்!" என்று சிறுவன் எழுந்து நந்தினியை அணுகினான்.

நந்தினி அவனைத் தன் இரு கரங்களாலும் அணைத்துக்கொண்டாள். உச்சி மோந்தாள். சிறுவனும் அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கட்டிக் கொண்டான். மறுபடியும் அவன்



தன்னை விட்டுப் போகாமலிருக்கும் பொருட்டு அவன் அப்படிப் பிடித்துக் கொண்டான் போலும்.

ஆயினும் இந்தக் காட்சி நீடித்திருக்க வில்லை. அவனுடைய குஞ்சுக் கரங்களை நந்தினி பலவந்தமாக எடுத்துத் தன்னை விடுவித்துக்கொண்டாள். சிறுவனைச் சிம்மாதனத்தில் உட்கார வைத்தாள். மீண்டும் பல்லக்கின் அருகில் சென்றாள். அதனுள்ளிருந்து நாம்

முன் பார்த்திருக்கும் வாளை எடுத்துக் கொண்டாள். பல்லக்குத் தூக்கி வந்தவர்களைப் பார்த்து ஏதோ சமிக்ஞை செய்தாள். அவர்கள் பல்லக்கைத் தூக்கிக் கொண்டு சற்றுத் தூரத்தில் போய் மறைவாக உட்கார்ந்து கொண்டார்கள்.

நந்தினி மீண்டும் சிம்மாதனத்தின் அருகில் வந்தாள். கத்தியை அச் சிம்மாதனத்தின் மீது குறுக்காக வைத்தாள்.

சிறுவன் அதை அடங்கா ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டே "நான் இதைக் கையில் எடுக்கலாமா?" என்று கேட்டான்.

"சற்றுப் பொறு, என் கண்மணி!" என்றாள் நந்தினி.

பிறகு, ரவிதாஸன் முதலியவர்களையும் வரிசைக்கிரமமாக உற்றுப் பார்த்தாள்.

"சபதம் எடுத்துக்கொண்டவர்களைத் தவிர இங்கு வேறு யாரும் இல்லையே?" என்று கேட்டாள்.

"இல்லை, தேவி!" என்றான் சோமன் சாம்பவன்.

ரவிதாஸனைப் பார்த்து நந்தினி "சேநாபதி...!" என்று ஆரம்பித்தாள்.

ரவிதாஸன் சிரித்தான்.

"இன்றைக்கு உமக்குச் சிரிப்பாயிருக்கிறது. அடுத்த மாதம் இந்த நாளில் எப்படியிருக்குமோ, யார் கண்டது!"

"தேவி! அந்த நல்ல நாள் எப்போது வரப் போகிறது என்று எத்தனையோ காலமாக நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம்."

"ஐயா! நாமோ ஒரு சிலர். நம் சக்கரவர்த்தி சின்னஞ்சிறு குழந்தை. சோழ ராஜ்யம் மகத்தானது. சோழர்களின் சேனாபலம் அளவற்றது. நாம் அவசரப்பட்டிருந்தோமானால் அடியோடு காரியம் கெட்டுப் போயிருக்கும். பொறுமையாக இருந்ததனால் இப்போது காரியசித்தி அடையும் வேளை நெருங்கியிருக்கிறது. ரவிதாஸரே! நீர் ஏதாவது சொல்ல வேண்டியதிருக்கிறதா? இங்குள்ள வேறு யாரேனும் ஏதாவது சொல்ல வேண்டியதிருக்கிறதா!"

ரவிதாஸன் அங்கே இருந்தவர்களின் முகங்களை வரிசையாகப் பார்த்துக் கொண்டு வந்தான். அனைவரும் மோன விரதம் கொண்டவர்களாய்க் காணப்பட்டார்கள்.

"தேவி! நாங்கள் சொல்ல வேண்டியது எதுவும் இல்லை. தாங்கள்தான் சொல்ல வேண்டும். சபதம் நிறைவேறும் வேளை நெருங்கி விட்டது என்றீர்கள். எங்கே, எப்படி, யார் மூலமாக நிறைவேறப் போகிறது என்று சொல்லி அருள வேண்டும்" என்றான்.

"ஆகட்டும்; அதைச் சொல்வதற்காகவே இங்கு வந்தேன். அதற்காகவே உங்கள் எல்லாரையும் இங்கே தவறாமல் வரச் சொன்னேன். நம்முடைய சக்கரவர்த்தியையும் அழைத்து வரச் செய்தேன்" என்றாள் நந்தினி.

சிம்மாதனத்தில் வீற்றிருந்த சிறுவன் உள்பட அனைவரும் நந்தினியின் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள். அவள் மேலும் கூறினாள்:

"உங்களில் சிலர் அவசரப்பட்டீர்கள். நாம் எடுத்துக் கொண்ட சபதத்தை மறந்து விட்டேனோ என்றும் சிலர் சந்தேகப்பட்டீர்கள். அந்தச் சந்தேகம் அடாதது. மறவாமல் நினைவு வைத்துக் கொள்ள உங்கள் எல்லோரைக் காட்டிலும் எனக்குத்தான் காரணம் அதிகம் உண்டு. இல்லை; நான் மறக்கவில்லை. சென்ற மூன்று ஆண்டுகளாக அல்லும் பகலும் அனவரதமும் நான் வேறு எதைப் பற்றியும் சிந்தித்ததில்லை. நாம் எடுத்துக்கொண்ட சபதத்தின்படி பழி வாங்குவதற்குச் சமய சந்தர்ப்பங்களையும் தந்திர உபாயங்களையும் தவிர வேறு எதையும் பற்றி நான் எண்ணியதில்லை; எங்கே சென்றாலும், என்ன காரியம் செய்தாலும், யாரிடம் பேசினாலும், நமது நோக்கம் நிறைவேறுவதற்கு அதனால் உபயோகம் உண்டா என்பதைத் தவிர வேறு நினைவு எனக்கில்லை. சமய சந்தர்ப்பங்கள் இப்போது கூடியிருக்கின்றன. சோழ நாட்டுச் சிற்றரசர்களும் பெருந்தர அதிகாரிகளும் இரு பிரிவுகளாகப் பிரிந்திருக்கிறார்கள். பழுவேட்டரையர், சம்புவரையர் முதலானோர் மதுராந்தகனுக்குப் பட்டம் கட்ட முடிவு செய்துவிட்டார்கள். கொடும்பாளூர் பூதி விக்கிரம கேசரியும் திருக்

கோவலூர் மலையமானும் அதற்கு விரோதமாயிருக்கிறார்கள். பூதிவிக்கிரம கேசரி தென் திசைச் சைன்யத்துடன் தஞ்சை நோக்கி வருவதாகக் கேள்விப் படுகிறேன். திருக்கோவலூர் மலையமான் படை திரட்டி வருவதாகவும் அறிகிறேன். இரு தரப்பாருக்கும் எந்த நிமிஷமும் யுத்தம் மூளலாம்..."

"தேவி! அப்படி யுத்தம் மூளாதிருப்பதற்குத் தாங்கள் பெருமுயற்சி செய்து வருவதாகக் கேள்வியுறுகிறோம். கடம்பூர் சம்புவரையன் மாளிகையில் சமரசப் பேச்சு நடக்கப் போவதாக அறிகிறோம்."

"ஆமாம்; அந்த ஏற்பாடு செய்திருப்பது நானேதான். ஆனால் என்ன காரணத்திற்காகவென்று உங்களால் ஊகிக்க முடியவில்லையா?"

"முடியவில்லை, ராணி! ஒரு பெண் உள்ளத்தின் ஆழத்தைக் கண்டுபிடிக்கச் சர்வேசுவரனால்கூட முடியாது என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். எங்களால் எப்படி முடியும்?"

"அது உங்களால் முடியாத காரியந்தான். நான் சொல்கிறேன்; தெரிந்து கொள்ளுங்கள். நம்முடைய சபதம் நிறைவேறுவதற்கு முன்னால் சோழ ராஜ்யத்தில் இந்த உள்நாட்டுச் சண்டை மூண்டால், அதன் விளைவு என்ன ஆகும் என்று சொல்ல முடியாது. சுந்தர சோழன் இன்னும் உயிரோடிருக்கிறான். அன்பில் பிரம்மராயன் ஒருவனும் இருக்கிறான். இவர்கள் தலையிட்டு இரு கட்சிக்காரர்களையும் அடக்கி விடுவார்கள். அல்லது ஒரு கட்சி தோற்று இன்னொரு கட்சி வலுத்து விட்டாலும் நம்முடைய நோக்கம் நிறைவேறுவது அசாத்தியமாகி விடும். அதற்காகவே இந்தச் சமாதானப் பேச்சை இப்போது தொடங்கியிருக்கிறேன். சண்டை உண்மையாக மூளுவதற்குள்ளே நம் நோக்கத்தை நிறைவேற்றி விட வேண்டும். அப்படி நிறைவேறிய பிறகு சோழ ராஜ்யத்துச் சிற்றரசர்களுக்குள் மூளும் சண்டைக்கு முடிவேயிராது. இரு கட்சியாரும் சர்வநாசம் அடையும்வரையில் சண்டை நடந்து கொண்டேயிருக்கும். இப்போது தெரிகிறதா...? சமாதானப் பேச்சு தொடங்கியதின் காரணம்?"

இதைக் கேட்டதும் அங்கே சூழ்ந்து நின்றவர்கள் எல்லாருடைய முகங்களிலும் வியப்புக்கும் உற்சாகத்துக்கும் அறிகுறிகள் காணப்பட்டன. பழுவூர் இளைய ராணியின் மதி நுட்பத்தை வியந்து அவர்கள் ஒருவருக்கொருவர் மெல்லிய குரலில் பேசிக்கொண்டார்கள். ரவிதாஸனும்கூட ஆச்சரியப்படாமலிருக்க முடியவில்லை.

"தேவி! தங்களுடைய அபூர்வமான முன் யோசனைத் திறனை வியக்கிறோம். சமாதானப் பேச்சின் கருத்தை அறிந்து கொண்டோம். ஆனால் சபதம் நிறைவேறும் நாள் நெருங்கிவிட்டது என்றீர்கள். அதை நடத்துவது யார்? எப்படி? எப்போது?" என்றான்.

"அதற்கும் சேர்த்துத்தான் இந்த யுக்தி செய்திருக்கிறேன். சமாதானப் பேச்சு என்ற வியாஜத்தின் பேரில் நமது முதற் பகைவனைக் கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்கு வரும்படி அழைப்பு அனுப்பியிருக்கிறது. அவன் அங்கே கட்டாயம் வந்து சேருவான். நம்முடைய சபதத்தை அங்கேதான் நிறைவேற்றியாக வேண்டும். வீர பாண்டிய சக்கரவர்த்தியின் ஆபத்துதவிகளே! உங்களுடைய பழி தீரும் வேளை நெருங்கி விட்டது. இன்றைக்குச் சனிக்கிழமையல்லவா? அடுத்த சனிக்கிழமைக்குள் நம்முடைய சபதம் நிறைவேறி விடும்...!"

அங்கே இருந்த இருபது பேர்களும் ஏக காலத்தில் 'ஆஹா'காரம் செய்தார்கள்.

சிலர் துள்ளிக் குதித்தார்கள்.

உடுக்கு வைத்திருந்தவன் உற்சாக மிகுதியினால் அதை இரண்டு தடவை தட்டினான்.

மரக்கிளைகளில் தூங்கிக் கொண்டிருந்த ஆந்தைகள் விழித்து உறுமிக் கொண்டு வேறு கிளைகளுக்குத் தாவின.

வௌவால்கள் சடசடவென்று சிறகுகளை அடித்துக்கொண்டு ஓடின.

வந்தியத்தேவனுடைய குதிரை உடம்பைச் சிலிர்த்துக்கொண்டது.


வந்தியத்தேவனும் நிமிர்ந்து பார்த்தான். நந்தினி தன்னைச் சுற்றியிருந்

தவர்களிடம் ஏதோ பரபரப்புத் தரும் விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருந்தாள் என்பது மட்டுந்தான் தெரிந்தது. அவளுடைய பேச்சு ஒன்றும் அவன் காதில் விழவில்லை.


ரவிதாஸன் மற்றவர்களுடைய உற்சாகத்தைக் கையமர்த்தி அடக்கினான்.

''தேவி! தங்களுடைய கடைசி வார்த்தை எங்களுக்கு அளவிலாத குதூகலத்தை அளித்திருக்கிறது. நமது முதற்பகைவனைக் கொன்று பழி முடிக்கும் காலம் இவ்வளவு அண்மையில் வந்திருப்பதை எண்ணிக் களிக்கிறோம்! ஆனால், பழி முடிக்கும் பாக்கியம் யாருக்கு?'' என்று கேட்டான்.

''அதற்கு நமக்குள் போட்டி ஏற்படுவது இயற்கைதான். அதை யாருக்கும் மனத்தாங்கல் இல்லாத முறையில் முடிவு செய்வதற்காகவே வீர பாண்டியரின் திருக்குமாரச் சக்கரவர்த்தியை இங்கு அழைத்து வரச் செய்தேன். வீர பாண்டியரின் கத்தியும் இதோ இருக்கிறது. இந்தச் சின்னஞ் சிறு குழந்தை தந்தையின் கத்தியைத் தொட்டு நம்மில் எவர் கையில் கொடுக்கிறதோ, அவர் பழி முடிக்க வேண்டும். மற்றவர்கள் அக்கம் பக்கத்தில் உதவிக்குச் சித்தமாக நிற்க வேண்டும். ஏற்றுக் கொண்டவர் தவறி விட்டால் மற்றவர்கள் முன் வந்து முடிக்க வேண்டும். கடம்பூர் மாளிகைக்குள்ளேயே நான் இருப்பேன். இடும்பன்







காரி கோட்டைக் காவலர்களின் ஒருவனாக இருப்பான். பழி முடிக்கும் பொறுப்பு ஏற்றுக்கொண்டவர் மாளிகைக்குள் பிரவேசிப்பதற்கு நாங்கள் உதவி செய்வோம். இந்த ஏற்பாடு உங்களுக்கெல்லாம் சம்மதந்தானே?''

ஆபத்துதவிகள் ஒருவரையொருவர் ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டார்கள். எல்லாருக்கும் அந்த ஏற்பாடு சம்மதமாகவே தோன்றியது.

ரவிதாஸன் கூறினான்: - ''தாங்கள் சொன்னது சரியான ஏற்பாடுதான். அதற்கு நாங்கள் எல்லாரும் சம்மதிக்கிறோம். ஆனால் இன்னும் ஒரு விஷயம். பழி முடிக்கும் பொறுப்பு யாருக்குக் கிடைக்கிறதோ, அவர் சொல்கிறபடி மற்றவர்கள் கண்டிப்பாகக் கேட்கிறதென்று வைத்துக் கொள்ள வேண்டும். சக்கரவர்த்திக்குப் பிராயம் வருகிற வரையில் பழி முடித்தவன் இட்டதே சட்டமென்று மற்ற அனைவரும் நடந்து கொள்ள வேண்டும்.''

இதைக் கேட்ட நந்தினியின் முகத்தில் புன்னகை அரும்பியது.

''என்னையும் உட்படுத்தித்தானே சொல்கிறீர்?'' என்று கேட்டாள்.

"ஆம், தேவி! விதிவிலக்குச் செய்ய முடியாது!'' என்றான் ரவிதாஸன்.

"சந்தோஷம். இப்போது ரவிதாஸர் கூறியதும் உங்கள் எல்லாருக்கும் சம்மதந்தானே?'' என்று நந்தினி மற்றவர்களை நோக்கி வினவினாள்.

எல்லாரும் ஒருவரையொருவர் பார்த்தார்கள். மறுமொழி சொல்வதற்குத் தயங்கினார்கள். சிலருக்கு அந்த ஏற்பாடு சம்மதமில்லையென்று தோன்றியது.

சோமன் சாம்பவன், "அது எப்படி நியாயமாகும்? நமக்கு எல்லா உதவியும் அளித்து வரும் தேவியை எப்படிப் பொதுவிதிக்கு உட்படுத்த முடியும்?'' என்று கேட்டான்.

"என்னைப் பற்றிக் கவலை வேண்டாம். நான் உயிர் வாழ்ந்திருப்பதே வீர பாண்டியச் சக்கரவர்த்தியின் கொடூரக் கொலைக்குப் பழி வாங்குவதற்காகத் தான். அந்தப் பழியை முடித்துக் கொடுக்கிறவர் யாராயிருந்தாலும், அவருக்கு நான் என்றென்றும் அடிமையாக இருக்கச் சித்தம்!'' என்றாள் நந்தினி.

பின்னர், இந்தப் பேச்சுக்களையெல்லாம் புரிந்தும் புரியாமலும் கேட்டுக் கொண்டிருந்த சிறுவனை நந்தினிதேவி பார்த்து, ''என் கண்மணி! இந்த வீர வாள் உன் தந்தையினுடையது. இதை உன் குஞ்சுக் கையினால் எடுத்து இங்கே உள்ளவர்களில் உனக்கு யாரை அதிகமாய்ப் பிடித்திருக்கிறதோ, அவரிடம் கொடு!'' என்றாள்.

ரவிதாஸன் சற்று அருகில் வந்து "சக்கரவர்த்தி! எங்களையெல்லாம் நன்றாய்ப் பாருங்கள்! எங்களில் யார் வீரன் என்றும், தைரியசாலி என்றும் தங்களுக்குத் தோன்றுகிறதோ, அவனிடம் இந்தப் பாண்டிய குலத்து வீர வாளைத் தொட்டுக் கொடுங்கள்!'' என்றான்.

சிம்மாசனத்தில் வீற்றிருந்த சிசு சக்கரவர்த்தி சுற்றுமுற்றும் பார்த்தார்.

எல்லாரும் அடங்காத ஆவலுடனும் பரபரப்புடனும் சக்கரவர்த்தியின் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவருடைய கண்களும் ''என்னிடம் கொடுங்கள்! என்னிடம் கொடுங்கள்!'' என்று கெஞ்சும் பாவத்தைக் காட்டின.

ரவிதாஸனுடைய முகமும் கண்களும் மட்டும் ''என்னிடம் கொடுங்கள்!'' என்று அதிகாரபூர்வமாகப் பயமுறுத்திக் கட்டளையிட்டன.

சிறுவன் இரண்டு மூன்று தடவை எல்லாரையும் திருப்பித் திருப்பிப் பார்த்த பின்னர், கத்தியைக் கையில் எடுத்தான். அதைத் தூக்க முடியாமல் தூக்கினான்.

அனைவருடைய பரபரப்பும் சிகரத்தை அடைந்தது.

சிறுவன் பளிச்சென்று நந்தினி நின்ற பக்கம் திரும்பினான். ''அம்மா! எனக்கு உன்னைத்தான் எல்லாரைக் காட்டிலும் அதிகமாகப் பிடித்திருக்கிறது. நான் பெரியவனாகும்வரையில் நீதான் எனக்காக இராஜ்யத்தை ஆள வேண்டும்!'' என்று சொல்லிக்கொண்டே வாளை அவளிடம் கொடுத்தான்.

(தொடரும்)

சைவ சித்தாந்தமும் ஜெர்மன் யுத்தமும்

சில நாளைக்கு முன்பு நான் ஒரு சைவ சித்தாந்தியின் பிரசங்கம் கேட்டேன். பிரசங்கி, சர்க்கார் உத்தியோகம் பார்த்துப் பென்ஷன் வாங்கிக் கொண்டிருக்கும் பெரியார். அவர் சைவ சித்தாந்தத்தின் அருமை பெருமைகளை விஸ்தாரமாக விவரித்தார். உலகத்தின் வேறு எந்த சமயமும் சைவ சமயத்துக்கு ஈடாகாதென்று விவாதித்தார். கடைசியில் ஆவேசம் வந்தவரைப்போல் "ஆகா! இப்பேர்ப்பட்ட சைவ சித்தாந்தத்தை அந்த அடால்ப் ஹிட்லருக்கு யாரும் எடுத்துப் போதிப்பாரில்லையே? ஹிட்லர் மட்டும் சைவ சித்தாந்தத்தை அறிந்து கொண்டாரானால் இப்பேர்ப்பட்ட விபரீதமான காரியங்களைச் செய்வாரா? உலகத்தை யுத்தத்தில் ஆழ்த்துவாரா? அந்தோ! பரிதாபம்! என்று கதறினார். இதைக் கேட்ட சபையோரில் சிலர் கரகோஷம் செய்து ஆர்ப்பரித்தார்கள்.

ஆனால் எனக்குப் பக்கத்திலிருந்த ஒருவருக்கு மட்டும் பிரசங்கி சொன்னது பிடிக்கவில்லையென்று தோன்றிற்று. "ஆமாம், ஆமாம், ஹிட்லருக்குச் சைவ சித்தாந்தத்தைப் போதித்து விட்டால் ரொம்ப நல்லதுதான். அவருடைய விரோதிகளைப் பீரங்கி வாயில் வைத்துச் சுடுவதற்குப் பதிலாகக் கழுவிலேற்றிக் கொன்று விடுவார்! செலவு குறைச்சல்" என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தார். (சம்பந்தர்-சமணர்களைக் கழுவேற்றினார் என்ற கதையை நினைத்துக் கொண்டுதான் அவர் அப்படி முணுமுணுத்திருக்க வேண்டும்.)

எனக்கு அந்த சமயம் என்ன தோன்றிற்று என்பதையும் சொல்லி விடுகிறேன். "ஆகா! இந்த உலகத்திலே கடவுள் என்னென்ன அக்கிரமங்களையெல்லாம் வைத்திருக்கிறார்? எப்பேர்ப்பட்ட மூர்க்கர்களையும் மூடாத்மாக்களையும் படைத்திருக்கிறார்? எவ்வளவு பாவங்களையும், தீமைகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்? அந்தோ! அந்த கடவுளுக்கு மட்டும் சைவ சித்தாந்தத்தை யாராவது போதித்து விட்டால், இம்மாதிரி அக்கிரமங்கள் எல்லாம் உலகில் நடக்குமா? ஐயோ! கடவுளுக்குச் சைவ சித்தாந்தத்தைப் புகட்டுவதற்காக இந்த சைவப்பிரசங்கியை உடனே கடவுள்பால் அனுப்பினால் எவ்வளவு நன்றாயிருக்கும்" என்று நான்

எண்ணமிட்டுக் கொண்டிருந்தேன்.

விஷயம் என்னவென்றால், இந்த நாளில் நாமெல்லோரும் பிறருக்குப் போதனை செய்யவே தயாராயிருக்கிறோம். அந்தப் போதனையை நமது வாழ்க்கையில் கொண்டு வரத் தயாராயிருப்பதில்லை. மேற்படி சைவ சித்தாந்தப் பிரசங்கியையே எடுத்துக் கொள்வோம். அவர் ஏன் சைவ சித்தாந்தத்தை ஹிட்லருக்குப் போதிக்க விரும்புகிறார்? நம் ஊரில் எத்தனையோ பேர் சைவ சித்தாந்தத்தைக் கரைத்துக் குடித்து விட்டிருக்கிறார்களே, அதன் பயன் என்ன? சைவ சித்தாந்தம் பிறந்த தமிழ்நாடு இன்று ஏன் அடிமை நாடாயிருக்கிறது? இங்கே ஏன் இவ்வளவு சாதி-மத-துவேஷங்கள் குடி கொண்டிருக்கின்றன? இந்நாட்டு ஜனங்கள் ஏன் அன்னிய பாஷை மோகத்தில் விழ்ந்திருக்கிறார்கள்? இங்கே ஏன் இவ்வளவு வேஷதாரிகளும், வஞ்சகர்களும், தேசத் துரோகிகளும் இருக்கிறார்கள்? நம் ஊரின் நிலைமை இப்படி இருக்கும்போது ஹிட்லருக்குச் சைவ சித்தாந்தத்தை போதிக்க மேற்படி பிரசங்கியார் இவ்வளவு கவலைப்படுவானேன்? இருக்கிறது; காரணம் இருக்கிறது. அடால்ப் ஹிட்லர் ஒருவேளை ஜயித்து, அதனால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குக் கேடு வந்து, அதன் விளைவாகத் தம்முடைய பென்ஷனுக்கு ஆபத்து வந்து விடப் போகிறதோ என்று பிரசங்கிக்குக் கவலை! அந்தக் கவலையினால் தான் ஹிட்லருக்கே சைவ சித்தாந்தத்தைப் போதித்து விடலாமென்று அவர் ஆசைப்பட்டது! அதே காரணத்தினால்தான், சேம்பர்லினுக்கும் சர்ச்சிலுக்கும் அவர் சைவ சித்தாந்தத்தைப் போதிக்க ஆசைப்படவில்லை.



இம்மாதிரி எத்தனையோ சைவ சித்தாந்தப் பிரசங்கிகளை நாம் பார்த்திருக்கிறோம். அவர்கள் அன்பு மதமாகிய சைவ சித்தாந்தத்தைப் பற்றித் தேனொழுகப் பேசுவார்கள்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந்தாரே"

என்ற திருமூலர் பாட்டைச் சொல்லி, "இம்மாதிரி அன்பே கடவுள் என்று போதிக்கும் மதம் உலகத்தில் உண்டோ?" என்று கேட்பார்கள். ஆனால் விபூதிக்குப் பதிலாக நாமத்தைப் போட்டுக் கொண்டு ஒருவர் வந்து விட்டால் அவரைச் சுண்ணாம்புக் காளவாயில் போடுவதற்குத் தயாராயிருப்பார்கள்!

தமிழ் நாட்டுச் சைவ சித்தாந்த

பிரசங்கிகளில் சிலர் இங்கிலீஷ் பாஷையையும் கரை கண்டவர்கள். ஸ்பென்ஸர், ஹக்ஸ்லி முதலிய மேனாட்டுத் தத்துவ சாஸ்திரிகள் கூறிய முடிவுகளெல்லாம் சைவ சித்தாந்தத்தில் பொதிந்து கிடப்பதை அவர்கள் கண்டுபிடித்துச் சொல்வார்கள். டார்வின் கொள்கையை எத்தனையோ காலத்திற்கு முன்பு சைவ சித்தாந்தம் ஸ்தாபித்து விட்டது என்று நிரூபிப்பார்கள். ஆனால், தங்களுடைய உத்தியோகத்திற்கோ, சம்பளத்திற்கோ, பென்ஷனுக்கோ ஏதாவது ஆபத்து வருவதாயிருந்தால் அதற்குக் காரணமாயிருப்பவர்களை ஒருதடவையல்ல, ஏழு தடவை கழுவிலேற்றத் தயாராயிருப்பார்கள்.

இவ்வாறு சைவ சித்தாந்தப் பிரசங்கம் செய்பவர்களில் அநேகர் "சைவத்தின் உண்மையை அறிந்தவர்களுமல்ல, சைவத்தை வாழ்க்கையில் அனுஷ்டிப்பவர்களுமல்ல" என்பதைப் பார்க்கிறோம்.

வைணவ சித்தாந்தப் பிரசங்கம் செய்கிறவர்களும், சைவ சித்தாந்திகளுக்குக் கொஞ்சமும் மேற்படி விஷயங்களில் சளைத்தவர்கள் அல்ல. சைவ சித்தாந்திகளாவது மற்ற சித்தாந்தக் காரர்களைத்தான் சுண்ணாம்புக் காளவாய்க்கு அனுப்புவார்கள். வைணவ சித்தாந்திகளோ தங்களுக்குள்ளேயே வடகலையாரைத் தென்கலையாரும், தென்கலையாரை வடகலையாரும் கழுவேற்றத் தயாராயிருப்பார்கள்.

இதெல்லாம் பொதுவாக நாம் பார்த்திருக்கும் விஷயங்கள். ஆனால் விதி விலக்காக சைவத்திலும் வைஷ்ணவத்திலும் சில பெரியார்கள் இருக்கிறார்கள். அவர்கள் உண்மையாகவே சமய தத்துவங்களை உணர்ந்தவர்கள். சமய வாழ்க்கை நடத்துபவர்கள். இப்படி விதிவிலக்காயுள்ள சமயப் பெரியார்களுக்குச் சிறந்த உதாரணமாக இன்று தமிழ்நாட்டில் ஒருவரைக் குறிப்பிட வேண்டுமானால் திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீ ஞானியார் சுவாமிகளைத் தான் குறிப்பிட வேண்டும்.

அடிகளின் உருவத் தோற்றத்தைப் பார்த்ததுமே, "இதோ ஒரு பெரியார் இருக்கிறார்" என்னும் உணர்ச்சி நமக்கு உண்டாகும். அவருடைய வாய்மொழிகளைக் கேட்டு அவருடைய பெருமை மேலும் மேலும் நமக்குப் புலனாகும். "அன்பே சிவமாய் அமர்ந்திருக்கும் பெரியார் இவரல்லவா" என்று எண்ணி எண்ணி வியப்போம்.

ஒவ்வொரு சமயமும் ஒரு தத்துவத்தை வெளியிடுகிறது: அத்துடன், ஒரு வாழ்க்கை முறையையும் உபதேசிக்கிறது. உலகத்தின் சிருஷ்டி, மக்களின் வாழ்க்கை, கடவுளின் ஸ்வரூபம் இவற்றைக் குறித்துச் சொல்லும் பகுதி தத்துவப் பகுதி. சமய தத்துவத்துக்கிணங்க வாழ்க்கையை எப்படி நடத்த வேண்டுமென்று போதிப்பது அனுஷ்டானப் பகுதி. எல்லா சமயங்களிலும் போல் சைவ சமயத்திலும் இந்த இரண்டு பகுதி இருக்கின்றன. பசு, பதி, பாசம் (ஜீவாத்மா, பரமாத்மா, மாயை) என்னும் மூன்று அம்சங்களை சைவ சமயம் குறிப்பிட்டு, இவற்றுள் பதியிலிருந்து பசுவும் பாசமும் தோன்றிப் பதியிலே மறைகின்றன என்று சித்தாந்தப் படுத்துகிறது. இது சைவ சமயத்தின் தத்துவப்பகுதி. பசுவாகிய ஜீவன் தன்னையொத்த மற்ற ஜீவன்களிடத்திலெல்லாம் அன்பு செய்வதாலும், இறைவனை பக்தியினால் வழிபடுவதினாலும், அடியார்களுக்குத் தொண்டு செய்வதினாலும், மாயை நீங்கிப்

பதியை அடையலாம் என்று சைவ சமயம் போதிக்கிறது. இது அனுஷ்டானப் பகுதி.

மேலே நாம் பார்த்ததுபோல், சைவ சமயத்தின் தத்துவ ஆராய்ச்சியில் கரை கண்டவர்கள் தங்கள் வாழ்க்கையில் அச் சமய போதனையை அனுஷ்டிப்பதில்லை. சைவ வாழ்க்கை முறையைக் கைப்பற்றி ஒழுகும் பக்தர்களுக்கும் சைவ சமய தத்துவங்கள் தெரிந்திருப்பதில்லை. தத்துவமும் தெரிந்து வாழ்க்கையிலும் சைவர்களாயிருப்பவர்களுக்கு, அந்த உண்மைகளை சகலரும் அறிந்து கொள்ளும்படியாக எடுத்துச் சொல்வதற்கு வேண்டிய வாக்கு வன்மை இருப்பதில்லை. இந்த மூன்று விதமான பெருமைகளையும் உடையவர் ஸ்ரீ ஞானியார் சுவாமிகள். அவர் சைவ சமயத்தின் தத்துவங்களை அறிந்தவர்; வாழ்க்கையில் அச் சமய போதனைக்கிணங்கி நடப்பவர்; சைவ சமயத்தின் தத்துவங்களையும், போதனைகளையும் பற்றி அபார வாக்கு வன்மையுடன் பிரசங்கம் செய்யக் கூடியவர்.

"சோனா மாரியாகப் பொழிவார்", "கடல் மடை திறந்தாற் போல் பேசுவார்" என்பதெல்லாம் சுவாமிகள் விஷயத்தில் உபசார மொழிகள் அல்ல. ஐந்து வருஷத்துக்கு முன்பு அவர்கள் பட்டினத்தடிகளைப் பற்றிச் செய்த பிரசங்கத்தைக் கேட்டேன். அதில் அவர் கூறியுள்ள விஷயங்கள் இன்னும் என் மனதைவிட்டு அகலாமல் இருக்கின்றன. சில பேர் பிரசங்கமாரி பொழிவார்கள். அவர்கள் என்ன சொன்னார்கள் என்பது மட்டும் கேட்பவர்களுக்குத் தெரியாது. "பெரியவர் அபாரமாய்ப் பேசினார்; ஆனால் அவ்வளவு பெரிய விஷயங்கள் நமக்கெல்லாம் புரியுமா?" என்று சொல்லிக் கொண்டு போவார்கள். ஆனால் சுவாமிகள் பேச்சு இப்படியல்ல, அவர்கள் பிரசங்கத்தைப் படித்தவர்களும் ரஸிப்பார்கள்; பாமரர்களும் விஷயம் இன்னதென்று தெரிந்து கொள்வார்கள். மணி மணியாக, முத்து முத்தாக சுவாமிகள் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் நம் மனத்தில் என்றும் அழியாதவாறு பதிந்து விடும். எப்படிப்பட்ட சிக்கலான சமய உண்மையையும் (சிக்கறுத்துச்) சொல்வார்கள்.

"உள்ளத்தில் உண்மையொளி
உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்"

என்னும் கவியின் வாக்கை சுவாமிகள் சொற்பொழிவுகள் மெய்ப்படுத்தும்.

ஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருப்பாதிரிப் புலியூர் மடாதிபதியாகி இந்த மாதத்தோடு ஐம்பது வருஷங்கள் பூர்த்தியாகின்றன. இந்த ஐம்பது வருஷ காலத்தில் சுவாமிகள் ஆயிரக்கணக்கான சமயப் பிரசங்கங்கள் செய்திருப்பார்கள். லட்சக் கணக்கான ஜனங்களுக்கு சைவ சமயத்தின் உண்மைகளை எடுத்துப் போதித்திருப்பார்கள். எவ்வளவோ பேருடைய வாழ்க்கையைத் தமது உபதேசங்களால் புனிதப் படுத்தியிருப்பார்கள்.

சுவாமிகள் சமயப்பணி செய்வதுடன் தமிழ் பணியும் செய்து வருகிறார்கள். எத்தனையோ பேருக்குத் தமிழ் அன்பையும், தமிழ் அறிவையும் ஊட்டியிருக்கிறார்கள். அரசாங்க உதவியின்றி ஒரு தமிழ்க் கல்லூரியும் நடத்தி வருகிறார்கள்.

சுவாமிகளின் தமிழன்பு, தமிழ்ச் சுவையின் அனுபவ உணர்ச்சி அடிப்படையாகக் கொண்டது. "தமிழ் பரமசிவன் அருளிய மொழி" என்பதற்காக மட்டும் அவர் தமிழைப்

போற்றுகிறவர் அல்ல. இத்தகைய தமிழன்பர்களும் சிலர் இருக்கிறார்கள். பரமசிவன் அருளிய தமிழாயிருந்தாலும், அதில் வேறு தெய்வங்களைப் போற்றும் நூல்களை அவர்கள் மதிப்பதில்லை. இராமாயணத்தின் கதாநாயகன் இராமன் என்பதற்காகவே அவர்கள் கம்பராமாயணத்தை "மட்டம்" என்று தள்ளி விடுவார்கள். ஆபாசங்கள் நிறைந்த எட்டாந்தர ஸ்தல புராணமானாலும் விஷ்ணுவைக் கொஞ்சம் மட்டந் தட்டியிருந்தால் அதைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடுவார்கள். ஸ்ரீ ஞானியார் சுவாமிகளின் ஆழ்ந்த தமிழன்பில் இத்தகைய குறுகிய சமயப் பற்று குறுக்கிடுவது கிடையாது. உண்மைக் கவிதைகளுக்கும் வெறும் செய்யுளுக்கும் அவர்கள் நன்றாக வித்தியாசம் அறிந்தவர்கள். எதெதற்கு எந்த அளவில் மதிப்புக் கொடுக்க வேணுமோ, அவ்வளவுதான் கொடுப்பார்கள்.

இந்தியாவின் புராதனமான ஆதி சமயம், சைவ சமயம். உபநிஷதங்கள் கூறும் வேதாந்த மதமும் சைவ சமயமும் ஒன்றேதான். வட நாட்டார் கோதுமையை ரொட்டி தட்டிச் சாப்பிடுகிறார்கள். தென்னிந்தியர்கள் சிலர் அதே கோதுமையைச் சமைத்துச் சாப்பிடுகிறார்கள். ஆனால் இரண்டும் கோதுமைதானல்லவா? இவ்வாறே வட இந்தியாவில் வேதாந்தமாகத் தழைத்த சமயந்தான், தென்னாட்டில் சைவமாக வளர்ந்தோங்கிற்று. ஸநாதன தர்மத்தின் இந்த இரண்டு பகுதிகளுக்கும் பொதுவான ஒரு சிறப்பு உண்டு. வேதாந்த மதம் எல்லா மதங்களையும் கடவுளை அடையும் வழிகளாக ஒப்புக் கொள்கிறது. சைவ சமயமும் அவ்வாறே. புதிதாக உண்டான மதங்கள் தங்களுடைய பெருமையை நிலை நாட்டுவதற்காகப் பிற மதங்களுடன் சண்டையிடுவது அவசியமாயிருக்கலாம். அந்த அவசியம் ஆதி சமயங்களுக்கு இல்லையல்லவா? அண்ணன் தம்பிகள் பாகப் பிரிவினைக்காகச் சண்டை போட்டுக் கொள்வது இயற்கை. ஆனால், தகப்பனாரே பிள்ளைகளுடன் பாகத்துக்குச் சண்டை போட்டால் அதைவிட மூடத்தனம் வேறென்ன இருக்கிறது?

ஆகையினால்தான் வேதாந்தத்திலும் சைவ சமயத்திலும், "சர்வமத சம்மதம்" என்னும் அரிய கொள்கையை நாம் காண்கிறோம். ஆனால் சைவத்தின் இந்தத் தனிப் பெருமையைக் குலைக்க விரும்பும் சில சைவப் பெரியோர்களும் இருக்கிறார்கள். மற்ற மதங்களைக் குறைத்துச் சொன்னால்தான் சைவத்தைப் பெருமைபடுத்தியதாகும் என்று இவர்கள் நினைக்கிறார்கள். ஸ்ரீ ஞானியார் சுவாமிகள் "வீரசைவர்" ஆனபோதிலும் அத்தகைய வீரப் பிரதாபங்களை அவர்களிடம் காண முடியாது. சர்வமத சமரஸ ஞானமுடைய உண்மை ஞானியார் அவர்.

"வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற வித்தகச் சித்தர் கணத்" தைச் சேர்ந்த பெரியார் என்றும் சொல்ல வேண்டும்.

ஸ்ரீ ஞானியார் சுவாமிகள் பட்டத்துக்கு வந்த ஐம்பதாவது வருஷ பூர்த்திக் கொண்டாட்டத்தைச் சென்ற 18-19உ களில் சுவாமிகளின் சீடர்களும், தமிழன்பர்களும் சேர்ந்து சிறப்பாகக் கொண்டாடினார்கள். முறையே அறுபதாவது, எழுபதாவது, எண்பதாவது வருஷ பூர்த்திக் கொண்டாட்டங்களையும் நடத்துவதற்குத் தமிழ் மக்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இறைவன் அருள் புரியவேண்டும்.

(ஆனந்த விகடன், 26.11.1939)

நீ வருவாய் என...

பார்த்திபன் தேவயானியைக் காதலிக்கிறார். தேவயானி பார்த்திபனின் கண்களை மட்டும்(!) காதலிக்கிறார். ஒரு விபத்தில் இறந்து போன காதலன் அஜீத்தின் கண்களைத்தான் பார்த்திபனுக்குப் பொருத்தியிருக்கிறதாம் – இது ஃப்ளாஷ்பேக். தேவயானியின் உண்மைக் காதலுக்கு மரியாதை கொடுத்து, அதே நேரம் தன் காதலையும் விட்டுவிடாமல், கடைசி வரை தேவயானியைப் பார்த்துக் கொண்டே மட்டும் இருப்பது என முடிவெடுக்கிறார் பார்த்திபன். தேவயானியும் பார்த்திபன் தம்மைப் பார்ப்பதற்கு மட்டும் சம்மதிக்கிறாராம்.

நல்ல காலம், அஜீத்தின் கிட்னியைப் பார்த்திபனுக்குப் பொருத்துவதாகத் திரைக்கதை எழுதவில்லையே என்று நினைத்தால் வேறு விதமான கோர கிருத்யங்களால் நம்மை வதைக்கிறார்கள். உதாரணமாக "பஸ் கிடைக்கலைன்னா ஆட்டோல போலாம். ஆட்டோ இல்லைன்னா ரிக்ஷா. ஆனா, காதல் அப்படி இல்லை" போன்ற 'ஒன்ஸ் அபான் எ டைம்' காதல் வசனங்கள்!

யாரும் சிரித்துவிடக் கூடாது என்பதற்காகவே நகைச்சுவை. அதிலும், நகைச்சுவைக் காட்சிகளுக்கு நாடக பாணியில் பின்னணி இசை. உதாரணத்திற்கு, யாராவது ஒரு நடிகர் அசடுவழிகிற காட்சி எனில், கீ போர்டின் மொத்த பட்டன்களிலும் விரல்களை அழுத்தி அலறவிடுகிறார் எஸ்.ஏ. ராஜ்குமார்.

படத்துக்கு ப்ளஸ் மார்க் தருவது பாடல்கள். பழைய டியூன்களை நினைவுபடுத்தினாலும், பாடல் வரிகள் அசத்தல். சுப்ரபாத இசையை நினைவூட்டும் 'அதிகாலையில் சேவலை எழுப்பி' பாடலும், 'ஒரு தேவதை வந்து விட்டாள்' பாடலும் சுகம்.

பார்த்திபன், தேவயானி, அஜீத் மூவருக்குமே இது போதும் என்கிற மாதிரி அளவான நடிப்பு.

ஃப்ளாஷ்பேக் முடிந்த பிறகு பின்னால் தொய்ந்து போகிறது திரைக்கதை. 'எப்படா முடியும்' என்று எல்லோரும் காத்திருக்க, க்ளைமாக்ஸை காட்சிக்குக் காட்சித் தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறார் டைரக்டர்.

முதல் பாதியை ஒருவழியாகச் சமாளிக்க முடிந்தாலும் இடைவேளைக்குப் பிறகும் நம் பொறுமைக்கு வைக்கும் கடுமையான பரீட்சையில் நம்மை ஃபெயிலாக்குவதுதான் இயக்குனரின் பெரிய வெற்றி!

— கே.பி.எஸ்.



ஸ்பிருலினா சத்துணவா?

இப்போது 'ஸ்பிருலினா' சீசன் தொடங்கி இருக்கிறது. இது எல்லோருக்கும் ஏற்றதா என்பதுதான் முக்கியமான கேள்வி...

சில வருடங்களுக்கு முன்பு, சென்னை ஆராய்ச்சிக் கூடம் ஒன்றில், 'அல்கே' எனப்படும் ஒரு வகைப் பாசியிலிருந்து பிரமாதமான சத்துணவு தயாரிக்கலாம் என்று அறிவித்தார்கள். அதற்குப் பிறகு யாரும் அதைக் கண்டு கொள்ளவில்லை.

ஆனால் சமீப காலமாக, 'ஸ்பிருலினா' என்ற பெயர் அடிபட ஆரம்பித்திருக்கிறது. இந்தப் பத்து வருடங்களில், சுமார் 40 நாடுகளில் காப்ஸ்யூலாகவும், பவுடராகவும், லேகியமாகவும் 'ஸ்பிருலினா'வை உள்ளே தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்!

நீலமும் பச்சையும் கலந்த ஒரு நிறத்தில் இருக்கிற இந்தப் பாசி, மெக்சிகோ, ஆப்ரிக்கா நாடுகளில் உள்ள ஏரிகளில் படர்ந்து இருக்கும். அங்குள்ள ஆதிவாசிகள் இதை ஆயிரம் வருடங்களுக்கு மேலாக 'அப்படியே சாப்பிட்டு' வந்திருக்கிறார்கள். அவர்களின் ஆரோக்கியத்துக்கு இதுவே முக்கிய காரணம் என்று தெரிந்து கொண்ட பிறகுதான், விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சியைச் சமீபத்தில் மேற்கொண்டன சில நாடுகள். சமீபத்தில் என்றால் அறுபதுகளிலும், எழுபதுகளிலும்.

நாஸா விண்வெளி ஏவுதளத்தில் இது ஆராயப்பட்டு, விண்வெளியில் சுற்றும் விஞ்ஞானிகளுக்கு ஏற்ற சத்துணவாகக் கருதத் தொடங்கினார்கள்.


இரும்புச் சத்தும், புரதச் சத்தும் நிறைந்த சுவையான சத்துணவு 'ஸ்பிருலினா' என்று உலகச் சுகாதார அமைப்பான டபிள்யூஎச்ஓ சான்றிதழே கொடுத்தது. சத்துணவுக் குறைபாட்டை மாற்றியமைக்கும் ஒரே போஷாக்கு உணவு இதுதான் என்றது.

விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் இதன் புகழைப் பாட ஆரம்பித்த பிறகு, இங்கே இருப்பவர்கள் சும்மா இருப்பார்களா, என்ன? கிரண்பேடி உபயோகிக்கத் தொடங்கினார். நீச்சல் வீராங்கனை நஃபீசா அலி தொடர்ந்தார். கிரிக்கெட் வீரர் சௌரவ் கங்கூலியும் விட்டு வைக்கவில்லை. 'பேஷ், பேஷ் ரொம்ப நன்னாயிருக்கு' என்று சொல்லாத குறைதான்!

இருபத்தோராம் நூற்றாண்டின் சூப்பர் சத்துணவு 'ஸ்பிருலினா'வில் அதிக பட்சம் இருப்பது புரதச்சத்துதான். சுமார் 65 சதவிகிதம். இது, தானியங்களில் இருப்பதைவிட மூன்று மடங்கு. பாலை விட இருபது மடங்கு. அதேபோல, 10 கிராம் 'ஸ்பிருலினா'வில் கிடைக்கிற, வைட்டமின் பி வகையைச் சேர்ந்த பீட்டா கரோடின், பச்சை காரட் மூலம் கிடைக்க வேண்டுமானால், 25 கிலோ சாப்பிட வேண்டியிருக்கும்! நடக்கிற காரியமா என்ன? வைட்டமின் ஏ-வும் 'ஸ்பிருலினா'வில் இருப்பதால், கண் பார்வை சமாசாரத்திலும் இதன் பங்கு குறிப்பிடத்தக்கது.

துத்தநாகம், கால்ஷியம், மக்னீஷியம், இரும்புச் சத்து, பாஸ்பரஸ் என்று எல்லா தாதுக்களும் இதில் இருக்கின்றன. துத்தநாகக் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு, சீனாவில் இப்போது ஸ்பிருலினாவைக் கொடுத்துப் பரிசோதனை செய்ததில் அபாரமான பலன் கிடைத்திருக்கிறது என்கிறார்கள். சில ஆராய்ச்சிகளின் முடிவுப்படி ஆர்த்ரைட்டிஸ், இருதய நோய், உடல் பருமன், மாதவிலக்குக்கு முன் ஏற்படும் மன அயர்ச்சி என்று கிட்டத்தட்ட சர்வரோக நிவாரணி மாதிரி சர்ட்டிபிகேட் கொடுத்து விட்டார்கள் 'ஸ்பிருலினா'வுக்கு.

இதோடு நிற்கவில்லை. சளி இருமலா? ஸ்பிருலினா. நோய் தொடி எளிதில் தாக்காமல் இருக்கணுமா? ஸ்பிருலினா. வழவழப்பான சருமம் வேணுமா? ஸ்பிருலினா.



நுரையீரலை பாதுகாக்கணுமா? ஸ்பிருலினா. இரத்த அழுத்தம் குறையணுமா? ஸ்பிருலினா என்று ஒரு ஸ்பிருலினா 'அஷ்டோத்திரம்' உருவாகிற அளவுக்கு அதன் புகழ் பரவியிருக்கிறது.

குடும்பம் மொத்தமுமே 'ஸ்பிருலினா' சாப்பிட்டுப் பயனடையலாம் என்கிறார்கள் டாக்டர்கள். தொடர்ந்து நெடு நேரம் உழைப்பவர்கள், சோர்ந்து போகாமல் வேலை பார்க்க, 'ஸ்பிருலினா' உதவுகிறதாம். இது சமச் சீரான சத்துணவு என்கிறார்கள்.

'ஸ்பிருலினா' ஓர் இயற்கை உணவு. அதனால் பாதுகாப்பானது, ஆபத்தில்லாதது என்கிறார்கள். எல்லாம் சரி.

பக்க விளைவுகள் எதுவுமே இல்லையா?

எல்லா வகை உணவுகளும், எல்லாருக்கும் ஏற்றதாக இருப்பதில்லை. சிலருக்கு அரிசி, சோளம், தானிய வகைகளில் சில - என்று அலர்ஜி லிஸ்ட்டே இருக்கிறது. சிலருக்குக் கறிகாய் அலர்ஜி. சிலருக்குப் பால் அலர்ஜி. அதுபோல, சிலருக்குச் சில பண்டங்கள் ஒத்துக் கொள்ளுவதில்லை.

அதே நிலைமைதான் 'ஸ்பிருலினா' விஷயத்திலும். ஆராய்ச்சி முடிவுகள் சாதகமாகவே இருந்தாலும், பக்க விளைவுகள் ஏதும் குறிப்பிட்டுச் சொல்லும்படி இல்லை என்றாலும், உங்கள் உடம்பு அதை ஏற்றுக் கொள்ளுகிறதா, சாப்பிடுங்கள். தொல்லை தந்ததா, முதலில் குறையுங்கள், பிறகு நிறுத்துங்கள். டாக்டரைக் கேளுங்கள்!

சென்ற நவம்பர் 98ல், 'டைம்' வாரப் பத்திரிகையின் கவர் ஸ்டோரியில், ஹெர்பல் மருந்துகளின் திடீர் ஆதிக்கம் பற்றி எழுதியிருந்தார்கள். 'இன்டர்நெட்டில் ஹெர்பல் மருந்துகள் பற்றி வருகிற எல்லாவற்றையும் அப்படியே வேத வாக்காகக் கருதி விழுங்கி வைக்காதீர்கள். ஆதாரபூர்வமாக, ஆராய்ச்சி பூர்வமாக அவை பற்றி வெளியிடப்பட்ட புத்தகங்களை முதலில் கவனமாகப் படியுங்கள். அப்புறம் அந்த ஹெர்பல் மருந்துகள் பக்கம் போகலாம்' என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருந்தார்கள்.

எனவே, உங்களுக்கும் 'ஸ்பிருலினா' காப்ஸ்யூல் விழுங்க ஆசை இருந்தால், அதைத் தயாரிக்கும் நிறுவனம் நம்பகமானதுதானா என்று உறுதி செய்து கொள்ளுங்கள். அடுத்த முறை டாக்டரிடம் போகும்போது எந்த பிராண்ட் 'ஸ்பிருலினா' சாப்பிடுகிறீர்கள் என்றும் தெரிவியுங்கள். 'ஸ்பிருலினா' ஆரோக்கியத்துக்கும், உடல் நலத்தைப் பாதுகாப்பதற்கும் உகந்ததே தவிர, நோய்க்கு மருந்து அல்ல.

'ஸ்பிருலினா'தான் சாப்பிட்டு விட்டோமே, சத்துணவுக்குச் சமம் ஆயிற்றே என்று வேளாவேளைக்கு உணவு சாப்பிடாமல், உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்! அது இன்னும் ஆபத்து.

தொகுப்பு: **சாருகேசி**

படம்: **ஸ்ரீஹரி**

போட்டிக் கதை – 2



அந்த சிவப்புக் கம்பளத்தையும், பேரீச்சம்பழ 'பாக்கெட்'டையும் எடுத்துக் கொண்டு பேருந்து நிலையத்திற்கே ஓடி வந்து விட்டாள் பரிதா.

''ஹஜ் பிரசாதம் அண்ணா. வேண்டாம்னு சொல்லப்படாது. வாப்பா ரொம்ப சங்கடப்படறார். அம்மா சொல்லி விட்டா. மருமக்களுக்குக் கொண்டு போய்க் கொடுங்க.''

தன்னிலை மறந்து ஓடி வந்ததில் அவளுக்கு மூச்சு வாங்கியது. வாப்பாவின் வீட்டிலிருந்து விடுபட்ட போது, உள்ளூர அடைத்துக் கொண்ட ஓர் அடைப்பு. கூடுதலாய் நெஞ்சில் ஏறிய கனம். இதயமே உருகி நிற்கிற பிரமை.

''இது எதுக்கு பரிதா? வீட்லயே வை. திரும்ப வரும்போது எடுத்துக்கறேன்!''

சங்கடத்தால் நெளிந்தும், வலுக்கட்டாயமாய் மறுத்தும்

சிவப்புக் கம்பளமும் சில பேரீச்சம் பழங்களும்

அவன் கேட்கவில்லை.

கொண்டு வந்ததை உரிமையாக இவனிடம் திணித்தான். சலசலக்கும் வளையோசை. இவன் கைகளிலோ நடுக்கம். மனைவி இதற்கும் என்ன சொல்வாளோ? தன்னை மீறி திரும்பவும் அங்கே எதற்குப் போனாய் என ஏசுவாளோ? உள்ளூர குறு குறுப்பின் ஊசலாட்டம்.

அவன் கொடுத்த பேரீச்சம்பழ பாக்கெட்டில் கூடுதல் கனம். கம்பளத்திலோ அதி அற்புத சுகந்த மணம். அத்தரோ? மருக்கொழுந்தோ? பேருந்தையே மயக்கும் வாசம். மூக்கை சுருக்கிச் சுருக்கி நாசியில் இழுத்து நுகரும் பயணிகள். பொட்டலத்தை சட்டைப் பையிலும், கம்பளத்தை மடியிலும் வைத்துக் கொண்டதும் அவன் கண்களில் நிறைய பரவசம். பளீரிடும் சிரிப்பு. உற்சாக மிகுதியில் கையாட்டும் வேகம்.



பேருந்து புறப்பட்டு விட்டது.

"அடுத்த வாரம் அண்ணியையும், மக்களையும் மறக்காம கூட்டிட்டு வாங்க!"

சகல பயணிகள் திரும்பிப் பார்த்தனர்.

'வாப்பாவின் ஆசீர்வாதத்திற்கும், உங்களின் அன்பிற்கும் சற்றும் பொருத்தமில்லா தவளம்மா என் மனைவி?!' இவனுக்குள் பதிலுக்குக் கத்த வேண்டும் போல் ஓர் ஆதங்கம். என்றாலும் வெளிப்படுத்த முடியாத இயலாமை.


வண்டி வேகமெடுத்து விட்டது.

ஆனால் உள்உரு மட்டும் வாப்பா வீட்டு முற்றத்திலேயே நிற்கிறது. மனம் விட்டுப் பேசும் தாஜ் மாமியின் பேச்சில் வாப்பாவின் ஒளிவுமறைவில்லாத அலசலில், தடதடக்கும் பூட்ஸ் கால்களில், காக்கி உடுப்புகளில், பரிதாவின் பளீரிடும் சிரிப்புக்குப் பின் மறையும் சோகத்தில். ஏனோ மனக்கண் முன் சிக்கந்தர் வந்து போனான். பரிதாவின் கணவன். வெளிறின தாடி. கண்களில் கூடுதல் பழுப்பு. மெலிதாய்த் தவழும் குறுஞ்சிரிப்பு. கோணிச் சாக்குகளை சைக்கிளில் சேகரித்து, கட்டி விற்று இருட்டின பின் வீடு திரும்பும் இளைஞன். கைவிலங்கிடப்பட்டு அடித்து இழுத்துப் போன வேகம். குடும்பமே அலறின அலறல்.

"கலைஜான் எதுவுஞ் செய்யல. விட்ருங்க. அல்லா!" பரிதாவின் கூப்பாடு வீதியையே கலங்கடித்த கோரம்.

ராகவனும் கலைவாணியும் திருமணம் முடித்த கையோடு ராம்நகருக்குத் தனிக் குடித்தனம் வந்த நேரம். முதலில் அறிமுகமான முகம் பரிதா. பத்து வயசு. பாவாடை சட்டைச் சிறுமி. எடுத்த எடுப்பில் அம்மன் கோயிலுக்குப் புறப்பட்ட வேளை செய்த அழிச்சாட்டியம். "கூட்டிப் போங்க" என ஒற்றை வார்த்தையில் ஒருக்களித்து நின்ற கதவுக்குப் பின்னே தாஜ்மாமி.

கா. சு. வேலாயுதன்



"தொகுதிப் பங்கீட்டில் தப்பு நடந்து போச்சு தலைவரே."

"என்னய்யா ஆச்சு?"

"கூட்டணிக் கட்சியினருக்கு ஒதுக்கிய தொகுதிகளையெல்லாம் கூட்டிப் பார்த்தால் மொத்தம் நூறு எம்.பி. தொகுதிகள் வருது!"

– ஜெ. கண்ணன்

கோவிலுக்குப் போனாலும் பிடிவாதம். நெற்றியில் குங்குமம். கையில் தீர்த்தம். திருநீறு. தலையில் அரளி, செவ்வந்திப் பூச் சூடி அவள் திரும்பி வந்தபோது அதிர்ந்து போனவர் வாப்பா.

"நெற்றியில வைக்கக் கூடாதும்மா" – பதறி, கட்டிலிலிருந்து எழுந்து வந்த வேகம். அழித்த தொனி. சிறுமி அழுத அழுகை.

"நாங்க எவ்வளவோ சொன்னோம். துளி கேட்க மாட்டேன்னுட்டா."

"சின்னப் பொண்ணுதான விடுங்க. நாளையிலிருந்து கழுத்தோட நிறுத்திக்கிறோம்."

அவ்வளவு சுலபமாய் அதை நிறுத்திவிட முடியவில்லை. எந்நேரமும் கலைவாணியிடமே ஒட்டுதல். தினம் தப்பினாலும் தப்பும். கோவிலுக்குப் போவது தப்பாது. அதே பிடிவாதம்.

"நெற்றியில வை."

"கூடாதும்மா!"

"எப்பவும் போல வச்சுட்டு எடுத்துக்கோயேன்...!"

"வாப்பா திட்டும். அடிக்கும்."

"அடிக்கட்டும். நீ வச்சு விடு."

"பரவால்லே. வச்சு விட்டுடும்மா!"

வாப்பாவும் பழகிப் போய் விட்டார். பன்னிரெண்டு வயதில் பரிதா சடங்கான வேளை. பெரியவன் ராமு பிறந்தான். பிறந்த தீட்டு; வளர்ந்த தீட்டு இரண்டு குடும்பத்திற்கும். தர்க்காவிற்குப் போய் வந்து அவர்கள் பரிதாவிற்கு செய்த சீர் முறையில் கலைவாணிக்கு வருத்தம். இவன் பங்குக்கு சேலை, ரவிக்கை, கைவளையல், கண்ணாடி, பூவும் பொட்டும் வாங்கி கூந்தல் நிறைய மல்லிகை சூடி பரிதாவை அழகு பார்த்தபோது வாப்பாவே கண்ணீர் விட்டு விட்டார். இரண்டு குடும்பங்களும் ஒன்றுக்குள் ஒன்றாகிப் போனது அப்போதுதான்.

ஐந்தே வருடம். ராமுவையும், அடுத்தவன் சோமுவையும் இடுப்பில் சுமந்து திரிந்த பரிதாவிற்கு மாப்பிள்ளை தகைந்து விட்டது. கேரளா பையன். முகமூடியாய் மல்லிகைப்பூ சூடி வந்த வேளை. வெட்கப்பட்டு நின்ற பரிதாவிற்கு துணைப் பெண்ணாய் கலைவாணி.

மாப்பிள்ளையும் தானுண்டு வேலையுண்டு என மாமனார் வீட்டிலேயே தொழில் ஏற்படுத்திக் கொண்டு தங்கவும் வந்தது வினை. மூலைக்கு மூலை வெடித்த குண்டுகளின் காரணியாய் சிக்கந்தர் மாட்டிக் கொண்டான். நகருக்குப் புதிதாக வந்தவர்கள் மீது போலீசுக்கு ஏற்பட்ட சந்தேகம். 'விசாரணைக்குப் பிறகு விட்டு விடுவோம்' என இழுத்துப் போன போலீஸார் சொன்னது பொய்யாய்ப் போனது.

ஏராள வெடிமருந்துகளுடன் பிடிபட்டதாக இவன் புகைப்படம் பத்திரிகையில் ஒரு வாரம் கழித்து வெளியானதும் தெருவே திமிலோகப்பட்டது. இவர்கள் வீட்டில் குண்டுகள் இருப்பதாகச் சொல்லி வீட்டையே சீல் வைக்க அதிகாரிகள் வந்துவிட வீட்டுக்காரியே அரண்டு போனாள்.

"நேரங்காலமா வீட்டைக் காலி பண்ணிடுங்க சாமீ. உங்களுக்குப் புண்ணியமாப் போவும்!"

"இருபத்தி ஏழு வருஷம். இங்கேயே இருந்து பழகிட்டோம். இனி எங்கே போவோம்?"

"இன்ஷா அல்லா! இது என்ன சோதனை?"

கலங்கி நின்ற வாப்பா. திகிலடித்து நிற்கும் பரிதா. அழுது துவளும் தாஜ் மாமி.

"நீங்களே இப்படிச் சொன்னா எப்படிம்மா?"

வீட்டுக்காரியும் எவரும் கிட்டே போய் நிற்காத நிலையில் ராகவனிடம் மட்டும் புறப்பட்டது கேள்வி.

"அதுதான் போலீஸே சொல்லுதே?"

"போலீஸ் ஆயிரம் சொல்லும். உண்மை

நமக்குத் தெரியாதா?"

"ஆமா, நல்ல உண்மை. ஊரே நாறிடுச்சு. ரொம்பத் தெரிஞ்சா நீ வேண்ணா அவங்களுக்கு ஒரு வீட்டைக் கட்டிக் கொடு! ஏம்மா, கலைவாணி, உம் புருஷன் அவங்களுக்கு வக்காலத்து வாங்கறதுன்னா நீயும் சட்டிபானையைத் தூக்க வேண்டியதுதான். ஆமாம்!"

மனைவியிடம் எகிறிய வீட்டுக்காரி. கலைவாணியின் கண்களில் துளி அசைவில்லை. திரும்ப ஒரு வார்த்தை.' 'பரிதாவுக்கு இந்த நிலைமை வந்திருக்கக் கூடாது.' வெற்று ஆற்றலோடு நின்றது. 'ஆதங்கப்படலாம். அதற்காகத் தோளில் சுமக்கவா முடியும்?' கூடவே இவனுக்கு அட்வைஸ்.

எல்லாக் கதவுகளும் இறுக அடைத்துக் கொண்ட நிலை. வாப்பா படுத்த படுக்கையில். தாஜ் மாமி ஊரில் இருக்கும் சொந்த பந்தங்களிடம் ஓடினாள். பொள்ளாச்சிப் பக்கம் வீடு பிடித்து அமர்ந்த போது பரிதா ஒரு பெண் குழந்தைக்குத் தாயாகி விட்டாள்.

குழந்தையைக் கண்டபின் அவளிடம் புதிய மலர்ச்சி. புருஷனைத் 'தலாக்' செய்து விட முடிவு செய்து விட்டதாய் அடிக்கடி புறப்பட்ட வார்த்தைகள்.

"பொறு மகளே ஹஜ் யாத்திரை முடியட்டும். அல்லா நிச்சயம் கண் திறப்பார். அவர் குற்றம் ருசுவாகட்டும். அப்புறம் முடிவெடுப்போம்."

வாப்பா ரொம்பவும் பொறுமை காத்தார்.

பொத்திப் பொத்தி வளர்க்கப்பட்ட ஒரே மகளின் வாழ்க்கை. இப்படியா பூத்தவுடன் கருக வேண்டும்? ஹஜ் யாத்திரை புறப்பட்ட நேரத்திலும் அவரிடம் அதே யதார்த்த வெளிப்பாடு.

"போன வருஷமே போக வேண்டியது ராகவ். தடங்கலாப் போச்சு. அதுதான் அல்லா இப்படி சோதிக்கிறார்னு மாமி ஃபீல் பண்றா. இடம் புதுசு. மனசு வேதனை. பரிதா கைக் குழந்தையோட எப்படி வருவா? அதனால கொஞ்சம் அடிக்கடி வந்து பார்த்துக்க. மருமகளும் வந்தான்னா அவளுக்குக் கூடுதல் ஆறுதலா இருக்கும். தவறாம செய்வியா? எப்படியும் நாற்பத்தி எட்டு நாள்ல திரும்பிடுவோம்."


அவரின் வார்த்தைகளை அச்சரம் பிசகாமல் கலைவாணியிடம் வைத்ததில், முதன் முதலாய் அவளிடம் தெரிந்த குரூர முகம்.

"உங்களை முதல்ல அங்கே யாரு போகச் சொன்னா?"

"என்ன கலா? நம்ம வீட்டுக்குப் போக யார் சொல்லணும்?"

"ஆமா உங்க வீடு. குண்டு வச்சு ஜெயில்ல இருக்கிறவன் உங்க மாமன். அவனுக்குக் கட்டிக் கொடுத்திருக்கிறது கூடப் பிறந்தவ. அப்பன் ஆத்தா புனிதப் பயணம் போறாங்க. நான் போய்க் காவல் காக்கணும் இல்லே?"

"எல்லோரையும் போல நம்மளும்



"உங்க கட்சிக்கு இரண்டு சீட் ஒதுக்கியும் ஏன் வருத்தமா இருக்கீங்க?"

"வேட்பாளரா நிறுத்தறதுக்கு இன்னொரு ஆளுக்கு என்ன செய்யறதுன்னுதான்."

– சு. சூர்யா

பேசினா எப்படி கலா?"

"ம். எல்லோரும் இப்ப உங்களைத்தான் பேசறாங்க. இருபத்தேழு வருஷம் குடி வச்ச வீட்டுக்காரர்களே உருகிக்கல. வெறும் எட்டு வருஷப் பழக்கம். உங்களுக்கென்ன அக்கறை? வாப்பா மருமகனோட இவ புருஷனுக்கும் நெருக்கம்னு. மத்தவா போலீஸ் கிட்ட சொல்லி அனுப்பாத குறைதான் எனக்கு."

"அப்படித்தான்னு சொல்லேன்."

"ம்... நீங்க சொல்லுவீங்க. ஏடாகூடமா ஏதும் வந்துட்டா அலையறது நீங்கள்ல. நானும் குழந்தைகளும்! அப்புறம் பரிதாவாட்டம் கண்ணைக் கசக்கிட்டு உயிரோட இருப்பேன்னு மட்டும் கனவுலயும் நினைச்சுடாதீங்க?"



• கார்கில் வீரர்களுக்காக ரத்ததான முகாம் நடத்தியபோது...

ஒரு சுகமான உறிஞ்சல்!

வாடிக்கையாளர்களின் ரத்தத்தை உறிஞ்சுகிற வங்கி பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? படாதவர்கள் கிண்டியிலுள்ள இந்தியன் வங்கிக் கிளைக்கு வந்து பாருங்கள். வந்த கையோடு வங்கிக் கணக்கு ஒன்றையும் தொடங்கிவிடுங்கள். அப்புறம் பாருங்கள்! உங்கள் ரத்தம் உங்களுக்கானதாக மட்டும் இருக்காது. அவ்வப்போது உங்கள் ரத்தத்தை உறிஞ்சி விடுவார்கள். ''ஆனாலும் இது சுகமான உறிஞ்சல்!'' என்று சந்தோஷப்படுகிறார்கள் வாடிக்கையாளர்கள்.

காரணம்? இவர்கள் அவ்வப்போது நடத்துவது ரத்ததான முகாம்கள். வங்கியில் பணிபுரியும் அத்தனை ஊழியர்களும் 'நான்முந்தி நீ முந்தி' என்று ரத்ததானம் கொடுக்கிறபோது, வாடிக்கையாளர்கள் தாங்களாகவே முன் வந்து தானம் கொடுத்து விட்டுப் போகிறார்கள்.

''வாடிக்கையாளர் சேவை என்பது வங்கிகளுக்கு முக்கியமான கடமைதான். ஆனால், அதையும் தாண்டி ஒரு சமூகப் பார்வை அவசியமல்லவா!'' என்கிறார் இந்தியன் வங்கியின் கிண்டி கிளை தலைமை மேலாளர் திருமலை.

— சி.எம்.

உடைந்து நீளும் அழுகையின் வெடிப்பு. வாப்பாவிற்கு வாக்குக் கொடுத்தபடி பொள்ளாச்சி போகவே யில்லை.

அரித்தெடுக்கும் மனஹிம்சை. ஐம்பது நாட்கள் கழித்து அவர்கள் வீட்டில் காலடி எடுத்து வைக்கும் போது. அதற்கும் மேலாய் உள்ளூரக் கவிழும் வெக்கை. குத்தியெடுக்கும் குற்ற உணர்வு. போகும்போது கலை வாணியிடமும் சொல்லிக் கொள்ள வில்லை. எதற்குச் சொல்ல வேண்டும்? உள்ளே ஈறும் பேனுமாய் நாறும் அவளுக்கு என்ன மரியாதை.

தலையை ஆட்டி ஆட்டிப் போனவன் வராததால் பரிதா எப்படித் துடித்துப் போயிருப் பாள்? வாசலைப் பார்த்தே ஏங்கியிருக்கும் விழிகளின் துவள்ச்சி இப்போது எப்படியெல்லாம் வடிவம் கொள்ளும்? குறுக்கும் நெடுக்கும் மனதில் ஓடும் கருமைக் கோடுகள். அதற்கு இடமே வைக்க வில்லை அவர்கள். "வாங்க தம்பீ...!" வரவேற்கும் தாஜ் மாமி.

"இன்னைக்கு அம்பத்திரெண்டு நாள். அண்ண னுக்கு இப்பத்தான் தடம் தெரிஞ்சிருக்கு பாரு வாப்பா!"

கபடம் காட்டாது குழந்தையுடன் எதிர்ப்படும் பரிதா.

"தம்பிக்கு என்ன பிரச்னையோ என்னவோ? வந்தவுடன் ஆரம்பிச்சுடுவியே. நகரு!"

வாப்பாவிடம் அதே முறுவல். மலர்ச்சி. பாயை விரித்துப் போடும் மாமி. "கலைவாணிய ஏன் கூட்டிட்டு வரலே?" புறப்பட்ட கேள்விகள்.

"பரிதாவை தினம் தப்பாம வந்து பார்த்துக்கு வேன்னு யாத்திரை போனோம். போனவன் வரவேயில்லைன்னு பரிதா சொன்னதும் துடிச்சுப் போயிட்டோம். எங்கே எல்லோராட்டம் வராமலே போயிடுவியோன்னு பயந்தோம். நல்லவேளை வந்தியே."

வாப்பாவின் கண்கள் நீரால் மினுங்கின. ஒரு சுற்று இளைத்திருந்தார். இருப்பினும் பேச்சில் நல்ல தெளிவு. மனிதர் ஹஜ் பயணம் பற்றி நிறைய பேசினார். அங்கே உள்ள லஞ்சம் பற்றி. அன்னிய நாட்டைச் சேர்ந்த தொழிலாளர்களிடம் அநியாய மாய் 'இஹ்ஹாஹ்' வசூல் செய்வது பற்றி.

"அவங்க இருக்கிறது முப்பது சதம்தான். எழுபது சதம் அயல்நாட்டவங்க. அதிலும் பாதி நம்ம இந்தியர்கள். அவங்க எல்லாம் அங்கே பல வழிகளில் ஏமாற்றப்படறாங்க தெரியுமா?

அவங்களுக்காக இங்கிருந்து போராடவே அங்கே நிறைய பிரச்னை இருக்கு. ஆனா நம்மதான் மசூதி, கோயில்ன்னு பிரச்னைகளை உருவாக்கிட்டு அழறோம்.''

மாமி தட்டில் தோலுரிக்காத பேரீச்சம் பழங்கள் சிலவற்றையும், பிஸ்கட்டையும் கொண்டு வந்து வைத்தார். 'தோலுரிக்காத பேரீச்சம் பழம்தான். ஆனால் உள்ளே பாதாம் பருப்பு இருக்கும்!' அதிசயப்பட வைத்தார் வாப்பா. அப்படியே இருந்தது. எப்படி? நல்ல சுவை. "காசுள்ள மகராசர்கள். எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம்.'' பரிதா சிரித்தாள். கையில் சிவப்புக் கம்பளம்.

"எங்க வாப்பா உங்களுக்காக வாங்கி வந்தது. நல்லாருக்கா?'' விரித்த கம்பளத்தில் ஜொலிக்கும் மினுமினுப்பு. நடுவில் மக்கா. தொழுகை நடத்தும் ஜனக் குவியல்.

"அங்கே எல்லோரும் பார்த்துப் பார்த்து வாங்கறது இதுதான் ராகவன். இதை விரிச்சுத்தான் அஞ்சு நேரத் தொழுகையும் நடத்தறாங்க. நா பச்சைக் கம்பளம் ஒண்ணு எடுத்தேன். மாமிதான் உனக்குப் பிடிச்ச நிறம் சிவப்புன்னு இதை எடுத்தா. நல்லாருக்கா?''

அவருக்குப் பதில் சொல்வதற்குள் தாஜ் மாமியிடம் பரபரப்பு. வெளியே ஓடினாள். பரிதா வீட்டுக்குள் முடங்கினாள்.

வாசலில் நிழலாட்டம். வாப்பாவின் முகம் இறுகியது.

"ராகவ் நீ புறப்படு. மறுபடியும் ரெய்டு. உனக்கு சிரமம்.''

பின்பக்க வழியாக கதவு வரை வந்தார் வாப்பா.

"இப்படித்தான் அடிக்கடி நடக்குது. என்ன செய்யறது? தலையெழுத்து!'' தடுமாறும் வார்த்தைகள். வெளியே திரவி திரவி முகத்தில் கரிபூசுகிறாற்போல் இருட்டு.

ஒரு குலுக்கலுடன் முன்பக்க இருக்கையில் மோதியதில் நல்ல அடி. பேருந்து ஓர் அத்வானக் காட்டில் நின்றிருந்தது போல் பட்டது. எட்டிப் பார்த்ததில் கருகருவென இருட்டில் நகரும் நிழல்கள். நீள் வரிசையில் காத்திருக்கும் வாகனங்கள். தூரத்தில் ஆடும் சிவப்பு விளக்கு. ஒவ்வொரு வண்டியிலும் ஏறி இறங்கும் உருவங்கள்.

"என்ன ஆச்சு?''

உள்ளே பயணிகளின் சலசலப்பு.

"மறுபடியும் தீவிரவாதிக ஊடுருவலாம்.''

"எங்கேயிருந்து?''

''ஹஜ்லயிருந்தாம். நாற்பது குண்டுகளாம்!''

காக்கி உடுப்புகள் இந்த வண்டியிலும்.

"யாரு?''

"எந்த ஊரு?''

"பையில என்ன?''

"எங்கேயிருந்து வர்றே?''

'சுருக், சுருக்' கேள்விகள். நீளநீளமாய் உருவங்கள்.


காக்கிச் சட்டைகள் கிட்டே வர வர நெஞ்சில் ஏறும் பயம். பாக்கெட்டில் கனமாய் அந்தப் பொட்டலம். அனிச்சையாய் கண நேரத் தடுமாற்றம்.

'பேரீச்சம் பழம்தானா?'

சட்டையை நனைத்தது வியர்வை. பொட்டலத்தைப் பிரித்தே பார்த்திராததன் சுடுதாக்கம். நொடிப் பொழுதில் சடுகுடு விளையாடிய சலனம். பரபரவென அதனை எடுத்துப் பிரித்தன கைகள். விரல்களில் நடுக்கம். தடுமாற்றம். ரொம்ப இறுக்கமாய்ப் 'பேக்' செய்யப்பட்ட பொட்டலம். குரங்குத்தனமாய்ப் பிய்த்து உதறப்பட்டதில் கீழே சிதறி உருண்டவை சில பேரீச்சம் பழங்கள்தான்.

உள்ளூர நிறையும் ஆசுவாசம்.

கம்பளத்தை மட்டும் இறுகப்பற்றின கைகள். ○



''தலைவர் கேட்ட கேள்வியை பார்த்துட்டு நீதிபதியே அசந்துட்டாரா! அப்படி என்ன கேட்டார்?''

''இந்த கோர்ட் கட்டடத்தை நான் விலைக்கு வாங்கிக்கிறேன் தரீங்களா'ன்னு கேட்டுட்டார்.''

— ஜெ. கண்ணன்

நீங்கள் கேட்டவை — தராசு

கொழுக்கட்டை மருந்துக்கு



• நல்ல காலம்!

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? 'நாட்டுக்குத் தேவை நிலையான அரசு அல்ல; நிலையான கொள்கைதான்' என்கிறாரே ப. சிதம்பரம்.

! எந்த அரசு வந்தாலும் கவிழ்த்து விடுவது என்பது தானே த.மா.கா. உள்பட அனைவருக்கும் இப்போது நிலையான கொள்கையாக உள்ளது!



• 'கும்பிடும் காலம்'!

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் டி.என். சேஷன்?

! வழுக்கி விழுந்து விட்டார். பட்ட அடியின் விவரம் எழுந்தால்தான் தெரியும்.

● ஷ்யாமளா சுவாமிநாதன், திருவனந்தபுரம்.


? அண்மையில் திருவனந்தபுரம் வானொலி நடத்திய கல்கி நூற்றாண்டு விழாவில் பேசிய பேராசிரியர் ஒருவர், தரமான பத்திரிகையான கல்கி, விற்பனையில் இன்னும் பின்தங்கி இருக்கிறது என்று சொன்னாரே...?

! விற்பனை எண்ணிக்கை என்பது வியாபார நோக்கு. கல்கி அந்த நோக்கிலே மட்டும் நடத்தப்படுவதில்லை. ஒவ்வொரு கல்கி இதழையும் பத்துப் பேர் படிக்கிறார்கள். இந்த வாசகர் எண்ணிக்கை வேறு எந்த பத்திரிகைக்கும் இடையாது. கல்கியின் தரத்துக்குக் கிடைக்கும் அங்கீகாரம் இது.

● ஆர். ராஜதுரை, சீர்காழி.

? ஆர்.எஸ்.எஸ். தலைவர் ராஜேந்திர சிங் காலில் விழுந்து பிரதமர் வாஜ்பாய் குருதட்சணை அளித்தது பற்றி...?

! குருதட்சிணை அளித்து வணங்குவது என்பது வேறு; குருநாதர் கூறிய அனைத்தையுமே ஏற்பது என்பது வேறு. முன்னதைப் பண்பாடு என வரவேற்கலாம். பின்னது அறிவை அடகு வைப்பதாகும். வாஜ்பாய் அப்படி அடகு வைத்து விடவில்லை என்பது கோவிந்தாச்சார்யா அறிக்கைக்கு (அயோத்தி) அவர் கண்டனம் தெரிவித்திருப்பது உணர்த்துகிறது.



• தட்சணை தந்தாலும்...

● ஆர். சரோஜா, நாட்டரசன்கோட்டை.

? 'என்னை எம்.பி. ஆக்கினால், மகா இல்லாடி என பெயர் எடுப்பேன்' என்று மலைச்சாமி கூறுகிறாரே...?

! 'இல்லாடி' என்பதற்கு 'அயோக்கியன்' என்று அர்த்தம் சொல்கிறது சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டிருக்கும் தமிழ் அகராதி.

● கே. ஆர். உதயகுமார், சென்னை – 1.

? துக்கத்தைச் சொல்வதுதான் இலக்கியம் என்று எழுத்தாளர் சுந்தர ராமசாமி சொல்வதில் தராசுக்கு உடன்பாடு உண்டா...?

! படித்து முடித்த பிறகு, படித்தவனை ஒரு மில்லி மீட்டராவது மனத்தளவில் முன்னிலும் அதிகமாக உயர்த்தியிருக்க வேண்டும். அப்படிப்பட்டவைதாம் இலக்கியங்கள். இது என் கருத்து மட்டும் அல்ல; ராஜாஜி போன்ற மேதைகளின் கருத்தும் கூட.

● க. இராஜசேகரன், மயிலாடுதுறை.

? கார்கில் போர் ஏற்படுத்திய தேசப்பற்றினால் வோட்டுப் போடுவோர் சதவிகிதம் அதிகரிக்குமா...?

! கார்கிலுக்காக அன்றி, வோட்டுப் போடுவதே தேசப்பற்றின் வெளிப்பாடுதான் என்ற எண்ணம் உருவாவதுதான் ஜனநாயகத்துக்கு நல்லது. கார்கில் பிரச்னை இன்று இருக்கும்;



• செம்பியன்



• இலக்கிய இலக்கணம்!



• 'ஜம்பிங்'...



• ....நிபுணர்கள்



• 'கொள்கைப்' பிரகடனம்!



• அகராதி அர்த்தம்



• எழுந்தால் தெரியும்!

நாளை இல்லாமலும் போகும். வோட்டுப் போடுவது தேர்தலுக்குத் தேர்தல் அதிகரிக்க வேண்டும்.

● **எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.**

? எஸ்.எஸ். சந்திரன், ராதாரவியின் ஜம்பிங் எப்படி....?

! சேரப் போன அன்றே 'ஜெ'வுக்காகக் காத்திருந்து காத்திருந்து ஏமாந்து திரும்பிய அவமானமெல்லாம் தேவைதானா? தேவை தான் என்கிறவர்கள் பற்றி நாம் என்ன சொல்ல முடியும்!

● **கே. ஆர். வெங்கடேஷ், சீர்காழி.**

அழைக்கிறாரே ராமகோபாலன்?

? விநாயகர் சதுர்த்திக்குக் கொழுக்கட்டை சாப்பிட வருமாறு முதல்வரை அழைப்பது தமது உரிமை என்றும் அதில் கலந்து கொள்வது அவரது கடமை என்றும் ராமகோபாலன் கூறியிருப்பது பற்றி...?

! பரமசிவன் கழுத்துப் பாம்பு போல் நடந்துகொள்ள ஆசைப்பட்டு அரசியல் நோக்கில் புதிய மரபுகளை உருவாக்க எண்ணுகிறார் ராமகோபாலன். அதில் ஆன்மிகச் சதவிகிதம் ரொம்பக் குறைவு. அப்புறம் அவராச்சு; கலைஞர் ஆச்சு!

● **க. நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.**

? இப்போது தேர்தல் காலம். கல் மண்ணைப் பார்த்தாலும் கும்பிட வேண்டும் என்கிறாரே துரைமுருகன்?



• சவால் கொழுக்கட்டை!

! மக்கள் எஜமானர்கள் என்ற மனோபாவம் தேர்தல் சமயத்தில் நிறையவே வளர்ந்துவிடும். எனவே ஆட்சியின் சாதனைகளைச் சொன்ன பிறகும் கும்பிடு போட்டால்தான் காரியம் நடக்கும். விரைப்பாக நின்றால் முறைத்துக் கொண்டு போய்விடுவார்கள்!

● **புளியரை கணேசன், சென்னை – 30.**

? 'உங்கள் குடும்ப சேனல்' ஜெயா டீவி பற்றி...?

! இரட்டை இலை சின்னத்துடன் அட்டகாசமாக ஆரம்பித்திருக்கிறது. 'ஜெ' வாழ்த்து, ஜெயேந்திரர் அருளுரை இன்னும் திரையுலக... அரசியல் உலகப் பிரமுகர்கள் வாழ்த்து... அப்புறம் வழக்கமாக மற்ற சானல்களில் வருவது போல்தான்.

● **வி. பாலகிருஷ்ணன், லால்குடி.**

? எண்பதுகளில் கல்கியில் வெளிவந்த 'ரவிகுலதிலகன்' என்னும் தொடர்கதைத் தொகுப்பு படிக்க நேர்ந்தது. அதை எழுதிய செம்பியன் யார்...?

! பொன்னியின் புதல்வரின் புதல்வர்.

● **சி. பூங்கோதை, சென்னை – 78.**

? இதுவரை முந்நூற்றெண்பத்தெட்டு கோடி கார்கில் நிதிக்காக வசூல் ஆகி உள்ளதைப் பார்க்கும்போது இந்தியா எப்படி ஏழை நாடாகும்?

! இந்தியா ஏழைதான்; ஆனால் பரோபகாரத்தில் ஏழைமை இல்லை.

● **நா. சாலமோன், ஆலங்குளம்.**

? தி.மு.க.வில் மதிப்பில்லையென்று ராதாரவியும் சந்திரனும் வெளியேறி அ.தி.மு.க வில் சேர்ந்தது போல் தாமரைக்கனி தி.மு.க.வில் சேராதது ஏன்...?

! அது தி.மு.க.வின் நல்ல காலம்.

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
ஆர். ராஜதுரை,
97, பிடாரி வடக்கு வீதி,
சீர்காழி - 609 110.

• சரோஜா

ராசிபுரம் தொகுதி:

அம்மாவை விடவும் ஆட்டம் போடும் அம்மணி?



பா.ம.க.வும், ராஜீவ் காங்கிரஸ் வாழப்பாடியும் கடைசி வரை இந்தத் தொகுதி எனக்குத்தான் என்று அடித்துப் பிடித்துக் கொண்ட 'தனித்' தொகுதி. இந்தக் கசப்பு கடுகளவும் இல்லாது இரு தரப்பும் தொகுதிப் பணி செய்து கொண்டிருப்பதாகச் சொன்னார்கள் பாட்டாளி மக்கள் கட்சியினர்.

ராசிபுரம் மக்களவைத் தொகுதியில் ராசிபுரம், சேந்தமங்கலம், நாமக்கல், ஆத்தூர், தலைவாசல், சின்ன சேலம் ஆகிய அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் திரும்பிய பக்கமெல்லாம் பா.ம.க.வின் 'மாங்கனி'ச் சின்னங்கள். தி.மு.க, பா.ஜ.க, ம.தி.மு.க, ராஜீவ் காங்கிரஸ் என்று எல்லோருமே வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு பா.ம.க வேட்பாளர் உதய அரசுக்கு வேலை செய்வதைக் காண முடிந்தது.

"எங்கள் அணி வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கு சார். ராஜீவ் காங்கிரஸ் அதிருப்தியெல்லாம் இல்லவே இல்லை. இந்தத் தொகுதி முன்னாள் எம்.பி. சரோஜாவே இங்கே மீண்டும் நிற்பது எங்களுக்கு வசதி. ஏனென்றால் அந்தம்மா மீது மக்களுக்கு பதின்மூன்று மாத காலத்திலேயே பயங்கர அதிருப்தி. அதுவே மாங்கனியை பல லட்சம் வாக்கு வித்தியாசத்தில் ஜெயிக்க வைத்து விடும்" என்கிறார்கள்.

வேட்பாளர் உதயஅரசு தொகுதிக்குப் புதியவர். வயது 42. சொந்த ஊர் ஆத்தூர் - பெத்த நாய்க்கன்பாளையம். 1984லிருந்தே டாக்டர் ராமதாஸுடன் இணைந்திருப்பவர். ஈரான், நார்வே நாடுகளில் எஞ்ஜினியராகப் பணி புரிந்தவர். சென்னை மெட்ரோ வாட்டரில் எஞ்ஜினியராக இருந்து பிறகு பாம்பே ஹோட்டல் கார்ப்பரேஷன் ஆப் இண்டியாவில் மானேஜராக இருந்து, இப்போது கட்சிப் பணிக்கே தம்மை அர்ப்பணிக்க பணியை ராஜினாமா செய்திருக்கிறார். நல்ல மனிதர் என்கிற பெயர் பிரசாரத்தில் முழு அங்கம் வகிக்கிறது.

இரட்டை இலையில் 'அம்மா' கட்சியில் நிற்கும் 'அம்மணி' அம்மாவை விடவும் ஆட்டம் போடுபவர் என்கிறார்கள் தொகுதிவாசிகள். சென்றமுறை தேர்தலில் வன்னியர் (பா.ம.க) ஆதரவால் வென்று விட்டு அவர்களையே கண்டு கொள்ளாமல் விட்டு விட்டாராம். வாழப்பாடியாரிடம் உள்ள செல்வாக்கில் பெற்றுக் கொண்ட ஏராள காஸ் கனெக்ஷன்களை (பல ஆயிரம் என்கிறார்கள்) இரண்டாயிரம் ரூபாய், மூவாயிரம் ரூபாய்



• உதயஅரசு

என விலை வைத்து, விற்று விட்டதை ஒரு கூட்டத்தில் 'வாழப் பாடியே' சூசகமாகத் தெரிவித்தாராம். 'அம்மா' கட்சிக்கு எதிராக – வாஜ்பாய்க்கு 'ஆதரவாக' கடைசி நேரத்தில் பாராளுமன்றத்தில் வோட்டுப் போட இருந்த இந்த அம்மணிக்கு எப்படி 'சீட்' கிடைத்தது என்று அவர்தம் கட்சிக்காரர்களே ஆச்சரியப்படுகிறார்கள். இதில் முன்னாள் அமைச்சர் 'செல்வ கணபதி' கோஷ்டிக்குப் பயங்கர அதிருப்தி என்பதால், நாற்பது சதம் கட்சி வோட்டுக்கள் பா.ம.க விற்கு சாதகமாக அமையும் என்று எதிர்த் தரப்பில் கணக்குப் போடுகிறார்கள். தொகுதி நிதி ஒதுக்கீடு கூட பத்து சதவீதம் பேரத்தின் பேரிலேயே ஒதுக்கீடு செய்யப்பட்டதாம்.

தொகுதியில் இரட்டை இலைச் சின்னங்களை அதிகம் காணோம். கிராமப் பகுதிகளில் மட்டும்தான் சின்னச் சின்ன சுவர்களில் இரட்டை இலையைக் காண முடிகிறது. தேர்தல் அலுவலகம்கூட ராசிபுரத்தில் அப்போதுதான் அமைத்துக் கொண்டிருந்தனர். என்ன காரணம்? இன்னும் 'பெட்டி' வரவில்லையெனத் தகவல். வந்ததை இவரே வைத்துக் கொண்டாரோ என்ற சலசலப்பு!

"அம்மணியை எங்கே பார்க்கலாம்?" என்று கட்சிக்காரர்களிடம் கேட்டால் நீண்ட யோசனை. "நாங்களே பார்த்ததில்லை. உங்களுக்கு எப்படிச் சொல்ல முடியும்?" என்கிறார்கள்.

இறுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் சரோஜாவை நாமக்கல் கலெக்டரேட்டில், வேட்புமனு பரிசிலனையின்போது பிடித்துக் கொண்டோம். ரொம்பவும் அலட்டிக் கொண்டார். "நான்கைந்து நாட்கள் கழித்து வாருங்கள். புள்ளி விவரமாகச் சொல்கிறேன்!" என்றார்.

"சில வரியில் சொல்லுங்களேன். பதின்மூன்று மாதப் பதவியில் என்ன செய்தீர்கள்?" என்று வற்புறுத்தினோம்.

"அதை மக்கள் கிட்டேயே கேளுங்க. ரொம்ப உயர்வாச் சொல்லுவாங்க. ஏன்? இங்கே உங்கள் சக பத்திரிகைக்காரங்க கிட்டக் கேளுங்க. புள்ளி விவரமே கொடுப்பாங்க!" என்று சொல்லிக் கொண்டே புறப்பட்டு விட்டார். சக பத்திரிகையாளர்கள், "அவர் எங்க கிட்டவும் இப்படித்தான் சார். என்ன செய்ய?" என்றனர்.



தேர்தல் '99

எல்லாம் சரி. இந்த அலட்டல் அம்மணிக்கு வெற்றி வாய்ப்பு எப்படி? சிலரிடம் கேட்டோம். "போட்டுப் பழக்கப்பட்ட சின்னம் இரட்டை இலை. விட மனசு வருதா சொல்லு!" என்றது ஒரு பெரிசு. இந்த வெகுளி வோட்டுக்கள்தான் சரோஜாவை இந்த அலட்டு அலட்ட வைக்கிறது. இந்தத் தொகுதியை இவரிடமிருந்து விடுவிக்க பா.ம.க இளைஞர்கள் கடுமையாகப் பாடுபட வேண்டும்.

கட்டுரை, படங்கள்: **ரோகிணி**




மேஜிக் நிபுணர் கே. லால்


குவைத் நாட்டுக்கு நிகழ்ச்சி நடத்துவதற்காக அழைப்பு வந்தபோது நான் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டு, ஒரு மாதம் முன்பாகவே, என்னுடைய 'மாயாஜால்' நிகழ்ச்சி விளம்பரத்துக்காக, வண்ணப் போஸ்டர்களை அங்கே அனுப்பி வைத்தேன். நகரமெங்கும் கண்ணைக் கவரும் விதமாக போஸ்டர்கள். ஆனால், விளம்பர நோக்கத்துடன், டிக்கெட் விற்பனையைப் பெருக்குவதற்காகச் செய்யப்பட்ட இந்தக் காரியம் ஓர் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தி விட்டது.

என்ன ஆயிற்று தெரியுமா? மேஜிக் நிபுணர் லாலை, குவைத் மண்ணில் காலடி வைக்கவே அனுமதிக்கக் கூடாது என்று எதிர்ப்புக் குரல் எழுந்தது. இதற்கு முக்கியமான காரணம், அந்த விளம்பர போஸ்டரில் இடம்பெற்றிருந்த படம்தான். ஆம்! நான் ஒரு பெண்ணைப் படுக்க வைத்து, அவளது வயிற்றுப் பகுதியில், ரம்பத்தால் அறுத்து, அந்தப் பெண்ணை இரண்டு துண்டுகளாக்குவது போன்ற காட்சிதான் போஸ்டரில் இடம்பெற்றிருந்தது. அது என் மேஜிக் நிகழ்ச்சியில் இடம்பெறும் ஒரு முக்கியமான ஐட்டம். பார்வையாளர்களை, பிரமிக்க வைத்து, வாயடைத்துப் போக வைக்கிற பாபுலர் ஐட்டம் அது. எனவேதான், அதனை போஸ்டரில் இடம்பெறச் செய்திருந்தேன்.

குவைத் நாட்டில் ஒருசிலர், ஒரு பெண்ணை இரண்டு துண்டாக்குவது சாத்தான் செய்யும் செயலாகத்தான் இருக்க முடியும். சாத்தானின் ஏவல்படி, வித்தை காட்டும் தீயவரான மேஜிக்காரரை இந்த மண்ணுக்குள் நுழைய விடக்கூடாது என்று எதிர்ப்புக் குரல் எழுப்ப, அது, குவைத் மன்னரது அரண்மனை வரை கொண்டு செல்லப்பட்டது. மன்னருக்கும், அந்த எதிர்ப்பில், நியாயம் இருப்பது போலத் தோன்றவே, என்னை குவைத்துக்குள் நுழைய அனுமதிக்க வேண்டாம் என்று அரண்மனையிலிருந்து உத்தரவு வந்தது.

இந்த விஷயம் எனக்குத் தெரியாது. கப்பல் மூலம் நானும், என் குழுவினரும் குவைத் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தோம். என்னையும், என் மனைவியையும் சேர்த்து நாங்கள் மொத்தம் இருபத்து ஏழு பேர். குவைத் நோக்கிப் போய்க் கொண்டிருந்த எங்கள் கப்பல், அங்கிருந்து இருபது கிலோ மீட்டர் தூரம் முன்னாலேயே நிறுத்தப்பட்டது. எங்களை வழி மறித்து நிறுத்திய இன்னொரு சிறு கப்பலிலிருந்து வந்த குவைத் நாட்டு அரசு அதிகாரிகள்–






"உங்களுக்கு குவைத் மண்ணில் காலடி வைக்க மன்னர் அனுமதி மறுத்துவிட்டார். எனவே, நீங்களும், உங்கள் மேஜிக் குழுவினரும், குவைத் நாட்டுக்குள் நுழைய முடியாது. இன்னும் இரண்டு நாட்களில் இந்தக் கப்பல் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லும். அப்போது, நீங்கள் இந்தியாவுக்குத் திரும்பிச் சென்று விடுங்கள். அதுவரை இந்தக் கப்பலிலேயே நீங்கள் இருக்க வேண்டியதுதான்!" என்று என்னிடம் கூறினார்கள்.


மற்ற பயணிகளைப் பார்த்து, "நாங்கள்

வந்திருக்கும், சிறு கப்பல் மூலமாக உங்களை குவைத் அழைத்துச் செல்லப் போகிறோம்'' என்றார்கள் அதிகாரிகள். எனக்கு இதைக் கேட்டதும், பெரும் அதிர்ச்சி. அடுத்து என்ன செய்வது என்று எனக்குச் சிறிது நேரம் குழப்பம்.

மேஜிக் என்பது முழுக்க முழுக்க தந்திரம் தான்! இதில் சாத்தான் வேலை எதுவும் கிடையாது. ஆனால் இதை அந்த அதிகாரிகளுக்குப் புரிய வைப்பது எப்படி? அப்படியே அவர்கள் புரிந்து கொண்டாலும், மன்னரது தடை உத்தரவை மீறி அவர்களால் என்ன செய்து விட முடியும்? அரசரது உத்தரவை அரசரே மாற்றினால்தான் பிரச்னை தீரும் என்று எனக்குத் தோன்றியது.

வந்திருந்த அதிகாரிகளில் சீனியரான ஒருவரிடம், ''நானும் உங்களைப் போல மனிதன்தான். மேஜிக் நிகழ்ச்சிகள் நடத்தி, மக்களை மகிழ்வித்து, அதன் மூலம் சம்பாதிக்கிறேன். நான் செய்வதெல்லாம் மூளையை உபயோகித்துச் செய்கிற தந்திரங்கள்தான். இதையெல்லாம் நானே, நேரடியாய் உங்கள் மன்னரைச் சந்தித்துச் சொன்னால், அவர் புரிந்து கொள்வார். நான் சாத்தான்





வேலை எதுவும் செய்யவில்லை என்பது மட்டுமில்லை, எனக்கு அவை தெரியவும் தெரியாது. மேஜிக் என்பது இந்தியாவின் பாரம்பரியம் மிகுந்த கலைகளில் ஒன்று. நான் உங்கள் மன்னரை நேரில் சந்தித்து, சில நிமிடங்கள் பேசினால் போதும், அவர் என் பக்கம் உள்ள நியாயங்களைப் புரிந்து கொண்டு விடுவார். தயவுசெய்து, உங்கள் மன்னருடன் நேரடியாக நான் பேசுவதற்கு ஏற்பாடு செய்து கொடுங்கள்!'' என்று கேட்டுக் கொண்டேன்.

எங்கள் கப்பலிலிருந்து ஒயர்லெஸ் மூலமாக அரண்மனைக்குச் செய்தி சென்றது. அரண்மனையின் முக்கியமான அதிகாரி ஒருவர் பேசினார், ''நான், சில நிமிடங்கள், மன்னரைச் சந்தித்துப் பேச எனக்கு அனுமதி பெற்றுக் கொடுங்கள்; நான் சாத்தானின் வேலை செய்வதாக உங்கள் மன்னர் கருதுகிறார். நான் உண்மையை விளக்கிய பிறகும் அப்படித் தோன்றினால், அவர் எனக்கு எந்த தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்கிறேன்!'' என்றேன்.

சில நிமிடங்களில் நான் மன்னரைச் சந்தித்துப் பேச அனுமதி கிடைத்து விட்டதாகத் தகவல் சொன்னார் அந்த அரண்மனை உயரதிகாரி.

அவசரம் அவசரமாக, என்னை மட்டும், காத்துக் கொண்டிருந்த சிறு கப்பலுக்கு அழைத்துச் சென்றார்கள். என் மனைவி என்னைக் கண்கலங்கியபடி அனுப்பி வைத்தாள். இரண்டு மணி நேரப் பயணம். குவைத் போய்ச் சேர்ந்தோம். சிறிது நேரத்தில் அதிகாரிகளுடன் நான் குவைத் மன்னரது அரண்மனையில் இருந்தேன்.

குவைத் மன்னர் கொடுத்த ஷாக்!

நம் ஊர் சினிமாக்களில் வரும் ராஜதர்பார் செட் போல இருந்தது குவைத் மன்னரது அரண்மனை. ஆனால் எல்லாம் ஒரிஜினல்; எல்லாம் நனவு. நான் ஒருவன்தான் அங்கே அந்நியன் என்கிற உணர்வுதான் எனக்குள் இருந்தது. மன்னர் முதல் காவலாட்கள் வரை அனைவரது கவனமும் என் மீதுதான் பதிந்திருந்தது.

''என்னிடம் என்ன பேச வேண்டும் உங்களுக்கு?'' என்றார் மன்னர்.

''நான் ஒரு மேஜிக் கலைஞன் என்று

ஆரம்பித்து, மேஜிக் என்பது தந்திரம்தான். சாத்தான் வேலை எதுவுமில்லை. சாத்தான் வேலை செய்தால், நான் பிறந்த இந்திய நாட்டு அரசாங்கம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்குமா? ஜப்பானிய மக்கள் என்னை விரும்பி வரவழைத்து, என் மேஜிக்கை ரசிக்கிறார்களே! சாத்தான் வேலைகளை, ஜப்பானிய அரசு அனுமதிக்குமா? என்று சுருக்கமாக, ஆனால் அழுத்தமாக என் தரப்புவாதங்களை மன்னர் முன் வைத்தேன்.

"இதோ, உங்கள் கண்முன்னே ஒரு மேஜிக்கை செய்து காட்டுகிறேன் பாருங்கள்" என்று சொல்லிவிட்டு, இரண்டு கைகளையும் அகல விரித்து, அவர் முன்னே காட்டினேன். கைகளில் ஒன்றுமில்லை. அடுத்து, பூஜை செய்கிறபோது, கடவுளுக்கு பூக்களை அர்ச்சிப்போமே. அதுபோல, கைகளை அசைத்தேன். என்ன ஆச்சரியம்! கரன்ஸி நோட்டுகள் என் கைகளிலிருந்து கீழே விழ ஆரம்பித்தன.

சற்றே நிறுத்திவிட்டு, ஓர் அதிகாரியை அழைத்து, "நான் வரவழைத்துக் கொண்டிருப்பது உங்கள் ஊர் 'தினார்'தானே? என்றேன். அவர் கீழே இறைந்து கிடந்த நோட்டுகளிலிருந்து சிலவற்றை எடுத்து, நன்றாக உற்றுப் பார்த்தார். "இவை, நம் அரசாங்கத்தின் முத்திரை பதிக்கப்பட்ட, தினார் கரன்ஸி நோட்டுகள்தான்!" என்று மன்னரிடம் தெரிவித்தார்.

மன்னருக்கும் இதைக் கேட்டு ஆச்சரியம். நான் இன்னும் சிறிது நேரம் தினார் நோட்டுகளை வரவழைத்து விட்டு, நிறுத்தினேன். அடுத்து, "இதில் மந்திரம் எதுவுமில்லை; வெறும் தந்திரம்தான். ஆனால், இதில் உள்ள தந்திரம் என்ன என்பதை நான் இந்தச் சபையில் பகிரங்கப்படுத்த விரும்பவில்லை. ரகசியம், வெளியில் தெரிந்து விட்டால், அரங்கத்தில் இந்த நிகழ்ச்சியை நான் செய்து காட்டுகிறபோது, பார்வையாளர்களுக்கு பிரமிப்பு ஏற்படாது. ஆனால், மன்னர் அவர்களுக்கு மட்டும் நான் இதில் உள்ள ரகசியத்தை மறைக்க விரும்பவில்லை. தனி அறையொன்றில், அவருக்கு நான் ரகசியத்தை விளக்க விரும்புகிறேன்" என்றேன்.

உடனே மன்னர் ஓர் அறைக்குச் சென்று, என்னை அழைத்தார். உள்ளே சென்ற நான், கப்பலில் குவைத் வருகிறபோதே, சக பயணிகளிடம், டாலர் நோட்டுகளைக் கொடுத்து விட்டு, அதற்கு ஈடான குவைத் தேசத்து தினார் நோட்டுகளை வாங்கி வைத்துக் கொண்டதையும், அந்த நோட்டுகளை எப்படி என் கைக்குள்ளே யாருக்கும் தெரியாமல் மறைத்து வைத்துக் கொள்வது, அப்புறம், விரல்களை அசைத்து, அசைத்து நோட்டுகளை கீழே எப்படி விழச் செய்வது என்றெல்லாம் விவரமாக விளக்கிச் சொன்னேன்.


"அட! இதுதானா ரகசியம்!" என்று பலமாகச் சிரித்து விட்டார் மன்னர். மன்னரும், நானும் அறையை விட்டு வெளியில் வந்தோம். "மரியாதைக்குரிய பாஷா அவர்களே! நான் சாத்தானின் வேலைக்காரன் இல்லை; மக்களை மகிழ்விக்கிற மேஜிக் கலைஞன் என்பது இப்போது உங்களுக்கு நன்றாகப் புரிந்து விட்டிருக்கும்! இனி, என் மேஜிக் நிகழ்ச்சியினை குவைத் நகரில் நடத்துவதற்குத் தடை ஏதுமில்லையல்லவா?" என்றேன்.

சிரித்தபடி, தலையாட்டி அனுமதியளித்தார் மன்னர்.

அரசாங்கத்துக்குச் சொந்தமான பெரிய அரங்கம் ஒன்றில்தான் என் நிகழ்ச்சி. முதலில் இருபத்தியொரு நாட்களுக்குத்தான் குவைத்தில் என் நிகழ்ச்சி ஏற்பாடாகியிருந்தது. ஆனால், மக்களிடம் கிடைத்த அமோக வரவேற்பு காரணமாக, நான்கரை மாதங்களுக்கு என் ஷோ அங்கே நடந்தது.

குவைத்துக்குள் நுழையும்போது, மன்னர் ஒருவித ஷாக் கொடுத்தார் என்றால், நான்கரை மாதம் கழித்து, ஊருக்குப் புறப்படுகிறபோது, ஓர் இன்ப அதிர்ச்சி அளித்தார். அது என்ன?

(தொடரும்)



"தலைவரே! போன தேர்தல்ல 'ஆப்பிள்' சின்னத்துல நின்னப்ப ஒவ்வொரு வீட்டுக்கும் ஆப்பிள் தராதீங்கன்னு சொன்னேன், கேட்டீங்களா?"

"ஏன், இப்ப என்னாச்சு?"

"இந்த தேர்தல்ல நீங்க 'ஸ்கூட்டர்' சின்னத்துல நிற்கறதால ஒவ்வொரு வீட்டுக்கும் ஸ்கூட்டர் கொடுப்பீங்கன்னு ஜனங்க நினைச்சுக்கிட்டு இருக்காங்க!"

— மலர் சூர்யா



காப்ஸ்யூல் வடிவில் நடந்த கல்கி விழா!

திருவனந்தபுரம் வானொலி நிலையம்; ஆகஸ்ட் மாதம் 13-ஆம் தேதி திருஓணத் தமிழ் விழாவையும் கல்கி நூற்றாண்டு விழாவையும் ஒருங்கிணைத்துக் கொண்டாடியது.

அழைப்பிதழ் – மலையாளத்திலும் தமிழிலும் அழகாக அச்சடிக்கப்பட்டிருந்ததைப் பார்க்கப் பரவசமாக இருந்தது.

கல்கியின் புகழ், மொழியைக் கடந்த ஒன்று என்பதற்கு இது ஓர் உதாரணம்.

வரவேற்புரை, தலைமையுரை, கருத்தரங்கம், சிறப்புப் பட்டிமன்றம், இதர கலை நிகழ்ச்சிகள் என்று இரண்டு விழாக்களையும் அமர்க்களமாகக் கொண்டாடி விட்டனர் அகில இந்திய வானொலி நிலையத்தினர்.

அதன் இயக்குனர் ஜி. ஜெயலால், கொஞ்சும் மலையாளம் கலந்த தமிழில் அனைவரையும் வரவேற்றுப் பேச, தலைமை உரை ஆற்றிய பிரபல எழுத்தாளர் நீல. பத்மநாபன் கல்கியின் தியாக பூமியில் இருந்து ஆரம்பித்து, கள்வனின் காதலி, சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு, பொன்னியின் செல்வன், அமரதாரா என்று கல்கியின் பல்வேறு கதாபாத்திரங்களின் சிறப்புக்களையும் எடுத்துக் கூறி நேரம் போவது தெரியாமல் பேசினார். நேரம் மட்டும் இருந்திருந்தால், அவர் இன்னும் இன்னும் பேசிக் கொண்டேயிருந்திருப்பார்.

கருத்தரங்கத்தில் –

சேர நாடு அடங்கிய அன்றைய தமிழகத்தின் பல பகுதிகளில் குறிப்பாக மதுரை மாநகரில் திருவோணம் கொண்டாடப்பட்டது என்பதை டாக்டர் மீனாட்சிநாதபிள்ளை சான்றுகளுடன் எடுத்து விளக்கினார்.

டாக்டர். தி. கோவிந்தனும், பேரா. என். ஞானப்பழமும் கல்கியின் இதழியல் பணி பற்றியும், கல்கியின் இலக்கியப் பணி பற்றியும் பேசினார்கள். பேசுபவர்களுக்கும் இன்னும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற ஆர்வம், கேட்பவர்களுக்கும் இன்னும் கேட்க வேண்டும் என்ற ஆர்வம்!

முழுநாள் நடத்த வேண்டிய ஒரு நிகழ்ச்சியை ஒரு 'காப்ஸ்யூல்' வடிவத்தில் மூன்று மணி நேரத்தில் நடத்த வேண்டியிருந்ததால் அனைவரும் குறிப்பிட்ட நேரத்திற்குள்ளாகவே உரையை முடித்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

அடுத்து, சிறப்புப் பட்டிமன்றம், கலை நிகழ்ச்சிகள் என்று திருஓணம் பண்டிகையும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது!

— கமலநாதன்

KALKI SHOPPING PAGE



தேர்தல் '99

பொள்ளாச்சி :

"எனக்கு வேண்டாம். எனக்கு வேண்டாம்...!" என தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் பொள்ளாச்சி தொகுதியை பந்தாடிக் கொண்டு முரண்டு பிடிக்க, அதுவே வசதியாகப் போய் விட்டது எதிரணியினருக்கு.

ஏற்கெனவே 96,000 வோட்டு வித்தியாசத்தில் அ.தி.மு.க. வென்ற தொகுதி இது. 1996 தேர்தல் தவிர்த்து மீதிக் காலகட்டங்களிலெல்லாம் (எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா காலத்தில்) அ.தி.மு.க.வின் கோட்டையாக இருந்து வந்த தொகுதி. சென்ற தேர்தலில் வென்ற அ.தி.மு.க. தியாகராஜனின் பிரசாரத்தைக் கவனித்தால் படு சுவாரஸ்யமாயிருக்கிறது.




• தியாகராஜன்

"என்னை எம்.பி.யாகத் தேர்ந்தெடுத்தால் என்னென்ன வசதி செய்வேன் என்பதை அறிக்கையாக நேற்றைய தினத்தந்தியில் கொடுத்திருக்கிறேன். நாளைக்கும் கொடுப்பேன். அதைப் படித்து இரட்டை இலைக்கே வோட்டுப் போடுங்கள் பெரியோர்களே! பாருங்க. அந்த மண்டபம் நான் வந்து கட்டினது. இந்த போர்வெல் நான் போட்டுக் கொடுத்தது. பள்ளிக்கூடம், சத்துணவுக்கூடம், வாய்க்கால் வெட்ட, குடிநீர்த் தொட்டி அமைக்கன்னு மட்டும் நாலு கோடி ரூபாய்க்கும் மேல என் தொகுதி வளர்ச்சி நிதி ஒதுக்கீட்ல செஞ்சு தந்திருக்கேன். இன்னும் செஞ்சு தருவேன். அஞ்சு வருஷம் ஒரு எம்.பி. செய்ய வேண்டிய வேலைய ஒரு வருஷத்துல செஞ்சு தந்திருக்கிறேன். அதனால எனக்கு இரட்டை இலைச் சின்னத்துல வோட்டுப் போடுங்கன்னு சொல்லி உங்க பாதம் தொட்டு வணங்குகிறேன்!"

போகிற இடமெல்லாம் இப்படியேதான். நாம் நெருங்கியதும், சாக்கடை முதற்கொண்டு, சாலை வசதி வரை தமது நிதி ஒதுக்கீடு பற்றி ரெண்டு மணி நேரத்திற்கு மேல் பட்டியலிட ஆரம்பித்து விட்டார். (இதெல்லாம் 'அம்மா' பார்வைக்குப் போகணுமாம்!)

அப்பாவி போல் பேசும் மனிதர் எம்.ஏ. வரலாறு படித்தவராம். சொந்த ஊர் அவினாசி. வசிப்பது கோவை சிங்கநல்லூர். தொகுதிப் பக்கமே பெரும்பாலும் வந்ததில்லை என கிராமத்தவர் தரப்பில் பேச்சு. வால்பாறை, பொள்ளாச்சி, உடுமலை, பொங்கலூர், கிணத்துக்கடவு, தாராபுரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய இந்த மக்களவையில் சொல்லிக் கொள்கிற மாதிரி பொள்ளாச்சி, உடுமலை, தாராபுரம் மட்டுமே நகர்ப் பகுதியில். மீதியெல்லாம் அடிப்படை வசதிகளுக்குக் கூட அல்லாடும் கிராமங்கள். இரட்டை இலை தவிர்த்து வேறொன்றை நெஞ்சிலேற்றாத அப்பிராணி கிராமவாசிகளே பெரும்பாலும் இத்தொகுதியின் வெற்றியை நிர்ணயிக்கிறார்கள்.



• டாக்டர் கிருஷ்ணன்

அ.தி.மு.க.வில் உள்ளூரில் இரண்டு கோஷ்டியாம். பொள்ளாச்சி ஜெயராமன் கோஷ்டி மிக வலுவாம். மற்றது தியாகராஜன் கோஷ்டி. தமக்கு ஒதுக்கப்பட்ட காஸ் கனெக்ஷன் தவிர்த்து வாழப்பாடியுடன் நெருக்கமாய் உறவு பூண்டு ஆயிரக்கணக்கான கனெக்ஷன்களை தொகுதியெங்கும் வாரி 'வழங்கி'யிருக்கிறாராம் தியாகராஜன்.

வாழப்பாடியுடனான உறவு நிமித்தம், தியாகராஜனுக்கு சீட்டே கிடைக்காது என்று எண்ணியிருந்த அ.தி.மு.க.வின் மறு கோஷ்டி இவருக்கே தொகுதி அர்ப்பணிக்கப்பட்டதும் அதிர்ந்து போனது என்கிறார்கள். அதெல்லாம் தமக்கு ஒன்றுமே தெரியவராதது போல் பேசுகிறார் தியாகராஜன்.

"காஸ் கனெக்ஷன் கூடுதலாய் வாங்கி தொகுதிக்குச் செய்தது உண்மைதான். அது எங்கள் அம்மாவுடன் வாழப்பாடி விசுவாசமாய் இருந்த காலத்தில். வீணாக அதைக்

பம்பரத்தின் வேகம் கூடுமா?

கிளறாதீர்கள்'' என்றவர், ''என் வெற்றியை எதிரணியினரே நிச்சயித்து விட்டனர். அவர்கள் ஒருவருக்கொருவர் இந்தத் தொகுதியை வேண்டாம் என அடித்துப் பிடித்துக் கொண்டதிலேயே உங்களுக்குத் தெரியவில்லையா?'' என்று தம் வெற்றி குறித்து உணர்வு பொங்கப் பேசுகிறார்!

இவர் இப்படிச் சவால் விட்டுக் கொண்டிருக்க, ம.தி.மு.க.விற்குத்தான் தொகுதி என முடிவானதும் சுறுசுறுப்பாக செயல் வீரர்கள் கூட்டம், அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி தலைமையில். வேட்பாளர், டாக்டர் சி. கிருஷ்ணன். அறிஞர் அண்ணா நோய்வாய்ப்பட்ட காலத்தில் சென்னை மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சையளித்தவராம். நோய் குணமாகி அண்ணா இவருக்கு நன்றி சொல்லிக் கைப்பட ஒரு கடிதம் எழுத, இவர் அண்ணாவின்பால் ஈர்க்கப்பட்டு அரசியலுக்கு வரத் துடித்துப் பதில் கடிதம் எழுதினாராம். அதற்கு அண்ணாவிடமிருந்து, ''உங்களுடைய சேவை நாட்டுக்குத் தேவை. அதனால் உடலில் வலு உள்ளவரை அதனையே செய்யுங்கள்'' என்று கடிதம் வந்ததாம்.

இப்போது அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்று டிஸ்பென்ஸரி வைத்த பின்பு வைகோவுடன் நெருக்கமாக அரசியல் களங்களில் பங்கேற்று வருகிறாராம். அண்ணா எழுதிய கடிதத்தை நகலெடுத்து வாக்காளர்களுக்கும் கழகக் கண்மணிகளுக்கும் கொடுக்க ஆலோசனை செய்து வருகிறது கட்சி வட்டாரம்.


நகரங்கள் அதிகம் இல்லாதது, கிராமங்களில் 'பம்பரம்' சின்னம் பாப்புலராகாதது தொகுதிப் பங்கீட்டில் மனஸ்தாபம்... தோல்விக்கு அறிகுறியோ என்றால், பலமாக மறுக்கின்றனர் கட்சிப் பொறுப்பாளர்கள்.

''ஏற்கெனவே நாங்கள் தி.மு.க.வில் நின்று வென்ற தொகுதிகளைக் கேட்டோம். கொடுத்தார்கள். நின்று தோற்ற தொகுதியிலும் கூடுதல் வெற்றி வாய்ப்பு இருப்பதனால் அதையும் கேட்டோம். கூடுதலாய் சில 'சீட்கள்' கேட்டோம். இதுதான் விவகாரம். அதுவும் சரிப்படுத்தப்பட்டு விட்டது. எந்த இடத்திலும் இந்தத் தொகுதி வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. அனைவரும் ஒற்றுமையோடு பாடுபடுகிறோம். தொகுதியிலுள்ள ஆறு சட்டமன்றத் தொகுதிகளில் ஐந்து இப்போதும் தி.மு.க.வின் கோட்டை. வென்றெடுக்காமல் விட்டு விடுவோமா?'' என்கிறார்கள்.

மூன்றாம் அணியில் ஜனதளத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது இத்தொகுதி என்பது பலருக்கும் தெரியாத 'ரகசியமாகவே' இருக்கிறது. இரட்டை இலைச் சின்னம் தொகுதி மக்களிடம் பிரகாசமாக இருக்கிறது. ம.தி.மு.க.வுக்காக தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ஐவரும் முனைப்புடன் நின்று செயல்பட்டால்தான் பம்பரத்தின் வேகம் கூடும்!

கட்டுரை, படங்கள் : **கேயெஸ்வி**

• தியாகராஜனின் சுவாரஸ்யமான பிரசாரம்





• சொக்கலிங்கம்

தேர்ந்தெடுத்தது காதலை.

"ஏக்கம்-இதுதான் காதலின் அடிப்படை" என்று ஆனந்த் கூற, "ஒருவருக்கொருவர் உண்மையான உறவு நிலவினால்தான் அது காதல்" என்று வாஞ்சிநாதன் வரையறுத்தார். "காதலுக்குக் கண்ணில்லை என்பதுதான் பல தடவை நிரூபணம் ஆகியிருக்கே" என்றார் சொக்கலிங்கம்.

பார்வைக்கு ஒரு பொருத்தமும் தென்படாத இருவர் எப்படி காதல் ஜோடிகள் ஆகிறார்கள் என்பது குறித்து வியப்புடன் பேசிக்கொண்டார்கள் இந்த இளைஞர்கள். அதுவும் படு புத்திசாலித்தனமான ஒரு நபர், முட்டாளான ஒரு நபரைத் தன் காதல் ஜோடியாகத் தேர்ந்தெடுப்பது விந்தையான - அதே சமயம் வெகு சகஜமான நிகழ்வாக இருக்கிறது என்றனர்.

ஒருவனுக்கு ஒருத்தி என்பது இல்லறத்துக்கு மட்டுமல்ல; காதலுக்கும் தாரக மந்திரம் என்பதிலும் மாறுபாடான கருத்து இல்லை இவர்களிடம்.

ஒரு பெண் தன்னைப் பார்க்கும்போதெல்லாம் புன்னகை செய்தால் அதை உடனே காதல் என்று நினைத்து உருகும் அபத்தப் போக்கை சில மாணவர்களிடம் கண்டு, தானே அவர்களுக்குத் தருந்த முறை

• வாஞ்சிநாதன்

"இது போன்ற தலைப்புகளிலிருந்தும் நீங்கள் கேள்விக் கணைகளைத் தொடுக்கலாம்" என்று ஒரு சிறு பட்டியலை நாம் கொடுத்த போது ஒருமுகமாக, "இது... இதத்தான் நான் எதிர்பார்த்தேன்" என்பது போன்ற பனிச் சிடும் முகங்களுடன் லயோலா கல்லூரி மாணவர்கள் வாஞ்சிநாதன், ஆனந்த், சொக்கலிங்கம், கமல்தாசன் ஆகியோர்

காதலர்களுக்கு அறிவுரை!



• கமல் தாசன்



யில் எடுத்துரைத்ததாகக் கூறினார் வாஞ்சிநாதன்.

''கல்லூரிப் பருவத்தில் காதலிப்பது தப்பில்லை; ஆனால் அது திருமணத்தில் முடியும் என்ற எண்ணத்தோடுதான் இருக்க வேண்டும். அதே சமயம் இருவருமே வாழ்க்கையில் சொந்தக்காலில் நிற்கும் கௌரவமான நிலையில்தான் திருமணம் என்பதிலும் உறுதி வேண்டும்'' - இதுவும் கோரஸாக வந்த கருத்துதான்.

அருகே உள்ள கூப்பனில் கேள்விகளும் நீங்கள் 'டிக்' செய்ய வேண்டிய சரியான விடைக்கான சாய்ஸ்களும். அத்தனை கேள்விகளுக்கும் சரியான விடையை 'டிக்' செய்பவருக்கு ரூ. 200 பரிசு. பலர் செய்து விட்டால் குலுக்கல். ஜெராக்ஸ் கூப்பன் செல்லாது என்பதும் ஆசிரியர் தீர்ப்பே இறுதி என்பதும் தெரிந்த விஷயம்தானே?

கடைசி தேதி: 13.9.99

— ஜி.எஸ்.எஸ்.

படங்கள்: ஸ்ரீஹரி

குவிஸ் கூப்பன் – 5

1. மன்னன் மகளைக் காதலித்ததற்காக மரணத்தைச் சந்திக்க நேர்ந்த கவிஞரின் மகன் யார்?

☐ மஜ்னு ☐ ரோமியோ ☐ அம்பிகாபதி

2. ஷாருக்கானின் காதல் மனைவியின் பெயர் எது?

☐ கௌரி ☐ கஷ்மா ☐ ஷில்பா

3. கிரேக்கக் காதல் கடவுளின் பெயர் என்ன?

☐ மன்மதன் ☐ வீனஸ் ☐ ஈராஸ்

4. தேசிய விருது பெற்ற திரைப்படம் கீழ்க்கண்டவற்றுள் எது?

☐ காதலுக்கு மரியாதை

☐ காதல் கோட்டை ☐ காதல் பரிசு

5. எந்த அரசியின் மீது கொண்ட மையலால் அலாவுதீன் கில்ஜி போர் நிகழ்த்தினான்?

☐ பத்மினி ☐ சென்னம்மா

☐ லக்ஷ்மிபாய்

6. டயானாவுடன் இறந்த அவரது காதலர் யார்?

☐ மைக்கேல் ☐ டோடி ☐ ரோஜர்

7. 'லவ் ஸ்டோரி' என்ற பிரபல நாவலை எழுதியவர் யார்?

☐ அகதா கிறிஸ்டி ☐ எரிக் சேகல்

☐ ஹெரால்ட் ராபின்ஸ்

8. காதலர் தினம் (வாலன்டைன் தினம்) என்று கொண்டாடப்படுகிறது?

☐ ஏப்ரல் 1 ☐ மார்ச் 14 ☐ பிப்ரவரி 14

பெயர்: ....

முகவரி: ....

....

....

முகமூடிகளைக்கிழிக்க புறப்பட்ட

மக்கள் தலைவரின் முற்போக்கு கூட்டணி

- ★ தங்களது ஊழலை மறைப்பதற்காக "மதவெறி எதிர்ப்பு" என்ற முகமூடியுடன் ஒரு அணி.
- ★ தங்களது "மதவாதத்தை" மறைப்பதற்காக "ஊழல் எதிர்ப்பு" என்ற முகமூடியுடன் மற்றொரு அணி.
- ★ மதவெறி என்பது கரும்புத் தோட்டத்தில் புகுந்த காட்டு யானை!
- ★ ஊழல் என்பது உள்ளிருந்தே அழிக்கும் புற்று நோய்!
- ★ இதில் எது நல்லது என்ற விவாதமே இந்த நாட்டின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல.
- ★ இந்த இரண்டு தீமைகளும் ஆணிவேரோடு அறுத்தெறியப்பட வேண்டும். தமிழ் மாநில காங்கிரஸ் மட்டுமே அப்படிப்பட்டதொரு தெளிவான அரசியல் நிலையினை எடுத்துள்ளது.


அமைச்சர் பதவிகளுக்காக லட்சியங்களையும்
அதிகார ஆசைக்காக கொள்கைகளையும்
விட்டுத் தராத ஒரே இயக்கம் தமிழ் மாநில காங்கிரஸ்



நெறிசார்ந்த அரசியல் தழைக்க
ஆதரிப்பீர்
தமிழ் மாநில காங்கிரஸின்
தலைமையில் அமைந்துள்ள
முற்போக்கு மக்கள் கூட்டணியை



வண்டி



டிராக்டர்



வெற்றிச் சின்னம்

சைக்கிள்

வெளியீடு: தமிழ் மாநில காங்கிரஸ்



உங்கள் விமர்சனத்தால் முன்னேறினேன்!

✉ ஸ்திரமான ஒரு நல்லாட்சி அமைய வேண்டியதன் முக்கியத்துவத்தை நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் தன் கடமையெனக் கொள்ள வேண்டும் என்பதை அறிவுறுத்தியது தலையங்கம்.
குட்டலாடம்பட்டி, கே. மூர்த்தி.

✉ கொள்கையை மறந்து, ஊழலை மறந்து, கடந்த கால நாட்டு நடப்புகளையும் மறந்து - அப்பாவி வாக்காளர்களின் மறதித் தன்மையில் அசையா நம்பிக்கை வைத்துத் தேர்தலில் வெற்றி பெறுவேன் எனும் நல்லக்கண்ணுவின் பேட்டி சிரிப்பை வரவழைத்தது.
பெங்களூர், சி. மகேஷ்.

✉ கல்கியின் திடீர் மாற்றங்கள் சந்தோஷம் கொடுக்கின்றன. ஜோதிகாவின் அட்டைப் படம், ஒன்றல்ல; இரண்டல்ல - ஒரேயடியாக மூன்று சினிமா விமர்சனங்கள்... க்விஸ் போட்டி... சிறந்த வாசகர் கடிதத்துக்குப் பரிசு... வாவ்! அசத்துங்கள்!
திருச்செங்கோடு, டி.ஏ.சி. பிரகாஷ்.

✉ இந்திய ஜனநாயகத்துக்கே ஒரு மாதிரியாய்த் திகழ்கிறது சிராவயல் கிராமம். இப்படியே எல்லா கிராமங்களும் அரசியல்வாதிகளின் விஷப்பிடியில் சிக்காமலிருந்தால் நல்லாத்தானிருக்கும்.
காரைக்குடி, பாலு.

✉ ஓட்டல் வேலை பார்த்து நாட்டிய மேடையில் பிரகாசிக்கும் ஜாகிர் உசேனின் விடாமுயற்சி மெய்சிலிர்க்க வைக்கிறது.
வடலூர், வெ. லட்சுமி நாராயணன்.

✉ பறவைக் காதலர்கள் பற்றி அறிந்ததும் சிலிர்த்துப் போனேன். பறவைகளைப் பிடித்து சித்திரவதை செய்யாமல் தக்க முறையில் ஆராய்ச்சி செய்யும் இந்தப் பறவை விஞ்ஞானிகளைக் கட்டாயம் பாராட்டியே ஆக வேண்டும்!
காயக்காடு, ப. ராமகிருஷ்ணன்.

✉ இளம் விஞ்ஞானிகளை உருவாக்குவதில் ஆர்வம் காட்டிய ஆசிரியர் விக்டர் மனோகரின் தன்னலமற்ற பணி வியக்கச் செய்தது. அவருக்கு 'நல்லாசிரியர்' விருது கொடுத்து அரசு கௌரவித்திருக்கிறதா?
சென்னை - 44,
எஸ். உஷா சங்கர்.

✉ அருண் சரண்யாவின் 'தவிப்பு' சிறுகதை மிக வித்தியாசம். கதை படித்து நான் அடைந்த தவிப்பு இன்னும் நீங்கவில்லை. அருமையான கதை.
விழுப்புரம், வை. வெங்கடேசன்.

✉ கல்கியைத் தலைகீழாகப் புரட்டிப் பார்த்து விட்டேன். எனது அபிமான சுமி எங்கே? சுமிக்கு மட்டும் விடுமுறை வேண்டாமே ப்ளீஸ்!
மொரட்டுப்பாளையம்,
க. நா. இராஜேஸ்வரன்.


✉ 'பூவெல்லாம் கேட்டுப்பார்' விமர்சனத்தில் 'நடனத்தில் முன்னேறி விட்டார்' என்று என்னைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதைப் படித்தபோது ரொம்ப சந்தோஷப்பட்டேன். காரணம், என் முதல் படம் 'நேருக்கு நேர்' விமர்சனத்தில் 'சூர்யா டான்ஸ் ஆடுவதை முளையிலேயே கிள்ளி விடுவது உத்தமம்' என்று நீங்கள் எழுதிய வரிகள்தான் இன்று நான் இவ்வளவு முன்னேறக் காரணமாக இருந்தது!
சென்னை - 17, ஆர். எஸ். சூர்யா.

அக்னிசர்மா பக்கம்




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

நல்ல பலன்கள் தர்ற விதமா கிரகங்கள் சாதகமாவே உலவுது. நண்பர்களும், மேலதிகாரிகளும் உங்களுக்கு ஆதரவா நடந்துப்பாங்க. எடுத்த காரியத்துல வெற்றி நிச்சயம். வாணிபத்துல ஈடுபட்டிருக்கிறவங்களுக்கும் சினிமா, சங்கீதத் துறையினருக்கும் லாபம் உறுதி. அரசாங்கத்திலேருந்து வருமான பாக்கி ஏதாவது இருந்ததுன்னா இப்ப வந்து சேரும். பொதுவா உற்சாகமான வாரமாவே இருக்கும்.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

நல்லதும் கெட்டதுமா கலந்தே பலன்கள் இருக்கும். பெரிய திட்டங்களைப் போடுவீங்க. ஆனா, உங்களுக்கு வேண்டிய உதவியும் உற்சாகமும் கிடைக்கறது கஷ்டமே. மனைவி, மக்களால் மனக்கவலை இருக்கும். ஆபீஸ்ல வேலை கழுத்தைப் பிடிக்கும். ஆனாலும் ஜெயிக்கிற வெறி உங்களைத் தூங்க விடாது! அடிச்சி பிடிச்சி காரியத்தை முடிப்பீங்க. பணப் பிரச்னை இருக்காது; அதே சமயம் செலவும் கட்டுக்கடங்காது. கவனமாவே இருங்க. டூ வீலர் பயணம் மட்டும் வேணாம்.



மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

மனசுல தன்னம்பிக்கை பொங்கற வாரம். துணிச்சலா இறங்கி, பல காரியங்களை சாதிப்பீங்க. நிர்வாகத் திறன் மேலோங்கி இருக்கும். சிலருக்கு விருந்துகள்ல கலந்துக்கற வாய்ப்பு ஏற்படும். எதிர்பாராத முக்கியஸ்தர்கள் சகவாசமும் அதனால நன்மையும் ஏற்படும். வழக்குங்க உங்களுக்குச் சாதகமாவே முடியும். விஞ்ஞானிகளுக்கும் பஸ் கண்டக்டர்கள், லாரி க்ளீனர்களுக்கும் எதிர்பாராத விதமா ப்ரமோஷனோ, பண வரவோ நிச்சயம் உண்டு.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

முன்ன பின்ன தெரியாதவங்களை நம்பி ஏமாறுவதற்கு வாய்ப்பு இருக்கு. பண விஷயத்துல படு கெட்டியா இல்லாட்டா, நிறைய இழக்க வேண்டி வரும். சாட்சிக் கையெழுத்து போடறதோ, ஜாமீன் கொடுக்கிறதோ வேணாம். வீடு, நிலம் வாங்கற யோசனை இருந்தா தள்ளிப் போடுங்க. அரசியல்வாதிகள் எச்சரிக்கையா இருக்கணும். மேடைப் பேச்சுல நாகரிகம் காக்கலைன்னா ஆபத்துல முடியற வாய்ப்பு இருக்கு. பெண்கள் வீண் வம்புகள்ல தலையிடாம இருக்கணும். குறிப்பா அக்கம் பக்கத்துல அதிகப் பேச்சு வெச்சுக்க வேணாம்.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

உங்க ஆரோக்கியம், மதிப்பு மேலோங்கி இருக்கிற வாரம். நல்லவர்கள் தொடர்பு நன்மை தரும். தெய்வீகப் பணிகளில் நாட்டம் ஏற்படும். மருத்துவர்கள், விஞ்ஞானிகளுக்குப் புகழ் கூடும். விளையாட்டுத் துறையினருக்கும் பதக்கங்கள் சேரும். பண நடமாட்டம் தாராளமாவே இருக்கும். கவனமா இன்வெஸ்ட் பண்ணி வைங்க. ரியல் எஸ்டேட் துறையினருக்கு இது ஓஹோ வாரம். நடிக நடிகையர்களுக்கு புதுப்பட ஒப்பந்தங்கள் ஆகும். சிலருக்கு பக்தி மார்க்கத்துலேயும் தீவிர நாட்டம் ஏற்படும்.




கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

குரு வக்ர நிலைல இருக்கறது உங்களைப் பொறுத்தவரைக்கும் ஆதாயம்தான். சுப காரியங்கள் நடக்கும். குறிப்பா பலருக்குத் திருமண நேரம் கூடி வரும். வீட்டுல மகிழ்ச்சிக்குக் குறைவிருக்காது.




பணப் பிரச்னை கிடையாது. போட்டி பந்தயங்கள்ல வெற்றி உறுதி. விவசாயிகளுக்கு மகசூல் அமோகமா இருக்கும். அலுவலகப் பணியாளர்களுக்குப் புரமோஷனோ ட்ரான்ஸ்பரோ இருக்கும். ஆன்மிகத் துறைல இருக்கறவங்களுக்குப் புகழும் கௌரவமும் உயரும் வாரம் இது.



துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*


நீண்டநாள் பிரார்த்தனைகளை நிறைவேத்த இது சரியான நேரம். உங்க காரியங்கள் யாவும் திட்டமிட்டபடி நடக்கும். பொருளாதாரம் வளர்ச்சியடையும். கடன் தொல்லைகள் நீங்கும். குடும்பத்துல அமைதி நிலவும். மாமியார் – மருமகள் உறவு, வெற்றிக்

கூட்டணி போலப் பிரகாசிக்கும். தொழில் ரீதில முன்னேற்றத்துக்கான பாதை பளிச்சிடும். எழுத்தாளர்களுக்கு தீபாவளி மலர் கதை கேட்டு லெட்டர் வரும். போட்டோ கிராபர்களுக்கும் வீடியோத் துறையினருக்கும் வருமானம் கூடும்.



விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

உங்க நிர்வாகத் திறன் பளிச்சிடும் வாரம் இது. பொதுவா நீங்க எதையுமே தீர யோசிச்சி செயல்படறவங்கன்றதால இந்த வாரம் வரக்கூடிய எந்தப் பிரச்னையையும் சுலபமா ஊதித் தள்ளிடுவீங்க. வழக்குகள் சாதகமா தீர்ப்பாகும். பணப் பிரச்னை இருக்காது. ஆனா சில மருத்துவச் செலவுகளுக்குத் தயாரா இருங்க. மனைவி உடல் நலத்துல அக்கறை காட்ட வேண்டியது அசியம். வெளி இடங்கள்ல சாப்பிடறதும் வெளியூர்ப் பயணமும் கண்டிப்பா வேணாம்.




தனுசு : *(மூலம், பூராடம், உத்தி ராடம் முதல் பாதம் வரை)*

பிரமாதமான நேரம். உங்க திட்டங்கள் எதுவும் சுலபமா நிறைவேறும். எதிரிகள் ஓடி ஒளிவாங்க. வெற்றிப் படில தொடர்ந்து ஏறுவதில் எந்த சங்கடமும் இருக்காது. கம்ப்யூட்டர், கணக்கு, மின்சாரம் தொடர்பான துறைல இருக்கறவங்களுக்கு நல்ல ஆதாயம் இருக்கும். பெண்களுக்கு நகை மோகம் உண்டு. தெய்வப் பணிகளில் ஈடுபாடு கூடும். விளையாட்டு வீரர்களுக்கு வெற்றி மேல் வெற்றி குவியும்.




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

உங்க அன்றாடப் பணிகள்ல எந்தப் பிரச்னையும் வராது. ஆனா புது முயற்சிகள்ல இறங்கறதுன்னா, நாலு பேர்கிட்ட யோசனை கேட்டுச் செய்யுங்க. வியாபாரிகளுக்கு லாபம் குறைவாத்தான் இருக்கும். ஆனா, சப்-கான்ட்ராக்ட் எடுக்கறவங்களுக்கு வருமானம் கூடும். அரசு உத்தியோகஸ்தர்களுக்குப் பழைய பாக்கிகள் வந்து சேரும். நண்பர்கள் உதவிகரமா இருப்பாங்க. வீட்டுல சிறு மனஸ்தாபம் ஏதாவது உண்டாகி சுமுகமா தீரும்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

வீட்டுலயும் சரி, வெளியிலேயும் சரி, நீங்க இருக்கற இடத்துல உங்க குரல்தான் மேலோங்கி இருக்கும். நியாயமான உங்க கோரிக்கைகள் சில இந்த வாரம் நிறைவேறும். கலைத் துறையினருக்குப் புதிய ஒப்பந்தங்கள் கதவைத் தட்டும். எழுத்தாளர்களும் விஞ்ஞானிகளும் புகழடைவாங்க. எதிர்பாராத வெளிநாட்டுத் தொடர்பு ஒன்று உங்களுக்கு ஆதாயம் தரும். வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவீங்க. உடல் நலத்துல கவனமா இருங்க. சிலருக்கு தலைவலி, கால் வலின்னு கொஞ்சம் படுத்தும்.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

திட்டங்கள் சுலபமா ஒர்க் அவுட் ஆகும். பண விஷயம் திருப்தியாகவே இருக்கும். பேச்சு சாதுர்யத்தால யாரையும் சுலபமா வசப்படுத்திடுவீங்க. குடும்பத்துல ஏதோ நல்ல காரியம் நடக்கப் போகுது. நீண்டநாள் பிரார்த்தனைகள் நிறைவேறும். பெண்களுக்குக் காதல் கை கூடும். கணவன் மனைவி உறவு திருப்தியா இருக்கும். வழக்குகள் விஷயத்துல சாதகமான தீர்ப்பையே எதிர்பார்க்கலாம்.

நடக்கும்!



ரிஷப ராசிக்காரரான ராம்கி, அடிச்சுப் பிடிச்ச காரியத்தைச் சாதிச்சிடு வாராம்!

32

குறையொன்றுமில்லை

பகவான் விஷ்ணு உலகில் எல்லா இடங்களிலும் எப்படி வியாபித்திருக்கிறானோ அப்படியே அவன் பெருமையும் அளவிட முடியாமல் வியாபித்திருக்கிறது.

வியாப்தி என்ற சொல்லுக்கே பரவியிருத்தல் என்று பொருள்.

தர்க்க சாஸ்திர ரீதியாக இந்தப் பதமானது அடிக்கடி வரும்.

அவியாப்தி, அதிவியாப்தி, இத்யாதி தோஷங்கள் இல்லாமல் உயர்ந்த விஷயமாயிருத்தல் வேண்டும். அசம்பவம் என்கிற ஷோஷமில்லாமல் இருக்க வேண்டும்... ஒரு விஷயத்துக்கு லட்சணம் என்று நாம் சொன்னோமானால் இந்த மூன்று தோஷங்களும் இல்லாதிருக்க வேண்டும் என்று பார்த்துச் சொல்வதுண்டு.

வியாப்தி என்றால் பரவுதல். அவியாப்தி என்றால் பரவுதல் இல்லாமை என்று அர்த்தம்.

பசுவெல்லாம் வெண்மையாக இருக்கும் என்று அடியேன் இன்றைக்கு உபன்யாசத்திலே சொன்னேன் என்று வைத்துக் கொள்ளுங்கள் – கேட்டு விட்டுப் போகும் மகான்கள் தெருவைத் திரும்பியவுடனே எதிரிலே கறுப்பாக ஒரு பசு வருகிறது! இன்னும் கொஞ்சம் தூரம் போனால் செந்நிறமாய் ஒரு பசு வருகிறது. கறுப்பும் வெளுப்பும் கலந்த ஒரு பசு வருகிறது. வெண்நிறமாய் இருக்கும் என்று அடியேன் சொன்னது அடிபட்டுப் போகிறது. வெண்மையாய் இருத்தல் என்பது எல்லா பசுக்களிடத்திலும் இல்லையே! பரவியில்லையே என்பதனாலே அவியாப்தி என்ற தோஷமானது ஏற்பட்டு விட்டது.

அதிவியாப்தி என்று ஒரு தோஷம் – அது என்னவென்றால் – கொம்புடைமை பசுவுக்கு லட்சணம் என்று அடியேன் சொல்கிறேன். அப்படி வெளியே போனால் எருமை மாடு இரண்டு வருகிறது. அதற்கும் கொம்பு இருக்கிறதே! பசுவைக் காட்டிலும் வேறான ஜாதியான அதற்கும் கொம்புகள் இருப்பதாலேயே கொம்புடைமை பசுக்களுக்கு லட்சணம் என்று சொன்னது அடிபட்டுப் போகிறது. அதிவியாப்தி என்ற தோஷம் ஏற்பட்டுப் போகிறது.

அசம்பவம் என்றொரு தோஷம் – அசம்பவம் என்றால், ஆகாசத் தாமரை என்று சொல்கிறோம்... அது உண்டா? ஸ்வர்ண புஷ்பத்துக்கு சுவாஸனை என்று சொல்கிறோம் – அது உண்டோ? குதிரைக் கொம்பு என்று சொல்கிறோம் – அது உண்டோ? மலடியின் பிள்ளை சந்தனத்தைப் பூசிக் கொண்டு வந்தான் என்று சொல்கிறோம் – அது உண்டோ? இப்படியெல்லாம் சொன்னால் அசம்பவம் என்று பெயர். இல்லாததைச் சொல்லுதல் என்பது அசம்பவம்.

இப்படி அசம்பவம், அதிவியாப்தி அவியாப்தி என்ற தோஷங்கள் இல்லாமல் இதற்கெல்லாம் அப்பாற்பட்டு எது இருக்கிறதோ அதுதான் விஷ்ணு என்கிற சப்தத்தினால் அழைக்கப்படுகிறது. அதுவே பரபிரும்மம் என்று அர்த்தம்.

பிரும்ம சூத்ரத்தில் முதல் சூத்ரத்திலேயே, 'பரபிரும்மத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் நமக்கு ஏற்பட்டே தீரும்' என்று சொல்லியிருக்கிறது.

அந்த எம் பெருமானை நன்கு ஆராய்ந்து நாம் அனுபவிக்க வேண்டும். தினவடங்க அவன் பற்றிய விவரங்களைக் கேட்க வேண்டும். இவ்வாறு அவனை நாம் பார்த்துக் கொண்டே போவோமானால், அவன் பெருமை தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொண்டேயிருக்கும். ஆகையினாலே, எங்கும் பரமாத்மா பரவியிருக்கிறான் என்றால், அவனை மாதிரி பரவுதல் வேறு ஒரு விஷயத்துக்கு உண்டோ?

ஆகையினால் எந்த தோஷமும் பகவத் விஷயத்தில் நாம் சொல்ல முடியாது.

ஒருத்தர் கேட்டார், எல்லா பதார்த்தங்களிலேயும் பரமாத்மா பரவியிருக்கார் என்றால் சாமான்யமான இடத்திலேயும் இருக்கிறான். உத்தமமான இடத்திலேயும்

இருக்கிறான். கோபுர சிகரத்திலேயும் இருக்கிறான்.

இப்படி எங்கும் அவனிருந்தால் கோபுர சிகரத்துக்கு உண்டான பெருமை அவனிடத்தில் நேர்கிறதா...?

சாமான்யமான இடத்திலே இருக்கக் கூடிய சிறுமை அவனிடத்திலே ஒட்டிக் கொள்கிறதா என்றால், அவன் எங்கேயிருந்தாலும் அந்தந்த இடத்திலே உள்ள உயர்த்தி – தாழ்த்தி அவனிடத்திலே ஒட்டிக் கொள்ளாமல் பகவான் இருக்கிறான். அதுதான் அவனிடத்திலே இருக்கும்படியான அகடித



கடனா சாமர்த்தியம். அவனிடத்தில் இருக்கும்படியான உயர்ந்ததான தன்மை. எதிலும் ஒட்டிக் கொள்ளாமல் தனியே நிற்கிறான் அவன்.

இதைத்தான் அத்வைதத்தில் தடஸ்த லக்ஷணம் என்று சொல்வார்கள்; ஒருத்தருக்கு நதியில் ஸ்நானம் பண்ண வேண்டும் என்று ஆசை. நதி எங்கேயிருக்கிறது என்று தெரியவில்லை. இன்னொருத்தரிடம் போய்க் கேட்டார்.

''அதோ அங்கே இருக்கு'' என்று சுட்டிக் காட்டினார் வழி சொன்னவர்.

"அப்படிக் காண்பிச்சா தெரியுமா? கொஞ்சம் விவரமாச் சொல்லுங்களேன்..."

''அதோ தெரியறதே இரண்டு பனை மரம் அந்தப் பனை மரம் தான் நதி!''

பனை மரத்தைப் பார்த்துக் கொண்டே போனால் – நதிக் கரைக்குக் கொண்டு போய் விட்டுவிட்டது!

நதிக் கரையிலே பனை மரம் இருப்பதனாலே பனை மரத்தைக் காட்டி நதிக் கரையைத் தெரிந்து கொள்கிறோம். ஆனால் பனைமரத்துக்கும் நதிக்கும் சம்பந்தம் கிடையாது!

வயதாகிறபோது கண்ணிலே ரோகம் வந்துவிடுகிறது நமக்கு.

குழந்தைப் பருவத்திலே சந்திரனை நாம் பார்க்கிறோம். 'நிலா நிலா வா வா!' என்று

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

அருள்வாக்கு

உதவி பெற்றதற்கு நன்றி செலுத்துவது ஒரு சிறந்த கடமை. ஒரு சிறு புல்லைக் கூட சிருஷ்டிக்கத் திறனற்ற மனிதனுக்கு இத்தனை உணவும், உடையும், மற்ற உபகரணங்களும் வழங்கும் ஆண்டவனுக்கு நன்றி காட்டுவது நமது கடமை. இவ்வாறு நன்றி கூறும் அடையாளமாகவே நாம் உண்பதை அவனுக்கு முன் காட்டி நிவேதனம் செய்ய வேண்டும். அவனுக்குக் காட்டிவிட்டுப் பிறகு நாம்தான் உண்ணப் போகிறோம். நாம் பலவிதமான ஆடை ஆபரணங்கள் அணிவதற்கு அருள் செய்யும் ஆண்டவனுக்குத் திரு ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். எல்லாருமே இவ்விதம் வீட்டில் பூஜை செய்து திரவியங்களை ஈசுவரார்ப்பணம் செய்ய இயலாது. எனவே சமுதாயம் முழுதும் சேர்ந்து இப்படி சமர்ப்பணம் பண்ணும்படியான பொது வழிபாட்டு நிலையங்களாக ஆலயங்கள் எழுந்துள்ளன.

ஆதியில் மகரிஷிகள் மந்திர சக்தியால், எங்கும் நிறைந்த பரம்பொருளைச் சில விக்கிரகங்களில் விசேஷ சாந்நித்தியம் கொள்ளச் செய்தனர். அப்படிப்பட்ட மூர்த்திகளைச் சுற்றிக் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன.

வீட்டில் பூஜை செய்கிறவர் உள்பட அனைவரும் கோயிலுக்குப் போவது என்று கட்டுப்பாடாகப் பழக்கம் வைத்துக் கொண்டால்தான் அங்கு பூஜைகள் குறைவர நடக்கும். நான் கோயிலுக்குப் போகிறேன்

பாட்டு வருகிறது. 'சந்தா மாமா ராவே' என்று தெலுங்கிலேயும் உண்டு! நிலவை அழைப்பதென்பது எல்லா பாஷையிலும் உண்டு. எல்லாருடைய மனசையும் ஆகர்ஷிக்கும்படியான சக்தி சந்திரனுக்கு உண்டு. அவ்வளவு குளிர்ச்சியாக இருக்கிறான் அவன். அதனாலேயே வேதமானது, 'சந்திரனுடைய ஒளிக்கிரணங்கள் நமக்கு போகத்தை உண்டு பண்ணட்டும். தெளிவான ஞானத்தைக் கொடுக்கட்டும்' என்றெல்லாம் சொல்கிறது.

சந்திரனுடைய அனுக்கிரஹம் இல்லையென்றால் ஞானம் ஏற்படாது; சந்திரனுடைய அனுக்கிரஹம் இல்லையென்றால் சித்த பிரமை ஏற்படும்.

சின்ன வயதில் அந்த சந்திரனைப் பார்த்து ஒரு சந்திரன்தான் என்று நாம் தெரிந்து கொள்கிறோம். வயதான பிற்பாடு 90 வயதிலே பார்த்தால் இரண்டு சந்திரன் தெரிகிறது! ஆகாசத்திலே இரண்டு சந்திரன் பிரகாசிக்கிறது என்று சொல்கிறார் பார்ப்பவர்! ஆனால், தெரிவதென்னவோ ஒன்றுதான்! பார்ப்பவர் கண்ணிலே ரோகம்! வயதானதன்னாலே ஒன்றே இரண்டாகத் தெரிகிறது!

'சதுர்த்தி சந்திர சந்திரிகா' என்று நான்காம் பிறைச் சந்திரனைப் பார்க்கக் கூடாது என்பது சாஸ்திரம். மூன்றாம் பிறைச் சந்திரனைப் பார்க்கலாம். அதைப் பார்த்து விட்டால் பின்னர் வரும் நான்காம் பிறையைப் பார்ப்பதில் தவறில்லை.

அந்த மாதிரி ஆயிரம் பிறை கண்டவர்களை நான் வணங்குகிறேன் என்று பகவானே சொல்கிறான்!

பகவான் – வாசுதேவன் – கிருஷ்ணன், ருக்மிணியிடத்திலே சொல்லும்படியான விஷயம் இது.


'சந்திர சஹஸ்ர தரிசி – ஆயிரம் பிறை கண்டவர்களான உயர்ந்த முதியவர்கள் – வயதிலே பெரியவர்கள் – இவர்களை வணங்குகிறேன்' என்கிறான்.

ஆயிரம் பிறை காண்பது என்றால், 85 வயதும் ஆறு மாதமும் 21 நாட்களும் நிரம்பியவர். இவருக்கு சதாபிஷேகம் பண்ணலாம். எண்பது வயதில் பண்ணுவது லோக வழக்கமாக இருக்கிறது.

மூன்றாம் பிறையைக் கட்டாயம் பார்க்க வேண்டும் என்றும் நான்காம் பிறையைப் பார்க்கக் கூடாது என்றும் சாஸ்திரம் சொல்கிறது. எதைப் பார்க்கக் கூடாது என்று சாஸ்திரம் சொல்கிறதோ அது கட்டாயம் கண்ணுக்குத் தெரியும்! அதைப் பார்த்து விட்டு, 'பஞ்சாங்கத்தை எடுத்துக் கொண்டு வா' என்று கேட்க வேண்டிய அவசியமே இல்லை! கண்ணுக்குத் தெரிந்து விட்டால் அது நாலாம் பிறைதான்!

மூன்றாம் பிறை என்பது மிக மெல்லிய கோடு போட்டது மாதிரி இருக்கும். சிரமப்

என்றால் எனக்காகவாவது கோயிலைச் சுத்தமாக வைக்கிறார்கள்; விளக்குகள் போடுகிறார்கள்; நைவேத்தியம் சுத்தமாகச் செய்கிறார்கள்; வஸ்திரம் அழுக்கில்லாமல் கட்டுகிறார்கள்.



சின்னஞ் சிறிய சூட்சுமமான தர்மங்களை எல்லாம் மறந்து விட்டோம். நமக்கு உணவு தருபவனுக்கு நல்லபடி நிவேதனம் நடக்க வேண்டும். நமக்கு உடை தருபவனுக்கு நல்ல வஸ்திரம் இருக்க வேண்டும் என்பதையெல்லாம் கவனிக்கத் தவறுகிறோம். இப்போது ஓர் ஊரில் யார் ரொம்ப அழுக்குத் துணி கட்டிக் கொண்டிருக்கிறார் என்று பார்த்தால் ஸ்வாமிதான் என்று தெரிகிறது. நம் ஊர் கோயிலில் ஸ்வாமியின் வஸ்திரம் சுத்தமாயிருக்கிறதா என்பதில் மனசைச் செலுத்தி விட்டோமானால் நம் மனசின் அழுக்கும் போய்விடும். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று', 'அரனை மறவேல்', 'திருமாலுக்கு அடிமை செய்' என்றெல்லாம் புண்ணிய மொழிகள் வழங்கும் இந்த நாட்டில் ஒவ்வோர் ஊரிலும் உள்ள ஈச்வரன் கோயிலையும், பெருமாள் கோயிலையும் நல்ல நிலையில் வைத்திருந்து வழிபாடு நடக்கச் செய்ய வேண்டும். இது நம் முதல் கடமை.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

பட்டுத்தான் பார்க்க வேண்டும் அதை. சாஸ்திரம் சொல்கிறதையெல்லாம் சுலபமாகச் செய்துவிட முடியுமா? அதனால் மூன்றாம் பிறைச் சந்திரன் அவ்வளவு சுலபமாகக் காணக் கிடைக்காது.

ஆகையினாலேதான் சீதா பிராட்டியை வால்மீகி வர்ணிக்கிறபோது, 'ரொம்ப மெலிந்திருக்கிறாள் அவள் – ராமனைப் பிரிந்த பிரிவாற்றாமையினாலே துவண்டிருக்கிறாள் – மூன்றாம் பிறைச் சந்திரனைப் போல அவ்வளவு மெல்லிய திருமேனியை உடையவளாக இருக்கிறாள்' என்கிறார்.

நான்காம் பிறை நன்கு தெரியும். ஆனால் அதைப் பார்த்தால் அபவாதம் வந்து சேரும். பண்ணாத குற்றம் வந்து சேரும்! பகவான் வாசுதேவன் – கிருஷ்ணன் – நான்காம் பிறையைப் பார்த்து விட்டான்.

அதனால் ஸ்யமந்தக மணியை வாசுதேவன் திருடியதாக அபக்யாதி வந்து விட்டது. அதைப் போக்கிக் கொள்ள, காட்டுக்குப் போய் ஜாம்பவானோடு போராடி அதைக் கொண்டு வந்தான். ஸ்யமந்தக மணியை பகவான் மீட்டு வந்தான்.

ஒருவேளை நாம் நான்காம் பிறையைப் பார்த்து விட்டோமேயானால் அப்போது, அவனை தியானம் பண்ணிக் கொள்ளலாம். பண்ணினால் அந்த தோஷம் போய் விடும். அந்த சரித்திரத்தை, விருத்தாந்தத்தை நினைத்தால் அந்த தோஷம் போய்விடும.

இந்த மாதிரி மூன்றாம் பிறையைப் பார்த்தால் நல்லது என்று சின்ன வயதிலே ஒரு பெண் கேட்டாள். இப்போது அந்தப் பெண்ணுக்கு 90 வயது! அப்படியும் அந்த தர்மத்தை அவள் விடவில்லை.

இப்போது, வயதான பிறகு, ஆகாசத்தில் பார்த்தால் சந்திரன் தெரியவில்லை. பேரக் குழந்தை கோவிந்தனைக் கூப்பிட்டு, "சந்திரன் தெரியலையடா. நீ கொஞ்சம் காட்டேன்" என்கிறாள்.

"அதோ தெரிகிறதே! பாரேன்" என்றான் அவன்.

"தெரியலையே..."

பாட்டிக்குப் பேரனல்லவா! ரொம்ப கெட்டிக்காரன். "கோடி வீட்டு பாதாம் மரம் தெரிகிறதா?" என்றான்.

"தெரிகிறதே... நன்றாகத் தெரிகிறதே!"

"பாதாம் மரத்தினுடைய உச்சிக் கிளை தெரிகிறதா?"

"தெரிகிறது."

"அந்தக் கிளை நுனியிலே ஒட்டிக் கொண்டிருக்கிறதே சந்திரன்."

பார்த்து விட்டாள் பாட்டி! பரம சந்தோஷம்! பேரனைக் கட்டிக்கொண்டு முத்தம் கொடுத்தாள்.

குழந்தை என்ன சொன்னது? 'கிளை நுனியில் சந்திரன். கேட்ட நாமெல்லாம் கொஞ்சம் கவனிக்க வேண்டும். கோடி வீட்டு பாதாம் மரக் கிளையிலே ஒட்டிக் கொண்டிருக்கிற சந்திரனுக்கும் சந்திர லோகத்திலே பிரகாசிக்கிற சந்திரனுக்கும் என்ன சம்பந்தம்?

(தொடரும்)



தேர்தல் '99

திருநெல்வேலியில் மொத்தம் 13 வேட்பாளர்கள் மோதினாலும் மக்களுக்கு நன்றாகத் தெரிவது தி.மு.க. வேட்பாளர் கீதா ஜீவன், அ.தி.மு.க. வேட்பாளர் பி.ஹெச். பாண்டியன், புதிய தமிழகம் வேட்பாளர் பி.வி. பக்தவத்சலம்தான்.


பி.ஹெச். பாண்டியன், கீதா ஜீவன் இருவருமே கிறிஸ்துவ நாடார்கள். தாமரைக்கனி நீக்கப்பட்டதால் நாடார்கள் அ.தி.மு.க.வுக்கு எதிராக இருப்பதாகவே மக்கள் கூறுகிறார்கள். இதனால் கீதா ஜீவனுக்கு வாய்ப்பு கொஞ்சம் அதிகம் என்கிறார்கள்! இத்தொகுதியுள்ள பொன்னாக்குடி சமத்துவபுரம் மக்கள், "வீடு கொடுத்தவருக்கே வோட்டுப் போடுவோம்!'' என்கிறார்கள்.

சென்றமுறை ஏழாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில்தான் தி.மு.க தொகுதியை இழக்க நேரிட்டது. சென்ற முறை 86 ஆயிரம் வாக்குகள் வாங்கிய புதிய தமிழகம் வேட்பாளர் சேவியர் சுரேஷ் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர் என்பதால் கிறிஸ்துவ மக்கள் அதிகமாக வாக்களித்தனர். ஆனால், இந்தமுறை கிருஷ்ணசாமியின் மேல் மக்களுக்கு அதிருப்தி. அதோடு கிறிஸ்துவ வேட்பாளராக அல்லாமல் ரெட்டியார் தேர்தலில் நிற்பதால் கடந்தமுறை வாங்கியதை விட குறைவான வாக்குகளே புதிய தமிழகத்துக்குக் கிடைக்குமாம். புதிய தமிழகம் கட்சியே அ.தி.மு.க.வுக்கு எதிராகத் தொடங்கப்பட்ட கட்சி என்பதால் அ.தி.மு.க. கூட்டணியை மக்கள் ஏற்கத் தயங்குவார்கள். அந்த வோட்டுகள் கீதாஜீவனுக்கு விழும் பட்சத்தில் குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலாவது கீதா ஜீவன் எம்.பி ஆகி விடுவார் என்றே பலரும் சொல்கிறார்கள்.

திருச்செந்தூரில் இழுபறி?

சென்ற முறை ராமராஜனிடம் தோல்வியுற்ற தனுஷ்கோடி ஆதித்தன் இந்த முறை நிச்சயம் முன்னேறுவார் என்றே தெரிகிறது. இப்போதைய அ.தி.மு.க. வேட்பாளர் டாக்டர் பி.பி. ராஜன் பழைய அ.தி.மு.க வேட்பாளர் ராமராஜன் மாதிரி தொகுதிக்குள் வரவே மாட்டார் என்றுதான் கிராம மக்கள் நினைக்கிறார்கள். தளபதி சமுத்திரம், கீழூர், திருவேங்கடநாதபுரம், நாங்குனேரி, களக்காடு ஒன்றியங்களில் பாரதிய ஜனதா கட்சிக்கு நல்ல செல்வாக்கு. எனவே ஏ.டி.கே. ஜெயசீலனுக்கு பாரதிய ஜனதா கட்சியினர் மாய்ந்து மாய்ந்து வேலை பார்க்கிறார்கள். இவர் கல்லூரியின் பிரின்ஸிபால் என்ற இமேஜ் படித்தவர்கள் மத்தியில் நன்றாகப் பயன்படுகிறது. திருச்செந்தூர் தொகுதியில் உள்ள சமாதானபுரம் மக்கள், "தண்ணி கிடைக்காம நாயா அலையுறோம், பம்புசெட்டு போட்டு தந்தாத்தான் வோட்டுப் போடுவோம்!'' என்றும், "வோட்டுப் போட்டு, குடிக்க தண்ணியில்லாம காயுறோம். ஒரு பைப்பு ஊருக்குள்ள இல்ல. குடிக்க தண்ணியில்லாம நாங்க யாருக்கு வோட்டுப் போட?'' என்று முன்னாள் எம்.பி. வராத வேதனையை வயிறெரியச் சொல்வது பி.பி. ராஜனுக்கு பெரிய மைனஸ்.

வள்ளியூர்ப் பகுதிகளில் விசாரித்தபோது உள்ளூர் வேட்பாளரான தனுஷ்கோடி ஆதித்தனுக்குத்தான் எங்கள் வோட்டு என்று அதிக மக்கள் சொல்கிறார்கள். "மதவாத எதிர்ப்பு, ஊழல் இரண்டையும் எதிர்க்கும் மூப்பனார் கூட்டணிக்கு வோட்டளிப்பதை விரும்புகிறோம்!'' என்கிறார்கள் வள்ளியூர் வியாபாரிகள். மூப்பனார் புதிய தமிழகத்




• பி.ஹெச். பாண்டியன்

நெருக்கிப்பிடியில் பி.ஹெச்.பாண்டியன்

தோடு கூட்டணி வைத்துள்ளாரே?'' என்று நாம் கேட்டதற்கு, "ஜெயலலிதா மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தோட கூட்டணி வச்சிருக்கறதை எதோட சேர்ப்பீங்க?'' என்கிறார்கள்.

"போன முறை ராமராஜனுக்கு போட்டோம். அவரைப் பார்க்கவே முடியலை. அதனால இந்தமுறை அடிக்கடி பார்க்க முடிகிற வேட்பாளரான தனுஷ்கோடி ஆதித்தனுக்கே போடுவோம்!'' என்று சாத்தான்குளம் கிராம மக்கள் ஒட்டு மொத்தக் குரலில் சொல்கிறார்கள். கோமனேரி, கருங்கடல் மக்களும் தனுஷ்கோடி ஆதித்தனுக்கே ஆதரவு என்கிறார்கள்.


* வைகோ


* தனுஷ்கோடி ஆதித்தன்

தனுஷ்கோடி ஆதித்தன் கிறிஸ்துவராக இருப்பதால் சிறுபான்மை மக்களுக்கு அதிக பாதுகாப்பு கிடைக்கும் என்று மக்கள் பொதுவாக எண்ணுவதும், வாஜ்பாய் நல்லாட்சி செய்வார் என்ற நம்பிக்கையும் திருச்செந்தூர் தொகுதியில் அதிகம் நிலவுவதால் வெற்றிக் கனி தி.மு.க வேட்பாளரான ஏ.டி.கே. ஜெயசீலனுக்கா? தனுஷ்கோடி ஆதித்தனுக்கா? என்கிற இழுபறியில் இருக்கிறது. இதில் டாக்டர் பி.பி. ராஜனுக்கு வாய்ப்பே இல்லை என்பதுதான் இப்போதைய நிலவரம்.

சிவகாசி வைகோவுக்கே!

தேசிய லிங்க் ரோடு, செண்பகத் தோப்பு வழியே கண்மாய் இணைப்புத் திட்டம், ரயில்வே பாலம் அமைக்கும் திட்டம் போன்ற திட்டங்களுக்கு மத்திய அரசின் உதவி வேண்டும் என்பதால் வைகோவைத் தான் தேர்ந்தெடுப்பார்கள் சிவகாசித் தொகுதி மக்கள், நீதிபதி ராமசாமியையோ, தாமரைக்கனியையோ தேர்ந்தெடுத்தால் அடாவடிகளைத் தாங்க வேண்டும். தாமரைக்கனி கட்சியையும் மீறி நலத் திட்டங்கள் செய்து கொடுப்பார். ஆனாலும் எம்.எல்.ஏ.வாகச் செயல்படத்தான் அவரால முடியும். ஸ்ரீவில்லிபுத்தூர் எம்.எல்.ஏ எலெக்ஷன் என்றால் அவருக்குப் போடுவதில் ஆட்சேபணை இல்லை. இது எம்.பி. எலக்ஷன். எனவே வைகோவுக்குத்தான் எங்கள் வோட்டு!'' என்கிறார்கள் ஸ்ரீவில்லிப்புத்தூரிலுள்ள தாமரைக்கனி ஆதரவாளர்கள்.

அதையும் மீறி தாமரைக்கனிக்கு விழும் வோட்டுகள் நீதிபதி ராமசாமிக்குத்தான் பிரச்னையாம்! சாத்தூர் பகுதியில் அ.தி.மு.க. தொண்டர்கள் தங்கள் கைக்காசைச் செலவழித்து கட்சிக்கு உழைக்கிறார்கள். கொடி, போஸ்டர் போன்றவைகூட தொண்டர்களுக்குத் தரப்படாததால் கோபத்தில் இருக்கும் அந்த அ.தி.மு.க.வினர் தாமரைக்கனிக்கே வாக்களிக்கப் போவதாகச் சொல்கிறார்கள்.


* நீதிபதி ராமசாமி


* தாமரைக்கனி

தாமரைக்கனி, அ.தி.மு.க.வுக்கு எதிராக வோட்டுக்களைப் பிரிப்பதும், சாத்தூர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தீவிரமாக வைகோவுக்காகத் தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருப்பதும் வைகோவை வெற்றி முனைக்கு இழுத்துச் செல்கிறது.

நாடார் சமூகத்தினர் அ.தி.மு.க மேல் கோபமாக இருப்பதால், அவர்களுடைய வாக்குகள் த.மா.கா வேட்பாளர் குணசேகரனுக்குக் கிடைக்கலாம். இது எந்த விதத்திலும் வைகோவின் வெற்றிக்கு தடையாக இருக்காது என்றும் சொல்கிறார்கள்.

'தொகுதி முழுக்க தண்ணீர் பிரச்னை இருந்தாலும் அதை வைகோ தீர்த்து விடுவார் என்ற நம்பிக்கை சிவகாசி மக்களிடம் பரவலாக உள்ளது.

— பழ. சேதுராமன்



"கைப்பிடி மண்ணையும் கவர விடோம்"
என காட்டியதே கார்கில் யுத்தம்.
பகைவர் கண்டனர் தோல்வியின் முகம்.
பாரதம் கண்டதோ மனிதருள் "இமயம்".

எடுத்த பணிகளில் வெற்றி அடைய
அடுத்த நூற்றாண்டில் என்றென்றும் வளம்காண


வாஜ்பாய்

தலைமையில் நிலையான
நல்லாட்சி அமைய
தாமரைக்கு வாக்களிப்போம்

ஆதரிப்பீர் தேசிய ஜனநாயக கூட்டணி

தாயகம் காத்திட தாமரைக்கு வாக்களியுங்கள்

வெளியீடு : "கமலாலயம்", பாரதீய ஜனதா கட்சி, தி. நகர், சென்னை - 17.



வெளியீடு : "கமலாலயம்" பாரதீய ஜனதா கட்சி, தி.நகர், சென்னை-17.

மணமகள் அவசரத் தேவை 4

'கண்ணோடு காண்பதெல்லாம் தலைவா...
கண்களுக்குச் சொந்தமில்லை...'

மண்டப ஸ்பீக்கர் அலறியது.

எனக்குள் இதயத் துடிப்பு ஒரு வினாடி நின்று இயங்கியது. குளிர் ஜுரம் வந்தவன் போல நின்ற நிலையில் உதறிக் கொண்டிருந்தேன்.

சங்கரனின் முகம் நிமிர்ந்து பார்க்கக் கூசினேன். அப்பட்டமான பொய்கள். 'குரல் கேட்டுதே... யாரும் இல்லியா?'

அடுத்து நிகழ்ந்தவை என்னைத் திகைப்பின் உச்சத்தில் கொண்டு சென்றன.

சங்கரன் அவசரமாய்க் கதவை மூடி உட்புறம் தாளிட்டான். ஜன்னலையும் மூடினான்.

இது நான் செய்ய வேண்டியவை அல்லவா? இவன் ஏன் செய்கிறான்?

"மெதுவாப் பேசு" என்றான் கிசுகிசுப்பாய்.

"சங்கரா" என்றேன் குழப்பமாய்.

"பாவம். அவருக்கு எதுவும் தெரியாது" என்றாள் என்னைக் காட்டி.

"நீ சொல்லலியா..." என்றான்.

"ம்ஹூம். எங்கே பேச விட்டார். எப்ப கதவைத் திறந்தாலும் மூடு.. ஒளிஞ்சுக்கோதான்" என்றாள் கேலியாக.

"பாதி சக்சஸ்" என்றான் சங்கரன்.

"அவரைப் பார்த்திங்களா?"

"சொல்றேன். அதுக்கு முன்னால சிவாகிட்டே பேசிருவோம்."

என் பக்கம் திரும்பினான்.

"ஸாரிடா. இவ இங்கே ஒளிஞ்சிருக்கிறது எனக்குத் தெரியும். அதனாலதான் சாப்பாடு, டிபன் கூடவே வச்சு அனுப்பினேன்."

எனக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. எத்தனை சுலபமாய் முட்டாள் பட்டம் கட்டி விட்டார்கள்.

"நானும் ஸாரி" என்றான்.

நான் பேசவில்லை. என்னிடம் ஏன் மறைத்தார்கள்?

சங்கரன் சொன்னான்.

"நடந்ததை முழுசா சொல்லிடறேன். அப்பத்தான் உனக்கு எல்லாமே புரியும். நேத்து காலைல இவங்க வந்து இறங்கினதும் சாப்பாடு பத்தி டிஸ்கஸ் பண்ண நான் போனேன்."

வசந்தி தொடர்ந்தாள் :

"என்னையே முறைச்சுப் பார்த்தார். மணமகள் முகத்துல வழக்கமா இருக்க வேண்டிய உற்சாகமோ... துள்ளலோ இல்லையே. ஏன், அழுத மாதிரி



ரிஷபன்

இருக்கான்னு யோசிச்சாராம்."


சங்கரன் சிரித்தான்.

"என்னோட கணிப்பு தப்பாகலே. அப்புறம் ரெண்டு, மூணு தடவை முயற்சி பண்ணி.. கடைசியா... இவ சாப்பிட வந்தப்ப... புடிச்சுட்டேன். நானே பரிமாறினேன். சாப்பாடு விசாரிக்கிற மாதிரி ரகசியமா கேட்டேன்."

"இவர் மேல் என்னவோ ஒரு நம்பிக்கை. எனக்கு ஹெல்ப் பண்ணுவார்னு. தந்தி ஸ்பீடுல என்னோட பிரச்னையை சொன்னேன். இந்தக் கல்யாணத்துல எனக்கு இஷ்டமில்லே. என்னால தவிர்க்க முடியலேன்னா சாகறதைத் தவிர வேற வழியில்லேன்னு" என்றாள்.

"பிடிவாதக்காரின்னு புரிஞ்சுது. சிவா, என்னோட மனசு உனக்குத் தெரியும். நான் உயிருக்கு உயிரா சித்ராவைக் காதலிச்சது. அப்புறம் எங்க காதல் தோற்றுப் போனது. நீயே சொல்லு சிவா. என் கண்ணெதிரே இன்னொரு காதல் தோல்வியைப் பார்க்க என்னால எப்படி முடியும்? எப்படியாவது ஹெல்ப் பண்ணணும்னு நினைச்சேன்."

சங்கரன் உணர்ச்சிமயமாய்த் தெரிந்தான்.



வசந்தி அவனைப் பார்த்த பார்வையில், ஆழ்ந்த நன்றி தெரிந்தது.

''அப்பத்தான்... உன்னோட உதவியை பயன்படுத்திக்கத் தோணிச்சு. மண்டபத்துக்கு பக்கத்துல இத்தனை வசதியா.. மறைஞ்சுக்க ஒரு இடம் இருக்கும்னு யாருக்கும் தோணாது. யாரும் இங்கே தேட மாட்டாங்கன்னு யூகம் பண்ணேன். அதே மாதிரி அவங்க இவளைத் தேட, வெளியே ஆளை அனுப்பினாங்களே தவிர, இங்கே கவனிக்கவே இல்லே.''

இப்போது பேச வேண்டியது என் முறை.

"வெளியே இவளைத் தேடிக்கிட்டுப் போயிருக்காங்களா?"

"ம். ஆனா எப்படி கண்டுபிடிக்க முடியும்? அதான் இங்க இருக்காளே!"

க்விஸ் போட்டி – 2 முடிவு!

வாசகர்களுக்கான க்விஸ் போட்டி – 2ன் சரியான விடைகள்:

1. தாகூர் 2) ஒரிஸா 3) பகத்சிங் 4) குஜராத்தி 5) நேரு 6) வங்காளம் 7) நாமக்கல் கவிஞர் 8)டி.கே.சண்முகம்

சரியான விடைகளை எட்டுப் பேர் எழுதியிருந்தார்கள். குலுக்கலில் வென்று ரூ.200 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

டி.விநாயகம்,

131/C, வித்யோதயா,

முதல் 'N'பிளாக், 4-வது குறுக்குத் தெரு, ராஜாஜி நகர், பெங்களூர்-16.

"உளறாதே. இன்னமும் ஆபத்து நீங்கலே. இவளை எப்படி வெளியே கொண்டு போறது?" என்றேன் எரிச்சலாக.

"அதுக்குத்தான் நான் போனது. இவ காதலனைத் தேடிப் போனேன். செஸ் தெரியுமா... சிவா? சரியா காயினை மூவ் பண்ணலேன்னா ஒண்ணு வெட்டுப்படுவோம். இல்லே... செக் ஆயிருவோம். இது காதல் சதுரங்கம்."

சங்கரன் உற்சாகமாய்ச் சிரித்தான்.

"கணேஷைப் பார்த்தேன் வசந்தி. அவன் உன்னை விட படபடப்பா இருக்கான். என்னை வெட்டிப் போட்டாலும் சரி, மண்டப வாசல்ல வந்து கலாட்டா பண்றேன்னு துடிச்சான். நான்தான் அவனை கண்ட்ரோல் பண்ணி வச்சேன்."

காதலன் பெயரைக் கேட்டதும் வசந்தியின் முகம் பிரகாசித்தது.

"சிவா, இனிமேல் என்ன ரகசியம். இவ இங்கே இருக்கிறது எனக்கும் தெரியும். இப்பத்தான் உன்னோட ஒத்துழைப்பு கூடுதலா தேவை" என்றான் சங்கரன்.

நான் பேசாமல் நின்றேன். என்னதான் இருந்தாலும் எனக்கு ஏமாளிப் பட்டம் தானே?

சங்கர் என் உணர்வுகளைப் படித்திருக்க வேண்டும்.

"உனக்குக் கோபம் வரும் சிவா. அது நியாயம்தான். ஒண்ணு சொல்றேன். நாம எல்லோருமே எப்பவாவது ஒரு தடவை நம்ம லைஃப்ல காதலை ஃபீல் பண்றோம். மனசளவுல காதலை ஆதரிக்கிறோம். நம்மை யாராச்சும் லவ் பண்ண மாட்டாங்களான்னு ஏங்கறோம். உன்னால இல்லேன்னு மறுக்க முடியுமா சிவா?" என்றான் சுட்டு விரலை நீட்டி.

"எப்படி முடியும்?"

"அதனால்தான் சிவா, உன் மனசுலயும் காதலுக்கு ஆதரவு இருக்கும்னு நம்பினேன். விஷயம் வெளிப்படும்போது நீ மனப்பூர்வமா இதை ஏத்துப்பேன்னு நினைச்சேன். முழுசா ஆரம்பத்துலயே சொல்ல அவகாசமும் இல்லே. சூழ்நிலையும் ஒத்து வரலே."

தேர்ந்த இயக்குநர் போல காட்சிகளை நடத்தியவனாய்த் தெரிந்தான்.

"எனக்குக் கொஞ்சம் த்ரில். கொஞ்சம் சஸ்பென்ஸ் பிடிக்கும் சிவா. உனக்குக் காப்பி சர்ப்ரைசா அனுப்பினேனே... கூடவே அடுத்த சர்ப்ரைசா இவளையும் அனுப்பினேன்" என்று சிரித்தான்.

''ஜானவாசக் காரோட எல்லாரும் போயாச்சு. நாலஞ்சு லேடீஸ்தான் என் கூட. பாத்ரூம் போறேன்னு தப்பிச்சு வந்தேன். என்னோட அதிர்ஷ்டம் யாரும் கவனிக்கலே. இவர் ஸ்டூலை வச்சிண்டு காத்திருந்தார்."

''இப்ப நினைச்சா ஜோக்கா இருக்கு சிவா. அந்த நிமிஷம் யாராவது கவனிச்சிருந்தா..."

என்னால் நம்ப முடியவில்லை. பெண்ணுக்கு விருப்பம் இல்லை என்று தெரிந்தும் இத்தனை அலட்சியமாகவா விட்டுப் போவார்கள்?

"சிவா, கணேஷ்கிட்டே பேசிட்டேன். இன்னைக்கு நைட் வேனோட இங்கே வருவான். இவளை எப்படியாவது அதுல ஏத்தி விட்டுரணும். வசந்தி... இந்தா நீ கேட்ட கரிதார். எத்தனை நேரம் பட்டுப் புடை

வையில இருப்பே?''

பொட்டலத்தை நீட்டினான்.

''கசகசன்னு ஆயிருச்சு. குளிக்கனும். ரூம்ல வேர்த்துக் கொட்டிருச்சு'' என்றாள்.

''சிவா – இவளை உன்னோட ரிலேட்டிவ்னு சொல்லிக்க முடியுமா? வசந்தி... நீ டிரஸ் சேஞ்ஜ் பண்ணிக்க. ரெட்டை ஜடையா போட்டுக்க. ஏமாத்த முடியுமான்னு பார்க்கலாம்.''

''என்ன உளர்றே? அவங்க கண்ணுல இவ பட்டுட்டா...''

''யார் இருக்கா? மேக்சிமம் கிளம்பிப் போயாச்சு. வழியனுப்பிட்டுத்தான் வரேன்.''

ஆச்சர்யமாய்ப் பார்த்தேன்.

''நிஜம்தான். கல்யாணம் முடிஞ்சு சாப்பாடு ஆனதும் கிளம்பிப் போயிட்டாங்க. அவங்க குலதெய்வம் கோவிலுக்குப் போகணுமாம். மண்டபத்துல இவ சொந்தக்காரங்க யாரும் இல்லே...''

வசந்தி சுரிதாரில், ரெட்டை ஜடையில் சற்று வித்தியாசப்பட்டுத் தெரிந்தாள். தூரப் பார்வையில் ஆறு வித்தியாசங்கள்.

''போம்மா. சிவா, நீயும் கூடப் போ. பாத்ரூம்ல விட்டுட்டு வந்திரு.''

இரவு எட்டரை மணிக்கு வேன் வந்தது.

கணேஷ் முரட்டு மீசையுடன், வசந்தியின் மீது ஏகக் காதலுடன் வந்தான்.

''வசந்தி..''

''கணேஷ்...''

நானும் சங்கரனும் நாசூக்காய்ப் பார்வை விலக்கிக் கொண்டோம்.

''கிளம்பிரலாம். கணேஷ் இனிமேல் வசந்தி உங்க பொறுப்பு. உங்கப்பா... அம்மா முழு மனசா இவளை மருமகளா ஏத்துக்கிறதா சொன்னதாலதான் இந்தத் திருட்டுத்தனத்துக்கு நான் சம்மதிச்சேன்'' என்றான் சங்கரன்.

''நிச்சயமா...'' கணேஷ் சங்கரனின் கைகளைப் பற்றிக் குலுக்கினான்.

''இவரை மறந்துடாதீங்க''

சங்கரன் என்னைக் காட்டினான்.

''சிவா... ரொம்ப... ரொம்ப தேங்க்ஸ்!''

கணேஷுடன் வசந்தியும் சேர்ந்து என் கைகளைப் பற்றிக் கொண்டாள். கடைசி ஸ்பரிசம்.

''கிளம்புங்க.''

வேனை சமீபித்தோம்.

மண்டப வாசலில் அமைத்த பந்தல் மறைக்க, எங்கள் வீட்டு வாசலில் இருட்டு கவிழ்ந்திருந்தது.

வேனுக்குள் ஏற முயன்ற போது வசந்தியை யாரோ ஓடி வந்து பிடித்துக் கொண்டார்.

''யா... யாரு?''

நாங்கள் திடுக்கிட்டு முகம் பார்த்தோம்.

''அ...ண்ணா...''

வசந்தி கூவினாள்.

''உங்க அண்ணனா?''

எங்கள் பங்கிற்கு திகைத்தோம். கணேஷ் தடுமாறி நின்றான்.

''என்னம்மா... என்னையும் உதறிட்டுப் போறியா?''



''ஊழல் வழக்குகளோ கிரிமினல் வழக்குகளோ இல்லாத நான் எதற்குத் தேர்தலில் நிற்க வேண்டும் என்று கேட்கிறீர்கள். நியாயமான கேள்வி! அடுத்த தேர்தலில் நீங்கள் இதைப் போன்ற கேள்விகள் கேட்க முடியாதபடி நடந்து கொள்கிறேன்!''

– சீர்காழி வி. ரேவதி

''அ...ண்ணா''

''கணேஷ்... இவளை நல்லா வச்சுப்பீங்கன்னு நம்பறேன். அதனாலதான் எங்க பெற்றோர் விருப்பத்தையும் மீறி இங்கே காத்திருந்தேன்.''

நான் சங்கரனைப் பார்த்தேன்.

அவன் விரும்பும் த்ரில்... சஸ்பென்ஸ்.

''நல்லா இருங்க.''

இருவரின் கைகளையும் சேர்த்து வாழ்த்தினார்.

சப்தமின்றி தானும் இவர்கள் காதலுக்கு வெற்றி பெற உதவியிருக்கிறார் என்பது புரிய நெகிழ்ச்சியுடன் பார்த்தேன்.

வேன் கிளம்பிப் போனது.

(முற்றும்)



Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1900/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 950/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered
No. TN / MS (S) M4392 /99* Licensed to post without prepayment under PMG's Licence
No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

